10TH JANUARY 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 96 | பக்கங்கள் - 18 | editor.uthayam@gmail.com


## டக்ளஸுக்கு பிணை



விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அவர் கம்பஹா நீதவான் நீதிமன்றில் நேற்று

02ம் பக்கம்பார்க்க...

# இஸ்ரேலுடன் விரைவில் இறுதிக் கட்டப் போர் அது மிகக் கடுமையானதாக இருக்கும்

### ஆயதுல்லாஹ் கொமைனி எச்சரிக்கை

# அமெரிக்க பொருளாதாரத்தை சரிக்கட்ட நாடுகளைக் கைப்பற்றும் அமெரிக்கா

### எர்துகான் குற்றச்சாட்டு



(எம்.என். முஹம்மட்)

வெனிசுவெலாவின் அதிபர் அவர்களை அமெரிக்கா கடத்தியதன் பின்பு உலக நிலைமைகள் மிகவும் தலைகீழாக மாறி உள்ளன. சற்றும் எதிர்பாராத அமெரிக்காவின் இந்த நகரவு பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தி இருந்தாலும் இதற்கு பின்னால் இருக்கின்ற மிகப்பெரிய விடயம் 35 ட்ரில்லியன் அமெரிக்க டாலர்களை விட அதிகமான கடன் சுமையை கொண்ட அமெரிக்காவின் பொருளாதாரத்தை காப்பதற்கான இறுதியானதொரு முயற்சியாகவே இந்த நிகழ்வு பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவுக்கு வெனிசுவெலா மாத்திரம் போதாது. தற்போதைக்கு

02ம் பக்கம்பார்க்க...

## கரீபியன் கடலில் ஐந்தாவது எண்ணெய்க் கப்பலை கைப்பற்றிய அமெரிக்கா

கரீபியன் கடலில் மீண்டும் ஒரு எண்ணெய் கப்பலை, அமெரிக்கா கைப்பற்றியுள்ளது. இது கடந்த சில வாரங்களிலான ஐந்தாவது கப்பல் கைப்பற்றல் நடவடிக்கை என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ராணுவம் ஒலினா எனப்படும் எண்ணெய் கப்பலை எவ்வித

02ம் பக்கம்பார்க்க...

## ரஷ்யா சீனாவுக்கு முன் கிரீன்லாந்தை நாம் சொந்தமாக்குவோம்

### டிரம்ப் அதிரடிக் கருத்து

ரஷ்யாவும், சீனாவும் கிரீன்லாந்தை கைப்பற்றுவதற்கு

02ம் பக்கம்பார்க்க...

## இலங்கையின் வீதி மறுசீரமைப்புக்கு மேலதிக 6 மில். டொலர் நிதி வழங்கும் சவூதி



டிட்வா புயலால் சேதமடைந்த வீதிகளை மறுசீரமைப்பதற்காக சவுதி மேம்பாட்டு நிதியத்திலிருந்து இலங்கை மேலதிகமாக 06 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கவுள்ளதாக

02ம் பக்கம்பார்க்க...

## புதிய கல்விச் சீர்திருத்தத்தை தடையின்றி முன்னெடுப்போம்

### சவால்களையும் வெற்றி கொள்வோம்; ராஜாங்கனை கூட்டத்தில் ஜனாதிபதி உறுதி



பெற்றோருக்கு சுமையையும் பிள்ளைகளுக்கு துயரத்தையும் கொடுக்காத ஒரு கல்வி முறையை நாட்டில்

02ம் பக்கம்பார்க்க...

## பிரதமருக்கு எதிராக கீழ்த்தரமான சேறு பூசல்

### கட்சிக்குள்ளும் சதி; ஆதங்கப்படும் சாணக்கியன் எம்.பி.!



பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக அவரின் தனிப்பட்ட விடயங்களை வைத்து முன்னெடுக்கப்படும் கீழ்த்தரமான சேறுபூசல் நடவடிக்கைகளை இலங்கை தமிழரசு கட்சி

02ம் பக்கம்பார்க்க...

## அனர்த்த முகாமைத்துவத்துக்கென புதிய திட்டத்தை வகுங்கள்

### சஜித் பிரேமதாச வலியுறுத்து



காலநிலை மாற்றங்கள் நிகழும் போது அனர்த்த முகாமைத்துவ வழிமுறை முழுமையாக மாற வேண்டும். அனர்த்த முகாமைத்துவத் துறைக்கென பிரத்தியேகமான அமைச்சொன்றை ஸ்தாபித்து, புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகம், தேசிய கட்டிட ஆராய்ச்சி

02ம் பக்கம்பார்க்க...

## ஜோன்ஸ்டன் உள்ளிட்ட ஐவருக்கு விளக்கமறியல் நீடிப்பு



முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும்

02ம் பக்கம்பார்க்க...

## ஸொஹறா புகாரியின் பதவி இரத்து;

### மு.கா. அதிரடி



கட்சியின் ஒழுக்க விதிமுறைகளை கடுமையாக மீறியதன் காரணமாக கொழும்பு மாநகர சபை உறுப்பினரான ஸோஹறா புஹாரி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பதவி உடனடியாக இரத்து செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச்செயலாளர் எம். நிசாம்

02ம் பக்கம்பார்க்க...





உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும்

இது உங்கள் வங்கி Amãna Bank

## அனர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவகம், வளிமண்டயலவியல் திணைக்களம் போலவே தேவையான புதிய நிறுவனங்களையும் ஸ்தாபித்து இவற்றை இந்த அமைச்சின் கீழ் கொண்டு வந்து, இதனைப் பலப்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று (09) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவ்வாறே, புதிய இடர் முகாமைத்துவச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். சுமார் 35,000 வேலையில்லாப் பட்டதாரிகள் காணப்படுகின்றனர், இவர்களுக்கு இந்தத் துறைகளில் முறையான பயிற்சிகளை வழங்கி, இந்தியாவைப் போல அவசரகால படையணியை ஸ்தாபிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

2000 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் மொனாச் பல்கலைக்கழகம், 9 நாடுகளில் 217 சூறாவளிகள் தொடர்பில் மேற்கோண்ட ஆய்வின் பிரகாரம், சுமார் 150 இலட்சம் இறப்புகள் இடம்பெற்றுள்ளன. சூறாவளிகளுக்குப் பிந்தைய காலத்தில் ஏற்படும் இறப்புகள், சூறாவளிகளால் ஏற்படும் இறப்புகளை விட அதிகம் என்று தெரியவந்துள்ளதால், புதிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தை வகுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## ஸொஹறா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரியப்பர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொழும்பு மாநகர சபையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டத்துக்கு, எதிர்க்கட்சியாக உள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெளிவாக எதிர்ப்பு தெரிவிக்க முடிவு செய்திருந்த நிலையில், அதனை மீறி ஸோஹறா புஹாரி அந்த வரவு – செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தமை, கட்சியின் ஒழுக்க விதிகளுக்கு முரணானதாகும்.

இதனையடுத்து, கடந்த 2025 டிசம்பர் 31ஆம் திகதி, கட்சி ஒழுக்கத்தை கடுமையாக மீறியதாகக் குறிப்பிட்டு, அவரின் கட்சி உறுப்பினர் பதவி தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டதுடன் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஒரு வாரத்திற்குள் சத்தியகடதாசி வாக்குமூலமாக விளக்கம் அளிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் எவ்வித விளக்கமும் அல்லது சத்தியக்கடதாசியும் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக, குற்றச்சாட்டுகளை அவர் மறைமுகமாக ஏற்றுக்கொண்டதாகக் கருதி, கட்சி ஒழுக்க நடைமுறைகளின்படி, அவரின் கட்சி உறுப்பினர் பதவியை முழுமையாக இரத்து செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மானம், கட்சி தலைவர் ரவூப் ஹக்கீமின் உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்டதுடன் இது இறுதியானதும் மாற்றமற்றதுமான தீர்மானமாகும் எனவும் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் சவுதி மேம்பாட்டு நிதியத்தின் மூத்த அதிகாரிகள் இடையே கலந்துரையாடல் இடம்பெற்றது.

சவுதி பிரதிநிதிகள் குழுவில் மூத்த நிபுணர் முகமது அல்-மசூத், மூத்த கடன் நிபுணர் அப்துல்ரஹ்மான் எம். அல்-சோகெய்ர் மற்றும் திட்ட ஆய்வாளர் பைசல் அல்-முலித் ஆகியோர் அடங்குவர்.

அமைச்சின் செயலாளர் டொக்டர் கபில பெரேராவும் இந்த கலந்துரையாடல்களில் கலந்து கொண்டனர்.

சந்திப்பின் போது, இலங்கையின் தற்போதைய வளர்ச்சிப் பாதை, டிட்வா புயலின் தாக்கம் மற்றும் பேரழிவை எதிர்கொள்ள அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் குறித்து சவுதி அதிகாரிகளுக்கு அமைச்சர் விளக்கினார்.

நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் அண்மைய பொருளாதார முன்னேற்றம் குறித்தும் இதன்போது விவாதிக்கப்பட்டது.

சவுதி மேம்பாட்டு நிதியம் ஏற்கனவே இலங்கை முழுவதும் வளர்ச்சித் திட்டங்களில் சுமார் 60 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலதிகமாக டிட்வா புயலால் சேதமடைந்த வீதி உட்கட்டமைப்பை பழுதுபார்ப்பதற்கும் மறுசீரமைப்பதற்கும் குறிப்பாக 06 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க ஒப்புக்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பின் வளர்ச்சிக்கு தொடர்ந்து ஆதரவளிக்கவும் சவுதி பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்ததாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

திட்ட செயல்படுத்தல் மற்றும் காலக்கெடு குறித்த மேலதிக விபரங்கள் உரிய நேரத்தில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## டக்ளஸ்க்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(9) முன்னிலைப்படுத்தப்பட்ட போதே, நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

எவ்வாறாயினும் அவர் வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு அவரது தனிப்பட்ட பாவனைக்காக இராணுவத்தினால் வழங்கப்பட்ட துப்பாக்கி ஒன்று, 2019ஆம் ஆண்டு திட்டமிட்ட குற்றவாளியான மாகந்துர மதூஷிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கண்டெடுக்கப்பட்டது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய விசாரணைகளுக்காக அவர் கடந்த மாதம் 26ஆம் திகதி குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கரீபியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவங்களும் இன்றி கைப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க கடற்படை மற்றும் உள்துறை பாதுகாப்புப் படை என்பனவற்றின் இணைந்தகுழு இந்நடவடிக்கையை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா, சீனா போன்ற நாடுகளுடன் கப்பல் கிழக்கு திமோர் கொடிக்கீழ் பயணித்தாலும், அது அமெரிக்கா விதிக்கப்பட்ட தடைப்படுத்தப்பட்ட எண்ணெய் மூலம் சார்ந்ததாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா இவ்வாறு கடலில் பயணிக்கும் எண்ணெய் கப்பல்களை கைப்பற்றுவது பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

பல்வேறு தரப்பினர் அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகள் குறித்து கடும் விமர்சனங்களை வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்கா இவ்வாறு எண்ணெய் கப்பல்களை கைப்பற்றுவதனால் ரஷ்யா, சீனா போன்ற நாடுகளுடன் கடும் முரண்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள நேரிடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## ஜோன்ஸ்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது இரண்டு மகன்கள் உட்பட 05 சந்தேகநபர்களை எதிர்வரும் ஜனவரி 23ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு வத்தளை நீதவான் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நேற்று (9) நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே, இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## இஸ்ரேலுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவின் பொருளாதாரத்தை காப்பாற்ற வேண்டுமாக இருந்தால் ஈரான், மற்றும் கிரீன்லாந்து உட்பட பல நாடுகளை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாக வேண்டும். தற்போதைய உலக சூழ்நிலைகள் அமெரிக்கா தனது ஆதிக்கத்தை இழந்து வருகின்றது என்பதை துருக்கிய அதிபரும் மிகத் தெளிவாக குறிப்பிட்டிருக்கின்றார். அது மாத்திரமன்றி ஒவ்வொரு மேலைத்தேய நாடும் தன்னுடைய நிலைமையை இழந்து வருவதாகவும் மேலைத்தேய நாகரிகம் அதனுடைய இறுதி கட்டத்தை அடைந்திருப்பதாகவும் துருக்கிய அதிபர் ரெசப் தையூப் எரடோகான் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஈரானின் பதற்றம் பெருமளவில் அதிகரித்துள்ளது. ஈரானுடைய ஆன்மீக தலைவர் ஆயதுல்லா அலி கொமைனி நேற்று இரவு மிகவும் உருக்கமான உரையாற்றி இஸ்லாமிய புரட்சி காப்பாற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தை பற்றி பேசியுள்ளார். பல நேர்மையான மனிதர்களால் உருவாக்கப்பட்ட இஸ்லாமிய சிந்தனையை, புரட்சியை அழிய விட மாட்டோம் என மிகத் தெளிவாக குறிப்பிட்டிருக்கின்றார். இதேவேளை ஈரானின் தலைநகர் தெஹரான் உட்பட பல இடங்களில் அமெரிக்க யூத கூலிகளால் வழி நடத்தப்படுவதாக நம்பப்படும் பலர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை சார்பளவில் குறைவாக இருந்தாலும் மேலைத்தேய நாடுகள் அதை ஒரு பெரிய பூதாகரமாக காட்டி உலக மக்களை திசை திருப்ப முயற்சிப்பதும் குறிப்பிடத்தக்கது. இதே வேளை ஆர்ப்பாட்டங்கள் நடந்த போது ஈரானிய மக்கள் அரசுக்கும் ஆன்மீக தலைவருக்கும் சார்பாக பாதையில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்து ஆர்ப்பாட்டக்காரர்களை பின்வாங்க செய்ததன் பின்பே தெஹரான் நேற்று இரவு வழமைக்கு திரும்பியது.

இந்நிலை மிகவும் ஒரு ஆபத்தான நிலைமையாக காணப்படுகிறது. ஈரானில் உள்நாட்டு ஸ்திரத்தன்மையை குறைத்து திடீரென எரிஞ்சியுல்லா பாணியிலான தாக்குதலை நடாத்தி ஈரானுடைய முக்கிய இராணுவ தளபதிகள் மற்றும் ஆன்மீக தலைவர்களை கொலை செய்து அல்லது கடத்தி ஒரு நாடகமாடுவதற்கு அமெரிக்கா திட்டமிடுவதாக ஈரான் உறுதியாக நம்புகிறது.


ஈரானுடைய ஆன்மீக தலைவர் ஆயத்துல்லா அல் கொமைனி யினுடைய ஆலோசகர் சற்று முன் வெளியிட்டுள்ள அறிக்கையில் நாங்கள் யாருடனும் யுத்த நிறுத்தத்தில் இல்லை நாங்கள் தெளிவானதொரு போரில் இருக்கின்றோம் எங்களுக்கு அந்தப் போரின் இலக்குகள் தெரியும் நாங்கள் இஸ்ரேலுடன் இறுதி கட்டப் போரை ஆரம்பிக்க இருக்கின்றோம் அந்தப் போர் மிகவும் ஒரு பயங்கரமானதாக இருக்கும் நாங்கள் அந்தப் போரில் வெற்றி பெறுவோம் என மிகத் தெளிவாக குறிப்பிட்டு இருப்பதோடு, நாங்கள் இறுதி போராட்டத்திற்கு ஆயத்தமாக இருக்கின்றோம் என்று சற்று முன் வெளியிட்ட அறிக்கையில் அவர் குறிப்பிட்டு இருக்கின்றார்.



# ஐ.கிங் ணைமுளைபெ ஆண்கள் ஆடைகள் பிரமாண்டமான விழாவுடன் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தை அறிமுகம்

















(அஷ்ரப் ஏ சமத்)

ஜனவரி 07.2026 iKING ஆண்கள் ஆடை நிறுவனம் website, www.ikingclothing.com, என்ற தனது வலைத்தளத்தை அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தியது பெருமையுடன் அறிவித்துள்ளது. நீங்கள் வலைத்தளத்திற்கு சென்று உலகில் அல்லது உள்ளூரில் ஆண்கள் ஆடைகள் ஆன்லைன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த வலைத்தளம், பகோடா வீதி, பிட்டா கோட்டே உள்ள iKING பிரமாண்டமான விழாவுடன் நடைபெற்றது.


iKINGஇன் தொலைநோக்குப் பார்வை கொண்டாடியது. ஐகிங் பிராண்ட் செப்டம்பர் 2007 இல் இஹ்ஸான் வாஹித் MBA, HDA என்பவரால் நிறுவப்பட்டது – தொழில் முனைவோர் ஆடை வடிவமைப்பாளர் வணிக பயிற்சியாளர் மூலோபாயவாதி முக்கிய பேச்சாளராக இந் நிறுவனத்தின் தலைவர் இஹ்ஸான் விளங்குகிறார்.

தலைமைத்துவ மேம்பாட்டில் சமூக ஆர்வலரும் – இலங்கை ஆண்கள் / பேஷன் மூலம் தங்களை எவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள் என்பதை மறுவரையறை செய்ய iKING புறப்பட்டது. வலிமை தொலைநோக்கு இயக்கப்படும் சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம்.

இந்த அர்ப்பணிப்பு ஒவ்வொரு துண்டும் காலத்தின் சோதனையை – உடல் ரீதியாகவும் ஸ்டைலிஸ்ட் ரீதியாகவும் – தூங்குவதை உறுதி செய்கிறது.ஆண்கள் உடைகளுக்கான சிறந்த தேர்வாக இருப்பது“ என்பது இன் தொலைநோக்குப் பார்வை இது இலங்கை தீவு பாரம்பரியத்தை உலகளாவிய பாணியுடன் இணைக்கிறது. ஒவ்வொரு தொகுப்பும் நவீன நிழல்கள் மற்றும் நேர்த்தியான விவரங்களைத் தழுவிய தீவின் கலாச்சாரம் செழுமைக்கு மரியாதை செலுத்துகிறது. இதன் விளைவாக வேரூன்றியது உணரக்கூடிய ஆனால் உயர்ந்ததாக உணரக்கூடிய ஆண்கள் ஆடைகள் – உண்மையான லட்சியமான மற்றும் சந்தேகத்திற்கு இடமின்றி தனித்துவமானவை.இந்த பிராண்டின் வெற்றிக் கதை, ஆண்டுகால மீள்தன்மை, சவால்கள், தோல்விகள் மற்றும் தடைகளைத் தாண்டி பேஷன் நம்பகமான பெயர் வெளிப்படுவதால் கட்டமைக்கப்பட்டுள்ளது.

iKING தான் சேவை செய்யும் ஒவ்வொரு வாடிக்கையாளரிடம் நம்பிக்கை.






இஹ்ஸான் வாஹித் இந்த நிறுவனத்தின் தலைவர் கூறுகையில் அவரது இந்த மைல்கல் சமகால / பேஷன் மற்றும் நம்பகமான தரத்தை அதன் வாடிக்கையாளர்களுக்கு நெருக்கமாகக் கொண்டு வருவதற்கு iKINGஇன் பயணத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை குறிக்கிறது. இந்த நிகழ்வில்iKINGஇன் நிறுவனர் இஹ்ஸான் வாஹித் சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டார். மூத்த பத்திரிகையாளர் நியூஸ் வயரின் நிர்வாக இயக்குநருமான . அசாம் அமீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக திரு. என்.எம். அமீன் மூத்த பத்திரிகையாளர் மீடியா மன்றத்தின் முன்னாள் தலைவருமான திரு. பாத்தி முகமது மற்றும் பிக்மீயின் இணை நிறுவனர் திரு. ஃபாத்தி முகமது ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

இந்த விழா தொழில் முனைவோர் தொழில் வல்லுநர்கள் மற்றும் பத்திரிகையாளர்களின் துடிப்பான சமூகத்தை ஒன்றிணைத்து ஆண்கள் ஆடை பாணியில் பாரம்பரியத்தை நவீனத்துவத்தின் கலக்கும் மற்றும் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்ட இந்த பிராண்ட் “என்னுடைய சிறந்த பதிப்பாக இரு!!!” என்ற வாசகத்தை கொண்டுள்ளது.ஜகிங் வெறும் ஆடைகளை உருவாக்குவதில்லை இது அனுபவங்களை உருவாக்குகிறது. ஒவ்வொரு ஆடையும் பெருமை மனப்பான்மை மற்றும் எளிதான நேர்த்தியை தூண்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது – முதல் ஓவியத்திலிருந்து இறுதி தையல் வரை. iKING ஐ தனித்துவம் ஆக்குவது அதன் அர்ப்பணிப்பு. இலங்கையின் வாழ்க்கை முறை மற்றும் கலாச்சாரத்திற்கு கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்ட காலநிலை உணர்வுள்ள துணிகள். - iw கிரியேட்டிவ் டிசைன் துறை மூலம் தலைமுறை வடிவமைப்பு அணுகுமுறை.– iKING Lanka Apparel (Pvt) Ltd உக்குவேல மாத்தளையில் அதிநவீன உற்பத்தி. திறமையான நிபுணர்களால் இயக்கப்படுகிறது. – iKING Holdings (Pvt) Ltd வழியாக தரத்தால்

www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

2025 JANUARY 10 - SATURDAY

WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# ஜித்தா வுக்கு முஸ்லிம் கவுன்சிலரை நியமிப்பதற்கு தாமதித்தேனும் எடுத்த முடிவு பாராட்டுக்குரியது

சவுதி அரேபியாவின் ஜித்தா நகருக்கான கவுன்சிலர் ஜெனரலாக முஸ்லிம் அல்லாதவர் ஒருவரை நியமிப்பதற்கு அரசாங்கம் எடுத்திருந்த தீர்மானமானத்தை கைவிட்டு அந்த பதவிக்கு முஸ்லிம் ஒருவரை மீண்டும் நியமிக்க தீர்மானம் எடுத்திருப்பதாக பிரதி வெளி விவகார அமைச்சர் அருண் பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

ஜித்தா கவுன்சிலர் பதவிக்கு முஸ்லிம் அல்லாத ஒருவரை நியமிப்பதற்கு இரு வாரங்களுக்கு முன் வெளி விவகார அமைச்சு தீர்மானம் எடுத்து அந்த முஸ்லிம் அல்லாதவரின் பெயரையும் அறிவித்திருந்தது. இது ஒரு புனித பூமி இங்கு முஸ்லிம் அல்லாத ஒருவரை நியமிப்பது பொருத்தமற்றது. அத் துறை சார்ந்த முஸ்லிம் ஒருவரை எதிர்காலத்தில் நியமிப்பதற்கு வெளி விவகார அமைச்சு தீர்மானித்திருப்பதாக பிரதி அமைச்சர் அருண் பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

இஸ்லாத்தின் புனித பிரதேசமான மக்கா மதீனா மற்றும் புனித உம்ரா ஹஜ் கடமைகளை நிறைவேற்றச் செல்லும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே கவுன்சிலர் ஜெனரலின் பிரதான பொறுப்பாகும். நாளாந்தம் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் ஜித்தா நகருக்கு சென்று அங்கிருந்தே மதீனா செல்கின்றனர்.

இவ்வாறான புனித கடமைகளை நிறைவேற்ற செல்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே கவுன்சிலர் ஜெனரல் நிர்வகிக்கும் அலுவலகத்தின் பிரதான பொறுப்பாக உள்ளது. முஸ்லிம் அல்லாத எவரும் இந்த பிரதேசங்களுக்குள் நுழைய முடியாது.

இந்த பிரதேசங்களில் ஹஜ் உம்ரா தொடர்பான எந்த ஒரு நிகழ்வு இடம்பெறும் போதும் சவூதி அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதும் கவுன்சிலர் ஜெனரலின் பிரதான பொறுப்பாக உள்ளது.

இந்தப் பின்னணியில் இப்பதவிக்கு முஸ்லிம் அல்லாத ஒருவரை நியமிக்க இலங்கை அரசினால் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது ஏன் என்று கேள்வி முன்வைக்கப்படுகிறது. இந்தத் தீர்மானம் காரணமாக முஸ்லிம் உலகிற்கும் குறிப்பாக சவுதி அரேபியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இருந்து வரும் நேச உறவுக்கு பாதகங்கள் விளைவதனை தடுக்க முடியாது.

தாமதித்தேனும் இந்தத் தீர்மானத்தை கைவிடுவதற்கு இலங்கை அரசு முடிவெடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. சுதந்திரம் கிடைக்கப்பெற்றது முதல் அமைச்சரவையில் இருந்த முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை இந்த அரசு ஏதோ ஒரு காரணத்துக்காக இல்லாமல் செய்தது.

அதேபோன்று பல அரசு நிறுவனங்களிலும் முஸ்லிம் பிரதிநிதித்துவத்துக்கு இடமளிக்கும் வீதம் குறைவாக இருக்கின்றது. கடந்த தேர்தல்களில் முஸ்லிம் சமுதாயம் தேசிய மக்கள் சக்திக்கு அமோக ஆதரவை வழங்கி இருந்த நிலையிலும் கூட அமைச்சரவையில் முஸ்லிம் ஒருவர் இல்லாமையானது பலத்த விமர்சனங்களுக்குள்ளாகி இருந்தது.

இந்த கவுன்சிலர் ஜெனரல் பதவி நியமனத்துக்கு கூட முஸ்லிம் ஒருவரின் பிரதிநிதித்துவம் இருந்திருந்தால் இந்த நியமனத்தை ஏன் முஸ்லிம் அல்லாத ஒருவருக்கு வழங்க தீர்மானித்திருக்க போகிறீர்கள் என்ற கேள்விக்கணைகள் அரசை நோக்கி ஏவப்படுகின்றன. அமைச்சரவைக்கு முஸ்லிம் பிரதிநிதி களை உள்வாங்கும் விடயத்தில் ஜனாதிபதி கரிசனை எடுத்திருக்க வேண்டிய காலம் கடந்துவிட்டது என்றே கூற வேண்டும். இப்பொழுது ஜனாதிபதியின் முஸ்லிம் பிரதி அமைச்சர்கள் பலர் இதற்கு தகுதி பெற்றவர்களாக இருக்கின்றனர். அரசுக்கு இதன் மூலம் முஸ்லிம் நாடுகள் மத்தியிலும் முஸ்லிம் உலகிலும் நற்பெயர் கிடைப்பதற்கான வாய்ப்புகளும் உருவாக்கப்படும். எனவே அமைச்சரவைக்கு முஸ்லிம் ஒருவரை நியமிப்பது குறித்து அரசாங்கம் மீள் கரிசனை கொள்வது காலத்தின் தேவையாக உள்ளது.

SAFEWAY TRAVELS & TOURS
Organizing Ha!,
Umrah Pilgrimage & Airline Ticketing M F SAFEWAY IMPEX (Po) LTD.
Exporters of Tea




191/20-1,
Siebel Garden,
High Level Road.
Kirulapana,
Colombo-05,
Sri Lanka.

E-mail:
safewayfarook1@gmail.com

Web:
sfewaytravelsandtours.com

Hotline:
+94 11 2513227
+94 11 2513226
+94 11 2513373

Insta :
Umarahwithsafeway
FB:
Safeway Travels & Tours

INTERNATIONALLY RECOGNIZED PROGRAMS

TVEC REGISTERED INSTITUTE

DIPLOMA PROGRAMS
- Counseling & Psychology
- Teacher Training
- Business Management
- Spoken English
- AMI Montessori
- Child Psychology
- IT Programs



CALL US FOR MORE DETAILS
0765204604 | 0778877907

Awarded By:
INTERNATIONAL PROFESSIONAL ACADEMY, UK
www.ipauk.org.uk



HND (UK) PROGRAMS
- HND (UK) in Business Management
- HND (UK) in Computing
- HND (UK) in Teacher Training
- HND (UK) in Psychology
- HND (UK) in English

CALL US FOR MORE DETAILS
0772703004 | 0767727032

TOP UP DEGREE PROGRAMS

UGC APPROVED
- Bachelors in Psychology
- Bachelor of Education
- BBA / MBA
- BA in English
- BSC IT



CALL US FOR MORE DETAILS
0765204604 | 0767727032

AMAZON COLLEGE
Where Success Begins
294, 2nd Floor, Galle Road, Colombo 04, Sri Lanka
+94114 386 126 | info@amazoncollege.lk
/amazoncollegelk | www.amazoncollege.lk

# கஹட்டோவிட்டவில் "தெவிட்டாத தேன்துளிகள்" நூல் அறிமுகமும், இலவச கத்னா மஜ்லிஸும்!

கஹட்டோவிட்ட Muslim Ladies Study Circle ஏற்பாட்டில் எதிர்வரும் ஜனவரி 14, 2026 புதன்கிழமையன்று இரு பெரும் சமூக நிகழ்வுகள் மிக விமர்சையாக நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் காலை மற்றும் மாலை வேளைகளில் பின்வரும் நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இலவச கத்னா மஜ்லிஸ்

புதன்கிழமை காலை 8.30 மணியளவில் இலவச கத்னா மஜ்லிஸ் நிகழ்வு நடைபெறவுள்ளது.

நூல் அறிமுக விழா

இதனைத் தொடர்ந்து மாலை 4.00 மணியளவில் வரக்காப்பொலை பாபுல் ஹசன் மத்திய கல்லூரியின் மௌலவி ஆசிரியை ஹாஜியானி கமருன்னிஸா அஹ்மத் முர்ஸி அவர்கள் எழுதிய "தெவிட்டாத தேன்துளிகள்" (சமூக, சமய, கல்வி சிந்தனைக்கட்டுரைகள்) எனும் நூல் அறிமுக விழா நடைபெறவுள்ளது.

இலங்கை வானொலியின் முன்னாள் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் ஆ.ணு. அஹ்மத் முனவ்வர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம அதிதியாக முன்னாள் மேல்நீதிமன்ற நீதிபதி அல்ஹாஜ் ஆ.ஆ. மக்கி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நூலாய்வினை முன்னாள் தேர்தல் ஆணையாளர் நாயகம் ஆ.ஆ.முஹம்மத் நிகழ்த்தவுள்ளதுடன், வக்பு சபை உறுப்பினர் மௌலவி M.N.M. இஜ்லான் மற்றும் அல் பத்ரியா மகா வித்தியாலயத்தின் முன்னாள் துணை அதிபர் மௌலவி A.M.M.அப்துஸ்ஸலாம் ஆகியோர் முன்னிலை வகிக்கவுள்ளனர்.

நிகழ்வின் சிறப்புரையை கம்பஹா மாவட்ட அஹதிய்யாப் பாடசாலை சம்மேளனத்தின் தலைவர் அஷ்ஷெய்க் அக்ரம் ஜூனைத் நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வுகளில் தவறாமல் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கஹட்டோவிட்ட Muslim Ladies Study Circle நிர்வாகிகள் அன்புடன் அழைக்கின்றனர்.






## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்கப்போவதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் மாணவர் தலைமுறைக்கு சர்வதேசத்தை வெல்லக்கூடிய நவீன கல்வி முறை அவசியம் என்றும், கிராமிய பிள்ளைகளை வறுமைச் சுழற்சியில் இருந்து மீட்கக்கூடிய ஒரே வழி கல்வி மட்டுமே என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். பொய்ப் பிரச்சாரங்களுக்கு அடிபணியாமல், நாட்டுக்குத் தேவையான கல்வி மறுசீரமைப்பு செயல்முறையைத் தொடர்ந்து முன்னெடுத்து, மாணவர்களுக்கு சிறந்ததொரு எதிர்காலத்தை உருவாக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அநுராதபுரம் மாவட்டத்தின் ராஜாங்கனை, தலாவ, நொச்சியாகம, மகாவிலச்சிய, பதவிய, கெபிதிகொல்லாவ, மிஹிந்தலை, ரம்பேவ ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் அனர்த்தங்களினால் முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்கு இழப்பீடு வழங்கும் நிகழ்வு நேற்று (09) ராஜாங்கனை வெவே விகாரைக்கு அருகில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அனர்த்தத்தின் பின்னர் மக்களின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக ஆரம்பிக்கப்பட்ட 'Rebuilding Sri Lanka' திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் பிரதான திட்டங்களில் ஒன்றாக இந்த 'PROJECT 5M' வீடமைப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அனர்த்தத்தினால் வீடுகளை இழந்த, அதே இடத்தில் மீண்டும் வீடுகளை நிர்மாணிக்க அனுமதி பெற்ற குடும்பங்களுக்கு முதற்கட்டமாக இழப்பீடு வழங்கப்பட்டது.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, மக்கள் ஆணை வழங்கிய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் அதேவேளை, அனர்த்தத்திற்குப் பிறகு இருந்த நிலையை விடவும் ஒரு சிறந்த நாட்டையும், மக்கள் வாழ்வையும் கட்டியெழுப்பும் திட்டத்தை அரசாங்கம் தற்போது வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டார்.

வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளை அடையாளப்படுத்தும் வகையில் வீடொன்றிற்கு அடிக்கல் நாட்டிய ஜனாதிபதி, அதனைத் தொடர்ந்து நடைபெற்ற பயனாளிகளுக்கு காசோலைகளை வழங்கும் நிகழ்விலும் இணைந்து கொண்டார்.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க, வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச, பிரதேச மக்கள் பிரதிநிதிகள், அநுராதபுர மாவட்டச் செயலாளர் ரஞ்சித் விமலசூரிய, பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## பிரதமருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன், அதனை அமெரிக்கா "சொந்தமாக்க" வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கூறியுள்ளார்.

செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடுகள் உரிமையைக் கொண்டிருக்க வேண்டும், அதேநேரம் அமெரிக்கா கிரீன்லாந்தை பாதுகாக்க வேண்டும்.

நாங்கள் அதனை "எளிதான வழியில்" அல்லது "கடினமான வழியில்" செய்வோம் என குறிப்பிட்டுள்ளார்.

நேட்டோ உறுப்பினரான டென்மார்க்கின் அரை தன்னாட்சி பிரதேசமான கிரீன்லாந்தை கைப்பற்றுவது குறித்து, தமது நிர்வாகம் பரிசீலித்து வருவதாக வெள்ளை மாளிகை சமீபத்தில் கூறியிருந்தது.

எனினும் டென்மார்க் மற்றும் கிரீன்லாந்து ஆகியன இதனை எதிர்க்கின்றன.

கிரீன்லாந்து பிரதேசம் விற்பனைக்கு இல்லை என்று கூறுகின்றன. இராணுவ நடவடிக்கை அட்லாண்டிக் எல்லைக்கு அப்பாற்பட்ட பாதுகாப்பு கூட்டணியின் முடிவைக் குறிக்கும் என்று டென்மார்க் கூறியுள்ளது.

மிகக் குறைந்த மக்கள் தொகை கொண்ட பிரதேசமாக இருந்தாலும், வட அமெரிக்காவுக்கும் ஆர்டிக்கிற்கும் இடையில் அமைந்துள்ள கிரீன்லாந்தின் இருப்பிடம், ஏவுகணைத் தாக்குதல்கள் ஏற்பட்டால் முன்கூட்டியே எச்சரிக்கை அமைப்புகளுக்கும், பிராந்தியத்தில் கப்பல்களைக் கண்காணிப்பதற்கும் ஏற்றதாக அமைகிறது.

இந்த நிலையில், கிரீன்லாந்தின் வடமேற்கு முனையில் உள்ள பிட்டுஃபிக் தளத்தில் அமெரிக்கா ஏற்கனவே 100க்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களை நிரந்தரமாக நிறுத்தியுள்ளது.

அத்துடன், டென்மார்க்குடனான தற்போதைய ஒப்பந்தங்களின் கீழ், அமெரிக்கா விரும்பும் அளவுக்கு அதிகமான துருப்புக்களை கிரீன்லாந்திற்கு கொண்டு வர அதிகாரம் உள்ளது.

## பிரதமருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்மையாக கண்டிப்பதாக சாணக்கியன் ராசமாணிக்கம் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்துடன் பிரதமர் மீதான தாக்குதல் செயற்பாடுகளில் எதிர்க்கட்சி மாத்திரமன்றி அரசாங்கத்திற்குள்ளிருந்தும் சிலர் செயற்படுவது போல் சந்தேகம் எழுகிறது என்றும் அவ்வாறானவர்கள் தொடர்பில் பிரதமர் கவனமாக செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (09) இடம்பெற்ற கடைகள், அலுவலக ஊழியர்கள் (ஊழியத்தையும் வேதனைத்தையும் உறுதிப்படுத்தும்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய சாணக்கியன் எம்.பி,

"கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் பெரும் விமர்சனங்கள் உள்ளன. எம்மிடையே அது தொடர்பில் மாறுபட்ட கருத்துக்களும் உள்ளன.


குறிப்பாக வரலாறு தொடர்பான சில உள்ளடக்கங்கள் தொடர்பில் விமர்சனங்கள் உள்ளன. அந்த வகையில் இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரை சந்தித்து இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம்.

இந்நிலையில் பிரதமருக்கு எதிராகவும் பெண்ணென்ற வகையில் அவருக்கு எதிராகவும் முன்னெடுக்கப்படும் கீழ்த்தரமான சேறுபூசல் நடவடிக்கைகளை நாம் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றோம்.

அவரின் தனிப்பட்ட விடயங்கள் தொடர்பாக முன்வைக்கப்படும் விமர்சனங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. பெண் அரசியல்வாதியென்பதால் தனிப்பட்ட ரீதியில் அவர் விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.





# கல்வியியல் கோட்பாடுகளும் அவற்றின் முக்கியத்துவமும்

M.A.M. **அன்ஸாம்** (BA,PGDIS,MEd

**ஆசிரியர்**

**முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி**

**கள் - எளிய**

மனித சமூகம் நாகரிகமடையத் தொடங்கியது முதல் சமுதாயத்தில் கல்வியும் வளர்ந்து வந்துள்ளது. மனித வளர்ச்சிக் கட்டத்தை எடுத்து நோக்கினால் வெவ்வேறு கால கட்டங்களிலும் மனிதன் தனக்குக் கிடைக்கும் அனுபவங்களின் ஊடாக தனக்குப் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்து கற்றுக் கொண்டு வந்துள்ளதுடன் அதனை மேலும் முன்னேற்றும் வழிவகைகளையும் ஆராயும் செயல்பாட்டிலும் ஈடுபட்டே வந்துள்ளான்.

அந்த அடிப்படையில் மனிதர்கள் தொடர்ந்து புதியவற்றைத் தேடியும் கண்டு பிடித்தும் கல்வியின் பல்வேறு துறைகளின் விருத்திக்கும் பங்களிப்புச் செய்து வந்துள்ளான். கல்வி என்பது வெறுமனே புத்தகங்களில் இருந்து கவல்களைச் சேகரிப்பதல்ல.

அது ஒரு மனிதனை முழுமை யாக்கும் செயல்முறை ஆகும். சுவாமி விவேகானந்தர் கூறுவது போன்று "ஒருவன் தன் சொந்தக் காலில் நிற்பதற்குத் தேவையான குண நலன்களை உருவாக்குவதே கல்வி" ஆகும்.

அந்தவகையில் மிக ஆரம்ப காலம் தொட்டே வெவ்வேறு சிந்தனையாளர்களும் அறிஞர்களும் இக் கல்வி தொடர்பான வெவ்வேறு சிந்தனைகளை முன்வைத்துள்ளனர். இச் சிந்தனைகளை நாம் நோக்குவதன் ஊடாக எமக்கு எத்தகைய ஒரு கல்விப்புலத்தை வடிவமைத்துக் கொள்ள வேண்டும் என்ற தெளிவு பிறக்கும்.

கல்வி என்பதை ஒரு குறுகிய வட்டத்திற்குள் நோக்காது விரிந்த கண்ணோட்டத்தில் நோக்குவதற்கு இக் கல்விக் கோட்பாடுகள் பற்றிய சிந்தனைகள் எமக்கு உதவும். அந்தவகையில் ஆரம்பகாலம் தொட்டு கல்விக் கோட்பாடுகளை முன்வைத்த சில முக்கிய கல்வியியற் சிந்தனையாளர்களையும் அவர்களின் கல்விசார் சிந்தனைக ளையும் பின்வருமாறு சுருக்கமாக நோக்கலாம்:

**பிளேட்டோவின் கல்விக் கோட்பாடு.**

பிளேட்டோ இருபதிற்கும் மேற்பட்ட நூல்களை எழுதினார். அவற்றுள் "குடியரசு" (The Republic), "சட்டங்கள்" (The Laws) முதலிய நூல்களிலே கல்வி தொடர்பான கருத்துக்கள் பரவலாக இடம் பெற்றுள்ளன.

கற்றல் என்பது மகிழ்ச்சியான செயல்பாடாக இருக்க வேண்டுமே தவிர, ஒரு கட்டாயச் செயல்பாடாக இருத்தலாகாது எனக் குறிப்பிட்ட பிளேட்டோ, ஆண், பெண் இருபாலாரும் ஒன்றிணைந்து கற்கும் "உடன் கற்றலை" (Co-education) வலியுறுத்தினார்.

பிளேட்டோவின் சிந்தனைகள் அழகியற் கல்வி தொடர்பான வீச்சுக்களையும் கொண்டிருந்தன. பிளேட்டோவின் கல்விச் சிந்தனையில் ஆசிரியத்துவத்திற்கு மேலான இடம் அளிக்கப்படுகின்றது. ஆசிரியர் என்பவர் அறிவுப் புலத்திலே ஒளியை ஏந்திச் செல்பவராக இருக்கின்றார்.

ஆசிரியர் வழிகாட்டியாக இருப்பதுடன், பொருண்மை கொண்ட வினாக்களை விடுப்பவராகவும் இருத்தல் வேண்டும். இத்தகைய ஒளிவீசும் வினாக்கள் ஒருவரின் அறியாமை இருளை உடைத்தெறியச் செய்யும் என்பது இவரின் கருத்து.

கார்ல் மார்க்ஸின் கல்விச் சிந்தனைகள்

நவீன கல்வியாக்கங்களிலும் உளவியல் நோக்குகளிலும் கார்ல் மார்க்ஸின் கருத்துக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் செல்வாக்குச் செலுத்துகின்றன. கல்வியால் அகிலத்தை மாற்றி யமைத்து விடலாம் என்ற இலட்சிய மிதப்பின் மாயையில் இருந்து விடுபடுவதற்கு மார்க்ஸின் சிந்தனைகள் விரைவும் வழியும் வகுக்கின்றன. கல்வி, பண்பாடு போன்ற துணைக்காரணிகளை மாற்றியமைப்பதால் பயனில்லை. சமூக அடி ஆதாரத்தை மாற்றிய மைக்கும் பொழுதுதான் அதன் மேலமைந்த அனைத்தும் மாற்றம் பெறும் என்பது மார்க்ஸின் தர்க்கமாக அமைந்தது.

ரெய்லரின் கல்விச் சிந்தனைகள் கல்வி இலக்குகளை அடிப்படையாக வைத்தே பாட உள்ளடக்கம் தெரிவு செய்யப்படுகின்றது. கற்பித்தல் சாதனங்கள் உருவாக்கப்படுகி-ன்றன.

கற்பித்தல் செயல்முறை வடிவமைக்கப்படுகின்றது. ரெய்லர் தீவிர பயன்கொள்வாதியாகச் செயல்பட்டார். கல்வியியலும் கலைத்திட்டத்திலும் கணிப்பீடு களிலும் பயன்பாடுகள் வேண்டும் என்பதைத் தீவிரமாக வலியுறுத் தினார். அமெரிக்காவில் புகழ்பெற்ற கல்வி நிறுவனமாகிய அமெரிக்கக் கல்வி தேசிய அகாடமியை உருவாக்குவதில் பணியாற்றியதுடன், அதன் முதலாவது தலைவராகவும் பணியாற்றினார். நவீன கலைத்திட்ட வடிவமைப்புகள் பற்றிப் பேசும் பொழுது தவிர்க்கப்பட முடியாத ஆளுமையாக இவர் விளங்குகின்றார்.

பி. எவ். ஸ்கின்னர் (B. F. Skinner) - நடத்தை உளவியல் கல்வித் துறையில் நடத்தை உளவியலைக் (Behavioral Psychology) கொண்டு வந்ததில் ஸ்கின்னர் முக்கியமானவர்.

ஆசிரியரின்றி மாணவர்கள் தாமாகவே கற்றுக்கொள்ள முடியும் ஆனால் ஆசிரியர் கற்பித்தலுக்கான சூழலையும் ஏற்பாடுகளையும் முறையாக வடிவமைக்கும்போது மாணவர்கள் வேகமாகவும் திறமையாகவும் கற்க முடியும் என இவர் குறிப்பிட்டார்.

மீள வலியுறுத்தல் (Reinforcement): இவரது மிகப்பெரிய பங்களிப்பு "மீள வலியுறுத்தல்" கோட்பாடு ஆகும். இதில் இரு வகைகள் உண்டு:

நேர் மீள வலியுறுத்தல் (Positive Reinforcement): வெகுமதி அல்லது பாராட்டு வழங்குவதன் மூலம் கற்றலை ஊக்குவித்தல்.

எதிர் மீள வலியுறுத்தல் (Negative Reinforcement): தண்டனை வழங்குவதன் மூலம் நடத்தையை மாற்றியமைத்தல்.

படிமுறை அணுகுமுறை (Successive Approximation): ஒரு பெரிய விடயத்தை ஒரே தடவையில் மாணவர்களுக்குக் கற்பிப்பது கடினம். எனவே, ஒரு பெரிய விடயத்தைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்துக் கற்பிக்கும் முறையை இவர் விளக்கினார். அதாவது ஒரு பெரிய விடயத்தை ஒரே தடவை முழுமையாக மாணவர்களுக்கு கற்பித்தல் கடினமான செயல் ஆகும் அந்நிலையில் அந்த பெரிய விடயத்தை பொருண்மை கொண்ட சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து கற்பித்தலும் அவற்றை விளங்கி மாணவர் துவங்கும் போது வெகுமதியானதை மீள வலியுறுத்தும் பொழுது மாணவர்கள் முழு விடயத்தையும் வெற்றிகரமாக கற்று முடித்து விடுவர்.

பெஞ்சமின் ப்ளூாம் இன்று வரை கல்வித்துறையில் மிக முக்கியமான ஒரு விடயமாக கருதப்படும் விடயமே கணிப்பீட்டு முறையாகும். கணிப்பீடு என்பது கல்வி இலக்குகளின் பகுப்பாய்வை முன்னெடுக்கும் ஒரு செயல்முறை எனலாம். இக்கணிப்பீட்டு முறையில் ப்ளூாமின் கருத்துக்கள் இன்று வரை செல்வாக்கு செலுத்துவதை அவதானிக்கலாம். டேவிட் கார்ட்டூன் என்பவர் உடன் ஒன்றிணைந்து இவர் கல்வி இலக்குகளின் பகுப்பாய்வு taxonomy of education objectives என்ற நூலை எழுதி வெளியிட்டார்.

இந்நூலில் மாணவர்களின் அடைவுகளை மதிப்பீடு செய்யும் முறையில் பல புதிய போக்குகளை உருவாக்கினார்.

கல்வி இலக்குகளை தெளிவாக வகைப்படுத்திக் காட்டும் பொழுது தான் ஆசிரியர்கள் தெளிந்த இலக்குகளுடன் தொழிற்பட முடியும் என்பதை வலியுறுத்திய இவர் கல்வியின் இலக்குகளை மூன்று பெரும் பிரிவுகளாக அல்லது ஆட்சிகளாக வகைப்படுத்தினார்.

அவை யாவன:

1. அறிகையாட்சி
2. எழுச்சி ஆட்சி
3. இயக்க ஆட்சி

இவற்றுள் அறிகை ஆட்சியை மேலும் 6 பிரிவுகளாக பி-ன்வருமாறு வகைப்படுத்தினார்.

1. பொருள் அறிவு knowledge
2. கிரகித்தல் comprehension
3. பிரயோகித்தல் application
4. பகுத்தாராய்தல் யயெடலளளை
5. தொகுத்தாராய்தல் ளுலவொநளளை
6. மதிப்பீடு செய்தல். evaluation

இச் செயற்பாடுகளை திறம்பட செய்வதன் ஊடாக மாணவர்களின் கல்வி இலக்குகள் உரிய முறையில் அடையப்பட்டுள்ளனவா என்பதை ஆழமாக ஆய்வுக்கு உட்படுத்த முடியும்.

இவர்கள் தவிர இன்னும் ஏராளமான சிந்தனையாளர்கள் கல்வியியல் சார் சிந்தனைகளை மிக ஆழமான ஆய்வுக்கு உட்படு-த்தி வெவ்வேறு கல்வி கோட்பா-டுகளை முன்வைத்துள்ளனர். இவ்வாறான கோட்பாடுகள் எமது எதிர்கால கல்வி புலத்தை வடி-வமைத்துக் கொள்ள இன்றியமையாதவியாக இருப்பதுடன் அவற்றை அடிப்படையாகக் கொண்டே கல்விசார் சீர்த்திருத்தங்களையும் மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் கல்வியின் இலக்குகள் பூரணமாக எட்டப்படும் என்பது உறுதி.

# பெண்களை சுயதொழிலில் முன்னேற்ற ஆர் ஜே ஊடக வலையமைப்பின் இலவச செயலமர்வு

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

ஆர் ஜே மீடியா ஊடக வலையமைப்பின் ஆறு வருடப் பூர்த்தியை முன்னிட்டு, இலங்கையின் அணைத்து மாவட்டங்களையும் மையப் படுத்தி ஏற்பாடு செய்யப்படும் ஊடகம், தலைமைத்துவம், மருதாணிக் கலை மற்றும் மணப்பெண் அலங்காரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இலவச செயலமர்வுகளை நாடு முழுவதும் நடத்தி வருகின்றது.

இதனடிப்படையில் ஒருநாள் இலவச செயலமர்வு அநுராதபுர ஸாஹிரா கல்லூரி மண்டபத்தில் ஆர் ஜே மீடியாவின் அநுராதபுர மாவட்ட ஒருங்கிணைப்பாளர் என்.பாத்திமா அப்ரா தலைமையில் நடைபெற்றது.





இந்நிகழ்வில், மாணவர்களுக்கான தலைமைத்துவம் மற்றும் ஊடக செயலமர்வை, ஆர் ஜே மீடியா பணிப்பாளரும், ஊடகப் ப யிற்சிவிப்பாளருமான ஏ.எம்.இன்சாப் வழங்கி வைத்தார். மருதாணிக் கலை தொடர்பான விரிவுரையை எம்.எச்.நிஷ்வதுல் ஷகீகா, மணப்பெண் அலங்காரம் தொடர்பான விரிவுரையை, தகவல் தொழில்நுட்பக் கற்கையில் உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவரும், அழகுக் கலை நிபுணருமான என். எப்.அப்ரா ஆகியோர் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வின் அதிதிகளாக, நொச்சியாகம அல் ஹிக்மா முஸ்லிம் மகா வித்யாலயத்தின் ஆசிரியை என்.எஃப்.நப்லா, அநுராதபுர நியூ ஓரியண்ட் ஜூ வல்லர்ஸ் பணிப்பாளர் எ.என்.எ.நாசிர், லக்சரி ஹோல்டிங் பணிப்பாளர் எம்.ஜே.எம்.மும்தீர் ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன், அநுராதபுர மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் அதிகமானோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்ததோடு, கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சாய்ந்தமருது அல்ஹிலாலின் அதிபரை வரவேற்கும் நிகழ்வு





(எம்.எஸ்.எம். ஸாகிர்)

சாய்ந்தமருது அல்ஹிலால் பாடசாலையில் இருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் அதிபரை வழியனுப்பி புதிய அதிபரை வரவேற்கும் நிகழ்வு (05)இடம்பெற்றது.

சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் கடந்த 13 வருடங்களாக ஆசிரியராக, உதவி அதிபராக, பிரதி அதிபராக, பொறுப்பதிபராக செயற்பட்டு, சாய்ந்தமருது அல்-கமஷுரூன் வித்தியாலயத்திற்கு அதிபராக இடமாற்றம் பெற்றுச் செல்லும் எம்.எச். நுஸ்ரத் பேகம் அவர்களை வாழ்த்தி வழியனுப்பி வைக்கும் நிகழ்வும், பாடசாலையில் பிரதி அதிபராகக் கடமையாற்றி, புதிய அதிபராகப் பதவியேற்ற கே.எல். அப்துல் ஜௌபர் அவர்களை வரவேற்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், கல்முனை வலயக் கல்வி அலுவலக ஆரம்பக்கல்வி வளவாளர் எஸ்.எம்.எம். அன்சார், பிரதி அதிபர்களான எம்.எச். லாபிர், ஏ.பி. ரோஷன் டிப்ராஸ், பாடசாலையின் அபிவிருத்தி சங்க செயலாளர் பொறியியலாளர் எம். சி. கமால் நிஷாத், முன்னாள் அதிபர் யூ.எல்.நசார், பாடசாலையின் ஒழுக்காற்றுக்குப் பொறுப்பான ஆசிரியர் எம்.எஸ்.எஸ். ஷிப்லி உட்பட பாடசாலையின் பகுதித் தலைவர்கள், ஆசிரிய, ஆசிரியைகள், மாணவ, மாணவிகளும் கலந்து கொண்டு இருவருக்கும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

# காதர் முகைதீன் சேர் நினைவேந்தல்

## அக்கரைப்பற்று முஸ்லிம் ம.கல்லூரியில் நடைபெற்றது

(நூருல் ஹுதா உமர்)



வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளரும், இலங்கை கல்வி நிர்வாக சேவையின் மூத்த அதிகாரியுமான மர்ஹூம் அல்ஹாஜ் எம்.ஏ.சி. காதர் முகைதீன் நினைவேந்தல் நிகழ்வு அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) வளாகத்தில் கடந்த 26ஆம் திகதி நடைபெற்றது.

கடந்த 20.12.2025 (சனிக்கிழமை) அன்று 88 வயதில் வஃபாத்தான மர்ஹூம் காதர் முகைதீன், அக்கரைப் பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் அதிபராக பணியாற்றியதோடு, இப்பாடசாலையை தேசிய பாடசாலையாக உயர்த்துவதற்கான அடித்தளத்தை அமைத்த முக்கிய கல்வி நிர்வாகியாக விளங்கினார்.

அன்னாரின் கல்விச் சேவைகளை நினைவுகூரும் வகையில், இந்நிகழ்வை பாடசாலை நிருவாகமும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

நிகழ்வில் மர்ஹூம் காதர் முகைதீன் அவர்களின் குடும்பத்தினரும் கலந்து கொண்டு, சிறப்பு பிரார்த்தனைகளில் பங்கேற்றனர்.

பாடசாலை அதிபர் உரையாற்றும் போது, மர்ஹூம் காதர் முகைதீன் அவர்கள் கல்விக்காக செய்த அர்ப்பணிப்பான சேவைகள் மற்றும் பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பங்களிப்புகள் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர், "ஒருவர் எவ்வாறு வாழ்ந்தார் என்பதை அவர் செய்து விட்டுச் சென்ற பணிகளே பேசும். இன்று ஒரு சேவையாளருக்காக நாம் அனைவரும் ஒன்றுகூடி இறைவனிடம் பிரார்த்திக்கும் நிலைமை, அவர் இந்த சமூகத்திற்கு செய்த அரிய சேவைகளுக்கான உயிர்ப்பான சாட்சி" எனக் குறிப்பிட்டார்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மர்ஹூம் காதர் முகைதீன் அவர்களின் கல்வி வரலாற்றுச் சேவைகளை நினைவுகூரும் வகையில், இந்நிகழ்வு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக அமைந்தது.

# கிழக்கு மாகாணத்தில் ஒசு சவிய திட்டம் ஆரம்பம்

(எஸ்.எம்.எம். முர்ஷித்)

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்காவின் ஆலோசனைக்கமைய "ஒசு சவிய" மூலிகைகளை வளர்ப்போம் நாட்டை கட்டியெழுப்புவோம் தேசிய திட்டத்தின் கிழக்கு மாகாணத்தின் ஆரம்ப நிகழ்வு வாழைச்சேனை கடதாசி ஆலை வளாகத்தில் (30) ஆரம்பித்து வைக்கப்பட்டது.





கடதாசி ஆலையின் தவிசாளர் பொறியீயளாளர் உபாலி ரெட்னாயக்க தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுனர் பேராசிரியர் ஜெயந்த லால் ரட்ணசேகர கலந்து கொண்டு மூலிகை மரக்கன்றுகளை நடும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வில் கௌரவ அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு கலந்து கொண்டதுடன் ஏனைய அதிதிகளாக ஒசு சவிய தேசிய வேலைத்திட்டத்தின் இணைப்பாளர் சட்டத்தரணி சமந்த கோரளேராச்சி, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் ஆணையாளர் டாக்டர் எம்.ஏ.நபீல், சமூக மருத்துவ மேற்பார்வை உத்தியோகத்தர் டாக்டர் எஸ்.சிவச்செல்வன், மட்டக்களப்பு மாவட்ட சமூக மருத்துவ உத்தியோகத்தர் டாக்டர். அனல்ரீள், கடதாசி ஆலையின் பிரதான இணைப்பாளர் எஸ். அம்பிகாவதி, பிரஜாசக்தியின் பிரதேச தவிசாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஒரு லட்சம் மூலிகை செடிகளை நட்டு ஒரு லட்சம் மூலிகைகளை சேகரிக்கும் நோக்கில் வாழைச்சேனை கடதாசி ஆலையில் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் இவ்வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக கடதாசி ஆலையின் தவிசாளர் பொறியாளர் உபாலி ரெட்னாயக்க தெரிவித்தார்.

# பேருவளையில் ஒரே குடும்பத்தில் மூன்று சட்டத்தரணிகள்

(பீ.எம். முக்தார்)



பேருவளை, மருதானையில் சமகாலத்தில் மூன்று சட்டத் தரணிகள் உருவாகியுள்ள ஒரே வீடாக அட்வகேட் ஹனபியின் குடும்பம் சட்டமன்றம் போன்று பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

களுத்துறை மாவட்டத்தில் பிரபல சிரேஷ்ட சட்டத் தரணியாக விளங்கும் எம்.ஏ.எம். ஹனபியின் பேரர்களில் ஒருவரான முஹம்மது நஸீஃப் அண்மையில் சட்டத்தரணியாக, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதியரசர்களான யசந்த கோத்தாகொட, சோபித்த ராஜாகுண, மகிழ்ந்த சமயவர்த்தன ஆகியோர் முன்னிலையில் சத்தியபிரமாணம் செய்து கொண்டார். இவரது மூத்த சகோதரரான நாமிக் நஃபாத் சில வருடங்களுக்கு முன்னர் சட்டத்தரணி யாக பதவிப் பிரமாணம் செய்து சட்டத்துறையிலும் நீதியமைச்சு, வெளிய விவாகர அமைச்சு என்றெல்லாம் அரசியல் வானில் பிரகாசித்து ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியின் கூட்டில் கனிஷ்ட சட்டத தரணியாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். மேலும் களுத்துறை நீதிமன்றத்தில் சிரேஷ்ட சட்டத்தரணியாகவும் பேருவளை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசலின் ஜமாஅத் சபை தலைவராகவும் பணியாற்றிக் கொண்டிருக்கும் எம்.ஏ.எம். ஹனபியின் பேரராகவும் முகம்மது நஸீஃப் திகழ்கிறார். இந்த வகையில் இலங்கை முஸ்லிம்களின் ஆரம்பகால வரலாற்று சிறப்பிடமாக புகழ்பெற்ற பேருவளை மருதானையில் ஒரே குடும்பத்தில் ஒரே சமயத்தில் சட்டத்தரணிகள் மூவர் உருவான வீடாக இவர்களது குடும்ப பேருவளையில் புதியதொரு வரலாறு படைத்திருக்கிறது.

இது இப்பிரதேசத்திற்கும் சமூகத்திற்கும் மேலும் பெருமை தேடிக் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.



எம்.எஸ். அமீர் ஹுசைன்

# பாலியல் இணையத்தள விவகாரம்






# சூடு பிடிக்கும்

## தென்னிலங்கை அரசியல்

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் ஒத்துழைக்கக் கூடிய அறிவும் ஆற்றல்களும் மிக்க சிறந்த ஆளுமைத் திறன்களை உடைய சந்ததியினரை உருவாக்க பயன்படுவது அந்த நாட்டில் நடைமுறையில் இருந்து வருகின்ற கல்வி முறையாகும். எமது நாட்டின் கல்வி முறையில் காலத்திற்கு காலம் புதிய மாற்றங்கள் புகுத்தப்பட்டு மறுசீரமைப்புக்கள் செய்யப்பட்டு வந்திருப்பது குறித்த இலட்சியத்தை அடைய நடைமுறையில் இருக்கின்ற கல்வி போதுமான பங்களிப்பை செய்ய தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலாகும். 1977 ஆம் ஆண்டின் பின்னர் கல்வி வெள்ளை அறிக்கை மூலம் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. 1994 ஆம் ஆண்டின் பின்னர் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க ஆட்சியில் ரிசட் பதிரண கல்வி அமைச்சராக இருந்த போது கொண்டு வரப்பட்ட கல்வி மறுசீரமைப்பு கொள்கை மூலம் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. 2005 ஆம் ஆண்டின் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அப்போதைய கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த காலத்திலும் கல்விக் கொள்கையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. அந்த

வரிசையில் 2024 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி) ஆட்சியில் தற்போதைய பிரதமர் ஹறினி அமரசூரிய கல்வி அமைச்சராக இருக்கின்ற நிலையில் புதிய கல்விக் கொள்கை யொன்று முன்வைக்கப் பட்டிருக்கின்றது.

வளமான நாட்டை கட்டியெழுப்ப திடகாத்திரமான கல்விக் கொள்கை அவசியம் என்ற அடிப்படையில் பிரதமர் ஹறினி அமரசூரியவால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய கல்விக் கொள்கையின் அடிப்படையிலான பாடப் போதனை ஆறாம் தரத்தில் இருந்து 2026 ஜனவரி மாதம் முதல் நடை முறைக்கு வர இருக்கின்றது. பாடசாலை நடைபெறும் நேரத்திலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆனாலும் அண்மையில் ஏற்பட்ட அனர்த்த நிலை காரணமாக நாடு இன்னும் சுமூக நிலைக்கு வரவில்லை என்பதால் பாடசாலை ஆரம்பிக்கின்ற மற்றும் விடுகின்ற நேர மாற்றம் ஒத்திப்போடப் பட்டிருக்கின்றது என்று அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

நாடெங்கிலும் இருக்கின்ற 10500 பாடசாலைகளில் ஆறாம் தரத்தில் பயிலும் 450,000 அளவிலான மாண வர்களுக்கு அரசின் புதிய கல்வி திட்டத்தின் அடிப்படையிலான பாடநூல்கள் வழங்கப்பட்டு கற்பிப்பதற்காக வலய கல்வி காரியாலய மட்டத்தில் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. உரிய பாடநூல்களும் (மொடியுல்) ஆசிரியர்களின் கைகளுக்கு பி.டி.எப் ஆகவும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் 06 ஆம் தர ஆங்கில மொழி பாடநூலில் முதலாம் தவணைக்கான கற்பித்தலுக்கான இரண்டாவது மொடியுலில் இணையத் தளங்களை பயன்படுத்தி நண்பர்களை அறிமுகமாகிக் கொள்வதற்கான பாடத்தில் பாலியல் விடயங்களோடு சம்பந்தப்பட்ட செக்ஸ் இணை யத்தள முகவரி ஒன்று உட்படுத்தப் பட்டிருந்தமை தொடர்பாக பெரும் சர்ச்சை உருவாகி இருக்கின்றது.

இந்த விவகாரம் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டதால் உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சின் செயலாளர் நாளக களுவெவ விழிப்படைந்த நிலையில் அதுபற்றி குற்றவியல் விசாரணை திணைக்களத்திடம் முறைப்பாடு செய்திருப்பதாக 2025.12.31 ஆம் திகதி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அறிவித்தார். ஆனாலும் தற்போதைய நிலையில் சர்ச்சைக்கு காரணமாக அமைந்துள்ள ஆறாம் தர முதலாம் தவணைக்கான ஆங்கில மொழி இரண்டாம் கையேட்டில் (Module) அறிமுகம் செய்யப்பட்டுள்ள நண்பர்களை அறிமுகமாகிக் கொள்ளுதல் என்ற பாடத்தில் இவ்வாறான முறையற்ற இணையத்தள முகவரி உட்புகுத்தப்பட்டிரு ந்தமை கண்டறியப்பட்டிருக்கின்றது. அதனால் கல்வியியலாளர்கள் மத்தியில் எதற்காக இத்தகைய இணையத்தள முகவ-ரி பிஞ்சு பருவ மாணவர்களின் பாடத்தில் இவ்வாறான ஒரு பயிற்சிக்கு புகுத்தப்பட்டது என்ற பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.

ஆசிரிய அதிபர்களின் இணைந்த தொழிற்சங்கத்தின் பொறுப்பாளர் உலபனே சுமங்கல தேரரும் 2025.12.31 ஆம் திகதி குற்றவியல் புலனாய்வு விசாரணை திணைக்களத்திடம் முறைப்பாடொன்றை சமர்ப்பித்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் இத்தகைய சதி நாசகார செயலில் ஈடுபட்டவர்களை கண்டுபிடிக்க வேண்டும். தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயர் இந்த பாடநூலில் ஆக்கியோர்கள் பட்டியலில் முதலாவதாக இடம்பெற்றிருக் கின்றது. அதனைத் தொடர்ந்து பாடநூலை உருவாக்க ஒத்துழைத்த கல்வியியலாளர்கள், ஆலோச கர்கள், பாடப் புத்தகத்தை பரிசீலனை செய்தவர்கள், ஒப்பு நோக்கியவர்கள், தட்டச்சு செய்தவர்கள் என்று அனைவர்கள் குறித்தும் விசாரணை செய்ய வேண்டும் என்று அவரது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக தேரர் மேலும் தெரிவிக்கையில் இத்தகைய இணையத்தள முகவரி உட்புகுத்தல் தற்செயலாக இடம்பெற்றுள்ள தவறாக இருக்கலாம் என்று உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டிருப்பது நகைச்சுவையாக இருக்கின்றது. பாடநூல் தயாரிக்கின்ற போது பல துறைசார்ந்த நிபுணர்கள் குழுவை கடந்து பாடநூலை அச்சிட்டு லாரிகளில் ஏற்றுவது வரையிலான நிகழ்வுகள் நடந்து முடிந்துவிட்டன. ஆனால் இங்கு திட்டமிடப்பட்ட சதி இடம்பெற்றிருக்க வேண்டும். குறித்த இணையத்தள முகவரி ஊடாக தன்னினச் சேர்க்கை பற்றி பாலியல் காட்சிகளையும் புகைப்படங்களையும் பெறக்கூடியதாக இருக்கின்றது.

ஆனாலும் இந்த முறைப்பாட்டை செய்த பின்னர் குறித்த இணையத்தளம் 31 ஆம் திகதியில் இருந்து பார்வையிட முடியாதவாறு தடைசெய்யப் பட்டிருக்கின்றது. இதில் யாரோ சில அதிகாரிகள் நாட்டில் இருக்கின்ற ஓரினச் சேர்க்கை தொடர்பான அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு விலைபோய் டாலர்களுக்காக அத்தகைய அமைப்புக் களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் சார்பாக செயற்படுவது தெளிவாக தெரிகின்றது. தற்போதைக்கு ஆறாம் தரத்தில் சுமார் 450,000 மாணவர்கள் அளவில் கல்வி கற்பதால் அதே அளவான பாடநூல்கள் அச்சிட்டு விநியோகத்துக்கு தயாராக உள்ளன.

இந்தளவு நூல்களை அச்சிட கோடிக் கணக்கான அரச நிதி விரயமாக்கப்பட்டிருக் கின்றது. உண்மையில் தற்செயலான தவறாக இருந்தால் தவறை செய்த அதிகாரிகளிடம் இருந்து அந்த இழப்பை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இத்தகைய தவறு நடக்க கல்வி அமைச்சர் ஹறினி அமரசூரிய, தேசிய கல்வி அணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் உட்பட பலர் சம்பந்தப்படுகின்றனர்.

அனைவர்கள் மீதும் குற்றவியல் தண்டனை சட்டக்கோவையின் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான பிரிவுகளான 286 (அ) 288 (அ) ஆகிய பிரிவுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்-துள்ளார். இவர்களுக்கு எதிராக விரைவில் வழக்கு தாக்கல் செய்யப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

அதே நேரம் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிக்கையில் புதிய கல்வி சீர்திருத்தம் அறிவிக்கப்பட்ட நாள் முதல் கடுமையான எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டு வந்துள்ளன. இவ்வாறு கல்வி மறுசீரமைப்பை எதிர்க்கக்கூடிய தரப்பினரின் சதித் திட்டமாக இத்தகைய மோசமான இணையத்தள உட்புகுத்தல் இடம்பெற்றிருக்கவும் முடியும். அதனால் உண்மையை கண்டறியவே குற்றவியல் விசாரணை திணைக்களத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டது. அத்துடன் இந்த பதிப்பானது இன்னும் பூர்த்தியடையவில்லை. இறுதியானதும் அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் கடந்த பல மாதங்களாக அரச மட்டங்களில் ஓரினச் சேர்க்கை தொடர்பாக பரவலாக பேசப்பட்டு வந்திருப்பதை அவதானிக்கலாம்.

ஓரினச் சேர்க்கையாளர்களும் மனிதர்களே, அவர்களதும் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். பால்நிலை மாற்றம் நியாயமானது. நாட்டில் அதற்கான சுதந்திரம் இருக்க வேண்டும். இளம்பராயத்தினர் இதன் தாக்கங்கள் பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்றெல்லாம் அரச மட்டங்களில் இருந்து கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

அதற்காக ஒருசில அமைச்சர்களும் பின்னணியில் இருந்து செயற்பட்டு வருகின்றனர். கல்வி அமைச்சர் ஹறினி அமரசூரிய மீது இந்த விடயம் தொடர்பாக கல்வி சமூகத்தில் இருந்து கடுமையான விமர்சனங்களும் குற்றச்சாட்டுக்களும் முன்வைக் கப்பட்டுள்ளன.

அவ்வாறே நாட்டில் இந்த செயற்பாடுகளை முன்னெடுத்து தன்னினச் சேர்க்கையை சட்டபூர்வ மானதாக்க அரச மட்ட ஆதரவை திரட்டவென சில தனியான அரச சார்பற்ற அமைப்புக்களும் இயங்கி வருகின்றன. பாடசாலை பாடவிதானத்ததிற்குள் யாருக்கும் தெரியாதபடி மாணவர்களை அதற்காக ஊக்குவிக்கும் நோக்கில் இத்தகைய அமைப்புக்கள் பாடநூல் உருவாக்க குழுவினரில் ஒருசிலரை கைக்குள் போட்டு இவ்வாறான வேலையை பார்த்திருக்க லாம் என்ற சந்தேகங்களும் கிளப்பப் படுகின்றன. இந்நிலையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் திருமதி மஞ்சுலா விதாரண பதிரன அவரது பதவியை தற்காலிகமாக இராஜினாமா செய்திருப்பதாகவும் அறிய முடிகின்றது. தற்போது ஏற்பட்டுள்ள பாடநூ லில் செக்ஸ் இணையத்தள முகவரி விசாரணை பூர்த்தியடையும் வகையில் அதற்கு ஒத்துழைப்பதற்காகவே அவர் தற்காலிகமாக பதவியை இராஜினாமா செய்திருப்பதாக கூறப்படுகின்றது.

அத்துடன் மலர்ந்துள்ள 2026 ஆம் ஆண்டு புதுவருடத்ததில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா அமைச்சரவையில் சில மாற்றங்களை செய்வதற்கு உத்தேசித்து இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இவ்வாறான மாற்றம் நிகழும் போது ஹறினி அமரசூரியவிடம் இருக்கின்ற கல்வி உயர்கல்வி அமைச்சு பொறுப்பு பறிக்கப்பட்டு புதிய ஒருவரிடம் ஒப்படைக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது. எதுவானாலும் பாடநூலில் தவறு இலகுவாக இடம்பெற முடியாது. ஒரு வகுப்பிற்கான பாடநூலை உருவாக்குவதில் பலரின் பங்களிப்பு தங்கி இருக்கின்றது.

துறைசார்ந்த அனைவரதும் பரிசீலனை முடிவடைந்துள்ள நிலையில் இளம் பருவ மாணவர்கள் மத்தியில் குறித்த ஒரு விடயத்துடன் சம்பந்தப்பட்ட பாடத்திற்குள் அது தொடர்பான மேலதிக விடயங்களை அணுகி பெற இத்தகைய மஞ்சள் இணையத்தள (செக்ஸ்) புகைப்படங்களையும் தகவல்களையும் பெறும் வகையிலான இணையத்தள முகவரி எவ்வாறு புகுந்ததென்பது பாரிய மர்மமாக இருக்கின்றது. மாணவர்களை திட்டமிட்ட அடிப்படையில் பாலியல் தேடலுக்கு குறிப்பாக (டுபுடீவுஞ) என்ற தன்னினச் சேர்க்கை தூண்டலை இலக்காகக் கொண்ட ஒரு மறைமுக முயற்சியாக இருக்குமா என்ற சந்தேகம் வலுவடைகின்றது.

இந்நிலையில் கல்வி அமைச்சர் என்ற வகையில் பொறுப்பு மீறப்பட்டிருக்கின்றது என்ற அடிப்படையில் இணையத்தள புகுத்தல் தவறு என்றால் பிரதமர் ஹறினி கல்வி அமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற வேண்டுகோள்கள் மன்வைக்கப்பட்டி ருப்பதோடு இந்த நடவடிக்கைக்கு சமூகத்தில் பல கோணங்களில் இருந்து எதிர்ப்பு வலுவடைகின்றது. உண்மையில் இந்த விடயம் அச்சுப்பிழையாக இருக்க முடியாது. இதேபோன்று மேலும் பல தவறுகள் நடந்தால் அதன் பின்னரும் தற்செயல் தவறு என்று சமாளிப்பது பெரும் குற்றமாகும். அதனால் இவ்விடயம் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட்டு தன்னினச் சேர்க்கை ஊக்குவிப்பை செய்யும் பாடநூல் ஆக்கக் குழுவில் இடம்பெறும் அதிகாரிகள் யார்? பின்னணியில் இருக்கும் அரசியல்வாதிகள் யார்? அரச மட்ட ஆதரவிலா அல்லது தனிப்பட்ட வகையிலான ஆதரவிலா இந்த பாலியல் வியாபார மறைமுக ஊக்குவிப்பு பாடசாலை பருவ பிஞ்சுகளை இலக்கு வைத்து மேற்கொள் ளப்படுகின்றது என்ற உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். தவறிழைத் தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

# சகல துறைகளிலும் பிரகாசித்த

# கலாநிதி பதியுதீன் மஹ்மூத்

**கலாநிதி பதியுதீன்**
**(23 ஜுன் 1904-16 ஜுன் 1997)**

காயிதே மில்லத் மறைந்த கலாநிதி பதியுதீன் மஹ்மூத் இலங்கை முஸ்லிம்களின் மிகச்சிறந்த அரசியல் தலைவராவார்.இவர் பல கல்லூரிகளைத் தோற்றுவித்த அதிபர், மட்டுமன்றி ஒரு கல்விமானாக, கல்வி, ஒலிபரப்புத் துறை,சுகாதாரம் ,வீடமைப்பு முதலான விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சராகவும் ஒரு ராஜதந்திரியாகவும் பணியாற்றிய ஒரு ஆளுமை
இவரை கௌரவிக்கும்முகமாக அல் அஸ்லாப் முன்னோர் நினைவு மன்றம் கொழும்பிலுள்ள தபால் திணைக்கள கேட்போர் கூடத்தில் இம்மாதம் 30ஆம் திகதி திங்கட்கிழமை நினைவுப் பேருரையொன்றை நடத்துகிறது.

இச்சந்தர்ப்பத்தில் பதியுதீன் மஹ்மூத் அவர்களின் வாழ்வும் சமூகப்பணியும் தொடர்பாக ஆராய்வது மிகப் பொருத்தமானது.

இவர் 1904 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 ஆம் திகதி முஹம்மத் நைனா மரிக்கார் – பாதிமா நாச்சிய தம்பதியினரின் 12 ஆவது பிள்ளையாக மாத்தறையில் பிறந்த இவர் சன்மார்க்கப் பற்றும் நன்மதிப்பையும் பெற்ற நிலபுலன்களுக்கு உரிமை கோரும் குடும்பத்தை சேர்ந்தவர்.

தனது ஆரம்பக் கல்வியை மாத்தறையிலும் காலியிலும் கற்று உயர் வகுப்புக்களுக்காக கொழும்பு ஸாஹிராவுக்கு வருகிறார்.படிக்கும் காலத்தில் படிப்பிலும் விளையாட்டிலும் சமமாக ஆர்வம் காட்டினார்.அடுத்து உயர் பட்ட படிப்புக்காக இந்தியாவின் அலிகார் பல்கலைகழகத்துக்குச் செல்கிறார்.

1931 முதல் 1937 வரையான காலப் பகுதியில் அலிகாரில் படிக்கும் காலத்தில் இவரின் விவாதத் திறனுக்காக 1937 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய பொது பேச்சுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார்.பல்கலைகழக இதழின் ஆசிரியராக இரண்டு ஆண்டுகள் பணியாற்றியதுடன் அலிகார் ஒக்ஸ்போர்ட் மெஸ்டன் பரிசையும் வென்றார்.இது தவிர உபி. பல்கலைகழக மாணவர் கூட்டமைப்பின் தலைவராகவும் 1935ம் ஆண்டு ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

லக்னோவில் நடந்த அகில இந்திய மாணவர் மாநாடுகளுக்கு அவர் தலைமை தாங்கினார்.அகில இந்திய மாணவர் இயக்கத்தை ஏற்பாடு செய்த பதியுதீன் மஹ்மூதின் பேராசிரியரும், தலைமை ஆசிரியருமான முஹம்மத் ஹபீப்,தனது மாணவரைப் பற்றி இவ்வாறு விவரித்தார்.

பதியுதீன் 1932 முதல் ஒரு மதிப்புமிக்க மாணவர்,தோழர் மற்றும் நண்பர் என எனக்கு மிகவும் நெருக்கமானவர்.அவரது கல்வி வாழ்க்கை விதிவிலக்காக அற்புதமானது .பதியுதீன் இரண்டு ஆண்டுகள்(1933-35)என்னுடன் அரசியல் பயின்றார்.அவர் மிகவும் நம்பிக்கைக்குரிய மாணவராக, ஆசிரியர்களுக்கு உத்வேகமாக இருக்கும் அரிய மற்றும் மிகவும் வரவேற்கத்தக்க மாணவர்களில் ஒருவராக என்னை கவர்ந்தார்.அலிகாரில் சில மாணவர்கள் மட்டுமே தங்கள் திறன்கள் மற்றும் குணாதிசயங்கள் குறித்து இவ்வளவு சிறந்த தோற்றத்தை உருவாக்கியுள்ளனர்.


அவரது அறிவார்ந்த சாதனைகள் ,சிறந்த நடத்தைகள் வியக்கதக்கவை.

அலிகாரில் சேர்ந்தபோது,லண்டனில் நடந்த இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் முஸ்லிம் தலைவர்களை இந்திய சுதந்திர இயக்கத்தை ஆதரிக்க மஹ்மூத் வற்புறுத்தினார்.

முதுநிலைப் பட்டதாரியான இளைஞர் பதியுதீன் தன்னை சமூக முன்னேற்றப் பணியில் ஈடுபடுத்திக் கொள்கிறார்.

முஸ்லிம் லீக் என்ற சமூகநல அமைப்பு அவரை அரவணைத்துக் கொள்கிறது .மிகக் குறுகிய காலத்திலே 1927ஆம் ஆண்டு முஸ்லிம் லீக்கின் செயலாளர் பதவி இவரை அலங்கரிக்கின்றது.முஸ்லிம்களுக்கு எதிரான சமகாலப் பிரச்சினைகள் ஏற்படும் போதெல்லாம் அக்காலத் தலைவர்களை ஒன்று திரட்டி தீர்வுகாணும் வழி முறையொன்றை ஆரம்பித்து வைத்தார்.

பிரபுக்களும் செல்வந்தர்களும் மட்டுமல்லாது சாதாரண பொது மகனும் முஸ்லிம் லீக்கில் உயர் பதவி வகிக்க கூடிய சூழ்நிலையை உருவாக்கினர்.




1939 ஆம் ஆண்டில் அகில இலங்கை முஸ்லிம் அரசியல் மாநாட்டைக் கூட்டி சமூகத்தின் உரிமைகள் தொடர்பாக குரல் கொடுக்கும் கலாசாரமொன்றை உருவாக்கினார்.ஒரு சமூகம் நாட்டின் முன்னேற்றத்துக்காக அதன் முறையான பங்களிப்பை வழங்குவதற்கு அந்த நாட்டு அரசு குறிப்பிட்ட சமூகத்தின் அரசியல் உரிமைகளை வழங்க வேண்டியது அவசியமாகும் என வலியுறுத்தினார்.

மேலும் அவர் அரசியலுக்கு வர முன்னரே சமூகத்துக்கு விளிப்புக் குரலெழுப்பினார்.

1938 ம் ஆண்டில் காலி முகத்திடலில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தொடர்பான வைபவமொன்றில் இவர் நிகழ்த்திய உரையில் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் சிங்கள மொழி அதிகாரப்பூர்வ மொழியாக இருக்கும் என்பதால்,இலங்கை முஸ்லிம்கள் சிங்கள மொழியையும் அவசியம் கற்றுக்கொள்ள வேண்டிவரும் என எதிர்வு கூறினார்.

இது செய்யப்பட்டால் சிங்களவர் மத்தியில் முஸ்லிம் தொடர்பான அனைத்துத் தவறான புரிதலும் ஒழிக்கப்பட்டு இரு சமூகத்துக்கு இடையே சரியான நல்லிணக்கம் ஏற்படும் என்பதை வலியுறுத்தினார்.

அதே ஆண்டு காலி முகத்திடலில் முஸ்லிம்களின் பிரமாண்டமான கூட்டமொன்றைத் திரட்டி பலஸ்தீன மக்களுக்கு பிரிட்டன் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும் எனக் கோசம் எழுப்பினார்.

இனி,தேசிய அரசியலில் இவரின் பங்களிப்பு தொடர்பாக அவதானிக்கும் போது,ளு.று.சு.னு.பண்டாரநாயக்க ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியை ஆரம்பித்த வேளையில் அவருக்கு பக்கபலமாக நின்று முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்துக்கு வித்திட்டார்.வகுப்பு வாரியான பிரதிநிதித்துவபடுத்துவத்துக்கு பதிலாக இலங்கை அரசியலில் சனத் தொகை அடிப்படையிலான பிரநிதித்துவம் வேண்டும் என்ற கொள்கையை முன்வைத்து வெற்றியும் கண்டார்.

இதன் மூலம் சிறுபான்மையும் வெற்றியும் கண்டார்.இதன் மூலம் சிறுபான்மையும் சிறுபான்மையாக இருந்த முஸ்லிம்கள் மட்டுமன்றி மலையக தமிழ் மக்களும் கூட நன்மையடைந்தனர்.தேசிய மற்றும் சமூகம் சார் அரசியலுக்கு இவர் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

இவர் சுதந்திரக் கட்சி ஆட்சி பீடமேறிய காலங்களில் தனது செல்வாக்கையும் மதிநுட்பத்தையும் பயன்படுத்தி சமூகத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் களமமைத்தார்.

1960ஆம் ஆண்டு பதியுதீன் மஹ்மூத் கல்வி,ஒலிபரப்பு அமைச்சராக பதவியேற்றார்.

இலங்கை வானொலியில் முஸ்லிம் நிகழ்ச்சிக்கான பிரிவொன்றை ஆரம்பிக்கப் பணிப்புரை வழங்கி,அதனை செயற்படுத்த வைப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்.

இன்றும் இலங்கையில் மட்டுமில்லாது தென் இந்தியாவின் சில பகுதிகளிலும் நாம் காலை-மாலை அனுபவிக்கும் முஸ்லிம் சேவை பதியுதீன் மஹ்மூத் அவர்கள் பெற்றுத் தந்த உரிமையாகும்.

தான் ஒலிபரப்பு துறைக்குப் பொறுப்பான அமைச்சராக பொறுப்பேற்ற காலத்தில் ஹஜ் பெருநாள் தினத்தில் உரையொன்றை நிகழ்த்தினார்.உரைக்கு முன் அவரே தக்பீர் முழங்கினார்.



காயிதே மில்லத்தின் கல்விக்கான பங்களிப்பு தொடர்பாக கதைக்கும்போது கம்பளை ஸாஹிராக் கல்லூரியின்

60 ஆம் ஆண்டில் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் கல்வி அமைச்சராக பதவியேற்றபோது ஸாஹிராக் கல்லூரிக்கு

.1950,60 ஆம் தசாப்த காலங்களில் முஸ்லிம்கள் அரசியலில் ஈடுபடுவது அவசியமற்ற ஒன்றாகும் என முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர் நம்பிய காலம்.இஸ்லாமிய சோசலிச முன்னணி என்ற துணைக் கட்சியை உருவாக்கி, நாடு பூராகவும் கிளைகளை தோற்றுவித்து முஸ்லிம்களை கௌரவமான அரசியலில் ஈடுபட ஆர்வமூட்டினார்.

இன்னும் சுதந்திர கட்சியின் தோற்றத்துக்கும் அக்கட்சி பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கவும் பதியுதீன் மஹ்மூதின் ஸாஹிரா வளாகத்துடன் இணைந்த(கம்பளை) வீடே பயன்படுத்தப்பட்டது.

இது தொடர்பாக 1972 ஆம் ஆண்டு கம்பளை ஸாஹிராவில் அமைச்சர் ரீ.பி. இலங்கரத்தின இவ்வாறு சாட்சி பகிர்கிறார்.




இந்த ஸாஹிரா வளாகம்தான் எமது சுதந்திர கட்சியை உருவாக்கவும்,கட்சியை உன்னத நிலைக்குக் கொண்டு வரவும் பல திட்டங்களைத் தீட்டுவதற்கும் களமாக அமைந்தது.நவீன சமுதாயத்தை உருவாக்க நல்ல பல திட்டங்களும் இவ்விடத்திலேயே உருப்பெற்றவையாகும்.அவற்றின் மூலமே இந்நாட்டு மக்களுக்கு நாம் சேவை செய்ய பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் அமைச்சர்களாகவும் வளர்ந்தோம் இத்தனை பெருமைக்கும் பதியே காரணமாகும் என பலமாக கூறினார்.

அவர் கல்வி அமைச்சராகப் பதவியேற்றதும் வகுப்புவாரியான முறைமைக்குப் பதிலாக சனத்தொகை அடிப்படையிலான விகிதாசார முறையை செயற்படுத்தி முஸ்லிம் முஸ்லிம் கல்விமான்களின் வளர்ச்சிக்கு வித்திட்டார்.

அக்காலத்தில் அநேகமான முஸ்லிம் பிரதேசங்களில் கலவன் பாடசாலை என்ற பெயரிலே முஸ்லிம் பாடசாலைகள் செயற்பட்டு வந்தது.அவை முஸ்லிம் வித்தியாலயங்களாகவும் மகா வித்தியாலயங்களாகவும் மாற்றப்பட்டு சமய அடிப்படையிலான ஒழுக்க விழுமியங்கள் பேணப்பட்டால் முஸ்லிம் பெண்களும் பாடசாலைக் கல்வியை நோக்கிப் படையெடுத்தனர்.

ஆளணித் தேவைக்காக புதிதாக முஸ்லிம் அதிபர்களும் ஆசிரியர்களுக்கு சேர்ந்துக் கொள்ளப்பட்டனர்.பள்ளிவாசலோடு மட்டும் இருந்த உலமாக்கள் இஸ்லாம் பாட போதனைக்காக நியமிக்கப்பட்டார்கள்.

பாடசாலைக் கல்வி மட்டும் போதுமானது என்ற நிலைப்பாட்டிலிருந்து முஸ்லிம் வாலிபர்களும் யுவதிகளும் பட்டப்படிப்பில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட பெருமையும் பதியின் கல்வித் திட்ட வெளிப்பாடாகும்.

வளர்ச்சியோடு தொடர்புபடுத்தியே உற்றுநோக்குவது பொருத்தமாகும்.

ஏனெனில் பதியுதீன் அவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை ஆராயும்போது அவரின் வாழ்க்கையின் பெரும் பகுதி கம்பளை ஸாஹிராவுடனே கழிந்துள்ளது.

அன்னார் சர்வதேச ராஜதந்திரியாப் பணியாற்றும்போது அதாவது நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான பிரதிநிதியாகக் கடமையாற்றும் வேளையில் தமது ஆசனத்தின் முன் வைக்கப்பட்டிருந்த இலங்கையின் பிரதிநிதி கலாநிதி பதியுதீன் மஹ்மூத் எனும் சுட்டிப் பெயர்பலகையில் முன்னால் கம்பளை ஸாஹிராவின் அதிபர் என்ற வார்த்தையும் பொறிக்கப்பட்டிருந்தது.

கம்பளை ஸாஹிரா அவரின் உயிர் மூச்சு என்பதை உணர்த்துகிறது.



அவர் இலங்கைப் பல்கலைகழகத்தில் புவியியல்துறை விரிவுரையாளராக பதவியேற்க இருந்த நிலையில் தான் கம்பளை ஸாஹிராவின் உப அதிபர் பதவியைப் பொறுப்பேற்கிறார்.

தனது அபிமான ஆசிரியர் ரீ.பி.ஜாயாவின் வேண்டுதலுக்கு அமைவாக 1944 ஆம் ஆண்டு ஒக்டோபர் 01ம் திகதி ஸாஹிராவின் உப அதிபர் ஆசனத்தை அலங்கரிக்கிறார்.

1944 ஆம் ஆண்டின் கம்பளை டவுன் பள்ளிக்குச் சொந்தமான ஓலையால் வேயப்பட்ட ஒரு தற்காலிக கட்டிடத்தில் 167 மாணவர்களைக் கொண்டதே கம்பளை ஸாஹிராக் கல்லூரியாகும் அப்போது இப்பாடசாலை கொழும்பு ஸாஹிராவின் கிளையாகவே இயங்கியது.ஆனால் சொற்ப காலத்தில் பதியின் அயராத முயற்சியின் விளைவாக தனித்து இயங்கும் ஒரு பாடசாலையாக மாறுகிறது.அதன் நிலப்பரப்பை 4 ஏக்கராக விஸ்தரிக்கும் முயற்சிலும் அவர் வெற்றி காண்கிறார் .

கம்பளையில் மட்டுமல்லாது அதனை சூழவுள்ள மக்களினதும் படிக்கும் பிள்ளைகளின் பெற்றோரினதும் நன்மதிப்பையும் அன்பினை கூடிய ஆதரவையும் திரட்டிய அதிபர் பதியுதீன் கம்பளையைச் சூழவுள்ள கிராமம் கிராமமாக சிலவேளைகளில் வீடு வீடாகச் சென்று,கல்வியின் அவசியத்தையும் இப்பகுதியில் தனித்துவமிக்க கல்லூரியொன்றைக் கட்டியெழுப்புவதன் தேவை பற்றியும் வலியுறுத்தி வந்தார்.

மாணவர் எண்ணிக்கை கூடுவதைப் போலவே மாணவிகளின் வருகையையும் அதிகரிக்கச் செய்ய மாணவிகளுக்கு ஒழுக்கமிகு சீருடையொன்றையும் அதிபர் அறிமுகப்படுத்துகிறார்.கலாநிதி பதியுதீன் தனது முயற்சியை மேலும் தீவிரபடுத்துகிறார்.

ஜும்மா நாட்களில் பள்ளிவாசல்களுக்குச் சென்று விளக்கமளித்தார்.எதிர்காலத்தில் சமூகத்துக்குப் பயனுள்ள சிறந்த முஸ்லிம் கல்விமான்களை உருவாக்க வேண்டுமாயின் சகல வசதிகளுடன் கூடிய கல்லூரியொன்றை அமைக்கப்பட வேண்டும் எனவும் கூறிவந்தார்.

அதிபர் பதிக்கு பல்வேறு எதிர்ப்புகள் தோன்றிய போதிலும் அவர் அவற்றை துச்சமாக மதித்து தனது இலச்சியப் பயணத்தை தொடர்ந்தார்.பௌதிக வளத்தேவைகள் ஏற்படும் வேளைகளில் வர்த்தகப் பிரமுகர்கள் மூலம் உதவி கிடைத்த வண்ணமிருந்தன

பொற்காலம் உருவானது.என்றாலும் ஸாஹிராவுக்கு வழங்கும் வசதிகள் போலவே தமிழ் சிங்களப் பாடசாலைகளின் குறையையும் நீக்கினார்.

கல்லூரிக்குத் தேவையான கற்றலுக்கான நவீன உபகரணங்கள் முதலான வசதிகளையும் பெற்றுகொடுத்தது மட்டுமல்லாமல்,அவரின் கனவுக்கேற்ப ஸாஹிரா வளைவின் மலையுச்சியில் கம்பீரமான பள்ளிவாசலையும் கட்டி பாடசாலை நாட்களில் ஜும்மா தொழுகையையும் ஆரம்பித்தார்.

இக்காலத்தில் சிங்களம்,தமிழ்,ஆங்கிலம் முதலான மொழி மூல வகுப்புகள் நடத்தப்பட்டதால் முஸ்லிம்கள் மட்டுமல்லாது சிங்கள,தமிழ் மாணவர்களுக்கான தகவு திறந்து வைக்கப்பட்டிருந்தது.

கல்லூரியின் ஆளணியில் முஸ்லிம், சிங்கள,தமிழ்,மலாய் மற்றும் இந்திய ஆசிரியர்களால் கல்வியும்,ஒழுக்கமும் போதிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் உயர்தர வகுப்புக்கள் கலை ,விஞ்ஞானம்,வணிகம்,தொழிநுட்பம்,மற்றும் விவசாய விஞ்ஞானம் முதலான பல்வேறு துறைசார்ந்த வகுப்புக்களும் நடைபெற்றன.

கல்வித்துறையிலும் சரி விளையாட்டு முதல் கலை இலக்கிய துறையிலும் கொழும்பில் உள்ள முன்னணி பாடசாலைகளுடனே போட்டிகளில் ஈடுபட்டது.

இக்கல்லூரியின் பௌதீக வளர்ச்சியை உற்று நோக்கினால் “பதி” ஓர் அதிசய மனிதர் என்பது புலனாகும்.1944 ஆம் ஆண்டு முதல் 1960 வரையான சுமார் 15 வருட காலத்துக்குள் ஒரு ஓலைக் கொட்டிலில் ஆரம்பமாகி 15 வருடத்துக்குள் பலமான மாடிகளுடன் கூடிய 22 கட்டிடங்கள் வளர்ச்சி காண வைத்துள்ளார்.1997,ஜூன் 16ம் திகதி அல்லாஹ்வின் அழைப்பை ஏற்றார்..

அவர் மறைந்தாலும் அவர் அமைத்த விசாலமான ஸாஹிராவும் நாடுபூராகவும் உள்ள ஆளுமைகளும் சமூகத்தை மேலும் மேன்னேரச் செய்வதில் பங்களிப்புச் செய்யும் என்பது நமது நம்பிக்கையாகும்.



**தொகுப்பு:அல் ஹாஜ் ஹில்மி முஹம்மத்**
**முன்னாள் பணிப்பாளர் அரசாங்க தகவல்திணைக்களம்**
**M.H.M.நியாஸ் - முன்னாள் சமூர்த்தி திணைக்கள உயரதிகாரி,**
**பணிப்பாளர்:இலங்கை சமாதான பேரவை**



# சிதைந்த நிலத்தில் முளைத்த கதைகள்!

நவம்பர் 27, 2025ல் வெள்ளத்தால் சிதைந்த நிலத்தின் நடுவிலும், மனித மனங்களில் யாரும் கவனிக்காத கதைகள் முளைக்கலாம்."

யாருக்கும் தெரியாமல் உருவான அனுபவங்கள், நினைவுகள், உணர்வுகள் ஏராளம் இருக்கலாம்..

அவை பெரிய மேடைகளில் பேசப்படாதவை,

அதிகாரப்பூர்வ அறிக்கைகளில் இடம்பெறாதவை,

ஆனால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையில் ஆழமாக பதிந்தவை. அவற்றில் சில "சிதைந்த நிலத்தில் முளைத்த கதைகள்ழு ஆக இங்கு எழுப்படுகின்றன.

கதை 1

"வெள்ளம் சென்றது"

"நெருக்கடி நின்றது."

(இது ஒரு தினசரித் தொழிலாளி,

நான்கு பிள்ளைகளின் தந்தையின்

மௌன அழுகை வார்த்தைகளாக வடிந்திர்கிறது.)

வெள்ளம் தணிந்துவிட்டது.

தெருக்கள் சுத்தமாகி வருகின்றன.

வீடுகளும் கடைகளும் மெதுவாக மீண்டும் மூச்சு விடத் தொடங்கியுள்ளன.

ஆனால் என் வீட்டில் மட்டும்

இன்னும் ஒரு கனமான மௌனம் தங்கியிருக்கிறது.

என் வீட்டுக்கு வெள்ளம் வரவில்லை.

சுவர்கள் சரிந்து விழவுமில்லை.

ஆனால் என் வாழ்க்கையின் அடித்தளம்

அந்த ஒரு நாளில் உடைந்துவிட்டது.

நான் கடையில் தினசரி கூலியில் வாழ்ந்தவன்.

காலையில் வேலை,

மாலையில் சம்பளம்.

அதுதான் என் பிள்ளைகளின் சிரிப்புக்கான காரணம்.

இன்று அந்த வேலை இல்லை.

சம்பளமும் இல்லை.

ஆனால் என்னுடன் சேர்ந்து

பசிக்கும் வயிறுகள் ஆறு இருக்கின்றன.

இன்றுடன் நாளிதழ்கள் நான்கு கடந்தும் கடைகள் இன்னும் முழுமையாக திறக்கப்படவில்லை.

சிறு தொழில்கள் இன்னும் நிமிரவில்லை.

"நாளை வேலைக்கு போகலாமா?"

என்று என் மனைவி

கேட்காமல் கேட்கும் போது, என் வாய் வார்த்தைகளை அடைத்து,

என் கண்கள் தரையைப் பார்க்கின்றன.

என் மனைவி பிள்ளைகளின் எதிர்காலம் என்ன ஆகும் என்ற

பயம் தான் என்னை அதிகமாகக் கொல்கிறது.

"இது தற்காலிகம் தான்"

என்று என் மனம் என்னை ஆற்ற முயல்கிறது.

கையில் இருந்த சிறு சேமிப்பும்

ஒவ்வொரு நாளும் கரைகிறது.

கடனுக்குக் கேட்க கூட

என் பயம் எனக்கு அனுமதி தருவதில்லை.

எங்களை யாரும்

"வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள்"

என்று கணக்கில் சேர்க்கவில்லை

போலும்.

ஏனெனில் எங்கள் வீடுகள் விழவில்லை.

ஆனால் எங்கள் வாழ்க்கை

விழுந்துவிட்டதை

அவர்கள் புரிந்து கொள்ளவில்லை

போலும்.

இதற்கிடையில் குடும்பத்தில்

ஒரு திருமண வைபவம்.

எல்லோரும் ஊதா நிற ஆடைகள் வாங்க

தீர்மானித்துவிட்டார்கள்.

இரண்டு வைபவமாம்.

இரண்டு நிற ஆடைகளாம்.

அது எனக்கு வெள்ளத்தைவிட

பெரிய வெள்ளமாகிவிட்டது.

மின்சாரக் கட்டணம்,

நீர் கட்டணம்,

பிள்ளைகளுக்குப் புதிய ஆண்டுக்கான

பாடசாலை உபகரணங்கள்..

இதற்கெல்லாம் என்ன செய்வது என்ற

சிந்தனையே என் நெஞ்சை நொறுக்குகிறது.

மனைவியிடம் என்ன சொல்வது?

பிள்ளைகளுக்கு எப்படி பதில் கொடுப்பது?

எனக்குள்ளே ஒரு இனம்புரியாத

மௌனப் புலம்பல் எழுகிறது.

இது ஒரு தினசரித் தொழிலாளியின் மனதில்

வெள்ளம் விட்டுச் சென்ற

ஒரு மறைந்த புண்.

எவருக்கும் தெரியாத,

ஆனால் நாள்தோறும் எரியும் புண்.

அவருக்கு இப்போதைய தேவை ஒரு வேலை. ஒரு கைதாங்கல்.

ஒரு கருணையின் பார்வை.

ஒரு சிறு உதவி கூட

அவர் பிள்ளைகளின் நாளையை

மீண்டும் ஒளிர வைக்கும்

ஒரு திரியாக மாறலாம். ஆனால் உதவி கேட்டு இதை எல்லாம் அவர் சொல்லவில்லை. ஆறுதலுக்காக சொன்னார் என்பதை அவர் பக்குவமான மொழி எடுத்துக்காட்டியது.

வெள்ளம் வந்தது

வெள்ளம் சென்றது

ஆனால் இவரைப் போன்ற இன்னும் பலரின் நெருக்கடி

இன்னும் இங்கேயே நிற்கிறதா....

என்ற கேள்வி மட்டும்

எரிந்து கொண்டே இருக்கிறது!


- வெள்ளம் கழிந்த நகரின் மௌனத்திலிருந்து,

ஒரு தந்தையின் உடைந்த குரலுடன் இணைந்து.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

---





# ஷாப்-இ யால்டா பாரசீகக் கொண்டாட்டத்தின் குளிர்கால சங்கிராந்தி





*யால்டா இரவு, அல்லது ஷப்-இ யால்டா, ஷேப் யால்டா என்றும் உச்சரிக்கப்படுகிறது, இது ஈரானிலும் பல மத்திய ஆசிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலும் ஆண்டின் மிக நீண்ட இரவைக் குறிக்கிறது. குளிர்கால சங்கிராந்தியில், கிமு 500 ஆம் ஆண்டுக்கு முந்தைய ஒரு பாரம்பரியத்தில், ஈரானியர்கள் காலையில் பிறக்கும் புதிய சூரியனைக் காண விடியற்காலை வரை விழித்திருப்பார்கள். யால்டா என்றால் பாரசீக மொழியில் "பிறப்பு" என்று பொருள். பல மணிநேரங்களைக் கடக்க, மக்கள் ஒன்றுகூடி கதைகளைச் சொல்கிறார்கள், புகழ்பெற்ற பாரசீக கவிஞர் ஹஃபீஸின் கவிதைகளில் வழிகாட்டுதலைத் தேடுகிறார்கள், சூடான தேநீர் குடிக்கிறார்கள், நிச்சயமாக சாப்பிடுகிறார்கள்.*

*இரவு முழுவதும் விழித்திருக்கும் சடங்கு, "இரவு மேய்ச்சல்" அல்லது பாரசீக மொழியில் ஷப்-சேரா என்ற அற்புதமான விளக்க வார்த்தையால் செல்கிறது. உண்மையில், யால்டா இரவில் உற்சாகமாக இருக்க மேய்ச்சல் மற்றும் சிற்றுண்டி சாப்பிடுவது சிறந்த வழியாகும், மேலும் விடுமுறை அட்டவணை அதை மனதில் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து வகையான உலர்ந்த பழங்கள் மற்றும் கொட்டைகள், கடி அளவு பேஸ்ட்ரிகள் மற்றும் புதிய பழங்களின் பளபளப்பான தட்டுகளுடன் மெழுகுவர்த்தி ஏற்றி வைக்கப்பட்டிருப்பதை கற்பனை செய்து பாருங்கள்.*

*இந்த பண்டைய கொண்டாட்டத்தில், குடும்பங்கள் தங்கள் மூத்த உறுப்பினரின் வீட்டில் கூடி, இரவு வெகுநேரம் விழித்திருந்து உணவு, கதைகள் மற்றும் சிரிப்பைப் பகிர்ந்து கொள்கிறார்கள். இது இருளின் மீது ஒளியின் வெற்றியைக் குறிக்கிறது, ஏனெனில் இந்த இரவுக்குப் பிறகு, நாட்கள் நீளமாக வளரத் தொடங்குகின்றன.*

*பண்டைய பாரசீக "யால்டா இரவு கொண்டாட்டம்" கொழும்பில் உள்ள ஈரான் கலாச்சார மையத்தின் கேட்போர் கூடத்தில் டிசம்பர் 17, 2025 அன்று நடைபெற்றது.*

*இலங்கை ஈரானியவியல் சங்கத்தால் ஈரானிய கலாச்சார மையத்தின் கலாச்சார ஆலோசகர் டாக்டர் அலி கெப்ரியாயியின் முன்முயற்சி மற்றும் வழிகாட்டுதலின் கீழ் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.*

*இந்த நிகழ்வில் ஈரானியவியல் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் ஈரானியலில் சிறப்பு விருந்தினர்கள் பலர் கலந்து கொண்டனர். உயர் மேசையில் ஈரான் கலாச்சார மையத்தின் கலாச்சார ஆலோசகர் டாக்டர் அலி கெப்ரியாயி, கலாச்சார விவகார மேலாளர் மற்றும் மக்கள் தொடர்பு அதிகாரி திரு. அலிரேசா ஷாஹினி, சட்ட நிபுணர் திரு. மஹிந்தா டி லனெரோல், இலங்கை ஈரானியவியல் சங்கத்தின் இணைச் செயலாளர் டாக்டர் லாபிர் மதனி மற்றும் இலங்கை ஈரானியவியல் சங்கத்தின் இணைச் செயலாளர் திருமதி. பாத்திமா ஷிஃபானி ஐமா ஆகியோர் இடம்பெற்றனர்.*

*நிகழ்வுகளில் பல முக்கிய சிறப்பம்சங்கள் இருந்தன. ஒன்று கலாச்சார ஆலோசகரின் உரை, அங்கு அவர் பண்டைய ஜோராஸ்ட்ரியர்கள் காலத்திலிருந்து தற்போதைய இஸ்லாமிய காலம் வரை ஈரானில் யால்தாவின் முக்கியத்துவத்தையும் அது எவ்வாறு நடைமுறையில் உள்ளது என்பதையும் விளக்கினார். ஈரானில் தனது அனுபவத்தையும் இலங்கை கலாச்சாரத்துடன் இணைத்தார்.*

*பார்வையாளர்களிடையே மிகுந்த ஆர்வத்தைத் தூண்டிய அடுத்த விஷயம் திருமதி ஷிஃபானி மற்றும் திருமதி அனுராதா ஆகியோரின் இரண்டு உரைகள். சர்வதேச ஈரானிய மாநாடு தொடர்பாக ஈரானுக்கு சமீபத்தில் மேற்கொண்ட விஜயத்தை திருமதி ஷிஃபானி அறிக்கையின் வடிவத்தில் விரிவாக விளக்கினார். இலங்கை ஆய்வுகளுக்கு ஈரானியலைப் படிப்பதன் முக்கியத்துவத்தையும் புத்த புராணங்களின் முக்கியத்துவத்தையும் திருமதி வீரகோன் விளக்கினார்.*

*சங்கத்தின் இணைச் செயலாளரும், சட்ட வல்லுநருமான திரு. மஹிந்தா டி லானெரோல், இலங்கையில் மிகவும் திறமையான பாரசீக அறிஞராக பேராசிரியர் லாபிர் மதானியை அறிமுகப்படுத்தினார். அவர் யால்தாவை விவரித்து, அதை இலங்கை கலாச்சாரத்தின் கூறுகளுடன் இணைத்து மிகவும் பிரகாசமான உரைகளை நிகழ்த்தினார்.*

*களனியா பல்கலைக்கழகத்தில் ஈரானிய பட்டதாரியின் "டெஃப்" நிகழ்ச்சியுடன் கிரேட் மாலை முடிந்தது. நிகழ்ச்சிக்குப் பிறகு, பாரசீக டெஃப் இசைக்கருவியின் தன்மை மற்றும் அது நமது இலங்கை "ரபானா"விலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதை அவர் பார்வையாளர்களுக்கு விளக்கினார். அவரது பொழுதுபோக்கின் போது பார்வையாளர்களை மகிழ்விக்க சில ரபான் பதங்களை வாசித்தார்.*

*சட்ட நிபுணர் மஹிந்தா டி லேனரோல் நன்றியுரை நிகழ்த்தினார், மேலும் வந்திருந்தவர்களுக்கு பழங்கள், சிறு உணவுகள் மற்றும் பானங்கள் வழங்கி மகிழ்விக்கப்பட்டது.*

# ஓரினச் சேர்க்கை தொடர்பான பாடவிதானம் தற்செயலானது அல்ல. நன்கு திட்டமிடப்பட்டதே

## இம்ரான் எம்.பி குற்றச்சாட்டு

(எஸ்.ஏ.பறூஸ்)

6ஆம் தர பாடப்புத்தகத்தில் உள்ளடக்கப்பட்ட ஓரினச் சேர்க்கை தொடர்பான விவகாரம் தற்செயலானது அல்லது. அது நன்கு திட்டமிடப்பட்டு சேர்க்கப் பட்டது. என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேல் கூறியதாவது,

ஒரு பாடப்புத்தகம் பலரது தொடர்புகளைத் தாண்டியே வெளிவருகின்றது. எழுத்தாளர்குழு, தட்டச்சு செய்வோர், பக்க வடிவமைப்பாளர்கள், புருவ் பார்வையாளர்கள், இணைப்பாளர் கள், பணிப்பாளர், மேற்பார்வையாளர் எனப் பலரது தொடர்புகளைத் தாண்டித் தான் ஒரு பாடப் புத்தகம் வெளிவருகின்றது. இந்த விடயங்களை புத்தகத்தின் ஆரம்ப பக்கங்களில் நாம் காணலாம்.



இந்நிலையில் ஒரு புத்தகத்தில் எந்தவொரு விடயத்தையும் யாரும் தனிப்பட்ட ரீதியில் இடையில் செருக முடியாது என்பது தெளிவாகின்றது. இந்த வகையில் 6 ஆம் தரப் பாடப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்ட ஓரினச் சேர்க்கை தொடர்பான விவகாரம் தற்செயலானது அல்ல. அது திட்டமிட்ட அடிப்படையில் சேர்க்கப்பட்டதே என்பது தெளிவாகின்றது.

நமது நாட்டுக்கென்று சிறந்த கலாசார பாரம்பரியங்கள் இருக்கின்றன. இந்தக் கலாசாரங்களை சிதைப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது என்பதற்கு இது சிறந்த உதாரணமாகும்.

பொதுமக்களின் எதிர்ப்பை சமாளிப்பதற்காக விசாரணை நடத்தப்படுகின்றது எனக் கூறி காலங்கடத்தும் செயற்பாடு அரசா ங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின் றது. எனினும், இந்த விடயத்தில் யாரும் தவறு செய்தவராக அடையா ளப்படுத்தப்பட மாட்டார் என்பது யதார்த்தமாகும். காலம் இதற்கு பதில் சொல்லும். ஏனெனில் திட்டமிட்ட அடிப்படையில் பொதுவாக எடுக்கப்பட்ட ஒரு தீமானத்திற்கு யாரை குற்றஞ்சாட்ட முடியும் என கேட்க விரும்புகின்றேன்.

கல்வி அமைச்சருக்கு இது போது குழுக்களோடு தொடர்பு உள்ளது என்ற விமர்சனம் கடந்த காலங்களில் வெளிவந்ததை பொதுமக்கள் மறந்திருக்க மாட்டார்கள் என நம்புகின்றேன். எனவே, அவர் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி தனக்கு பிடித்த கொள்கையை பாடப்புத்தகத்தில் உள்வாங்கியுள்ளார் என்பதில் என்ன சந்தேகமுள்ளது. இவர் தொடர்ந்து கல்வி அமைச்சராக இருந்தால் நமது கலாசார, பாரம்பரியங்களை சிதைத்து விடுவார். இதனால் தான் நாம் கல்வி அமைச்சருக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கின் றோம்.

# கொழும்பு ஷங்கிரிலாவில் மாபெரும் இரத்தினக்கல் கண்காட்சி-2026




(பீ.எம். முக்தார்)

ஜெம் ஸ்ரீலங்காவின் முதல் இரண்டு கண்காட்சியும் மகத்தான வெற்றியை அடைந்ததுடன் ஜெம் ஸ்ரீலங்கா-2026 இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையில் ஒரு புதிய மைல்கல்லாக உருவாக்கம் பெறவுள்ளது.

இந்த சர்வதேச கண்காட்சி ஜனவரி மாதம் 7ம், 8ம் மற்றும் 9ம் திகதிகளில் கொழும்பு ஷங்கிரிலாவில் நடைபெறவிருக் கிறது. 2000க்கும் அதிகமான உறுப்பினர்களை தன்னகத்தே கொண்டுள்ள இலங்கையின் மிகப் பெரிய இரத்தினக்கல் சங்கமாக பரிணமித்திருக்கும் Ceylon Gem and Jewellery Traders Association (CGJTA) மூலம் ஏற்பாடு செய்யப்படும் இக் கண்காட்சியானது, இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரண துறையை பிரதிநிதிப்படுத்தும் மிகப் பெரிய கண்காட்சியாகும். இது ஜெம் ஸ்ரீலங்கா என அழைக்கப்படுகிறது.

சர்வதேச முக்கியத்துவம் மற்றும் மேம்பாட்டை நோக்கிய மிக முக்கியமான மைல்கல்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டளவு கண்காட்சிக் கூடங்களை மாத்திரம் கொண்டிருந்த ஜெம் ஸ்ரீலங்கா கண்காட்சியானது, இம்முறை சர்வதேச அளவில் வியாபாரத் தளமாக மாற்றம் பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய பிரதம அதிதியாக கலந்து கொள்வது இக் கண்காட்சியை மேலும் சிறப்படையச் செய்யும்.

# உக்குவளையில் நடைபெற்ற வெள்ளம் தந்த சுவடுகள் கவியரங்கு கலை நிகழ்ச்சிகள்





உக்குவளை ஸ்ரீ லங்கா இஸ்லாமிய எழுத்தாளர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் வெள்ளிமேடை எனும் மகுடத்திலான பிரதேச பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் அமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோர் பங்குபற்றிய "வெள்ளம் தந்த சுவடுகள்" எனும் தலைப்பிலன 2 வது கவியரங்குகளும் கலை நிகழ்ச்சிகளும் அன்மையில் உக்குவளை அல்மினா மண்டபத்தில் அமைப்பின் செயலாளரும் ஆசிரியையுமான கவிதாயினி பஸ்மினா அன்சாரின் பங்களிப்புடன் அமைப்பின் தலைவரும், கவிஞரும், கல்விப் பணிப்பாளருமான வரக்காமுறயூர் எம்.ராசிக் தலைமையில் இடம்பெற்றது.

# மலையக அவ்லியாக்களின் வரலாற்றுத் தொகுப்பு தகவல்களை தெரிந்தவர்கள் அனுப்பி வைக்கமுடியும்

(உக்குவளை ஜெலீல்)

மலையகத்திலமைந்துள்ள பள்ளிவாசல்களில் அடங்கப் பெற்றுள்ள இறைநேசர்களான அவ்லியாமார்கள் பற்றிய வரலாற்றுத் தொகுப்பு ஒன்றை வெளியிட கண்டி மடவளையைச் சேர்ந்த எழுத்தாளரும் சமாதான நீதவானுமான கலாபூஷணம் எச். எம். மன்சூர் முன்வந்துள்ளார்.

எனவே அது பற்றிய சரியான தகவல்கள் தெரித்தவர்கள், மஸ்ஜிதுகளின் நிர்வாகிகள், ஆதாரங்கள் புகைப்படங்கள், என்பனவற்றை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும்.

**கலாபூஷணம் எச்.எம். மன்சூர்,**
**113/2 ஹில் லொட்ஜ், மடவல பாசார், கண்டி.**

# சீனன் கோட்டை-பெருகமலை ஜும்ஆப் பள்ளிவாசல் விஸ்தரிப்புக்கான அடிக்கல் நடும் விழா





(பீ.எம்.முக்தார்)

பேருவலை-சீனன் கோட்டை-பெருகமலை மஹ்லரத்துஷ் ஷாக்கிரீன் ஜு/ம்ஆப் பள்ளி வாசல் விஸ்தரிப்புப் பணிகளுக்கான அடிக்கல் நடும் விழா விமர்சையாக நடைபெற்றது.

குறித்த பள்ளிவாசலில் மக்களின் தொழுகை மற்றும் ஏனைய வணக்க, வழிபாடுகளுக்கு நீண்ட காலமாக இட நெருக்கடி இருந்து வரும் நிலையில் பள்ளிவாசலோடு இணைந்திருந்த வீடு சில வருடங்க ளின் முன்னர் சீனன் கோட்டைப் பள்ளிச் சங்கத்தினால் வாங்கப்பட்டது. பள்ளிச் சங்கத்தின் முயற்சியினால் ஊர்த் தனவந்தர்களின் உதவியோடு பெருகமலை மஹ்லருத்துஷ் ஷாக்கிரீன் பள்ளி வாசலின் முன்னாள் நிர்வாக சபைத் தலைவர் சிரேஷ்ட பிரமுகர் அல்ஹாஜ் ஐ.எல்.எம் தாஹா தலைமையில் பள்ளிவாசல் விஸ்தரிப்புக்கான அடிக்கல் நடும் வைபவம் விமர்சையாக நடைபெற்றது.



இந்நிகழ்வில் சீனன் கோட்டைப் பள்ளிச் சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம். சிஹாப், பொருளாளர் ஹில்மி மவ்ஸூன், பள்ளிச் சங்க இணைச் செயலாளரும் கலீபத்துஷ் ஷாதுலியுமான அஷ்ஷேக் இஹ்ஸானுத்தீன் (நளீமி), பள்ளிச் சங்க உறுப்பினர் இஸ்ஸத் ஸவாஹிர் உற்பட இன்னும் பல பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# கற்பிட்டியில் இடம்பெற்ற இலவச மருத்துவ முகாம்





(சியாஜ்)

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் கற்பிட்டிக் கிளையின் ஏற்பாட்டில், "க்ளோபல் ஹியுமனிடேரியன் சொசைட்டி" யின் நிதி ஒதுக்கீட்டில் கற்பிட்டி பிரதேச சபையின் உறுப்பினர் எஸ். எச்.எம்.முஸம்மில் தலைமையில் இலவச மருத்துவ முகாம் (03) கற்பிட்டி மஸ்ஜிதுல் ரஹ்மான் ஜு/ம்மா பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இவ் இலவச மருத்துவ முகாமில் உடல் நல பரிசோதனைகள், அடிப்படை மருத்துவ பரிசோதனைகள், தொற்று நோய்கள் மற்றும் ஏனைய நோய்களுக்கான மருத்துவ ஆலோசனைகள், குழந்தைகள் சுகாதார பராமரிப்பு மற்றும் விட்டமின் விநியோகம் இடம்பெற்றதுடன் இலவச மூக்கு கண்ணாடிகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.








# ஆளுமை மீதான வாசிப்பு...



இர்ஸாத் இமாமுதீன்

# Dr. Mohamed Fazul Jiffry - PhD
# சேவைகளால் உயர்ந்த ஒரு வாழ்வியல் பயணம்

மனிதநேயத்தை மூலதனமாகக் கொண்ட ஒரு தொலைநோக்கு தலைமுறைத் தலைவனின் கதை...

ஒரு மனிதனின் வாழ்க்கை எவ்வளவு உயரமானது என்பதை தீர்மானிப்பது,



அவர் பெற்ற பதவிகளாலும் சேர்த்த சொத்துக்களாலும் அல்ல் அவர் தனது வாழ்க்கைக் காலத்தில் எவ்வளவு மனித மனங்களில் நம்பிக்கையை விதைத்தார், எத்தனை மனிதர்களுடைய வாழ்க்கையை உயர்த்தினார் என்பதில்தான் அது தங்கியுள்ளது.

அந்த உண்மையை தனது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அமைதியாகவும் உறுதியாகவும் நிரூபித்து வருபவராகத் திகழ்கிறார் னுச. ஆழாயஅநன குயணரட துகைகசல.

வியாபாரம், மனிதாபிமானம், சமூக சேவை, கல்வி ஆகிய அனைத்தையும் தனித்தனியான பாதைகளாக இல்லாமல் ஓர் உன்னத வாழ்வியல் நோக்கின் கீழ் அனைத்தையும் ஒருங்கிணைத்துச் சென்ற அரிதான பன்முக ஆளுமை இவர்.

பிறப்பிடம் எளிமையாக இருந்தாலும் அதனை செழுமையின் அடித்தளமாக்கியவர்

மல்வானையைப் பிறப்பிடமாகக் கொண்ட னுச. ஆழாயஅநன குயணரட துகைகசல அவர்களின் வாழ்க்கை, எளிமையிலிருந்தே துவங்கியது.

மல்வானை அல் முபாரக் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்ற காலத்திலேயே, ஒழுக்கம், பணிவு, பொறுப்புணர்வு ஆகிய மதிப்புகள் அவரது உள்ளத்தில் வேரூன்றின.

கல்வி என்பது வெறும் தனிநபர் முன்னேற்றத்திற்கான கருவி அல்ல் அது சமூகத்தை உயர்த்தும் ஒரு சக்தி என்ற எண்ணம் அவருள் மெதுவாக உருவான காலம் அது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவர் உயர்கல்வியைத் தொடங்கிய காலகட்டம், நாட்டின் வரலாற்றில் மிகக் கடுமையான மற்றும் நிலையற்ற சூழ்நிலைகளால் நிறைந்த காலமாக இருந்தது.

பயங்கரவாதம், அச்சம், நிச்சயமின்மை ஆகியவற்றுக்கிடையே கல்வியைத் தொடர்வதே ஒரு சவாலாக இருந்தது.

அந்தச் சூழ்நிலையில் கல்விப் பயணம் தடைப்பட்டு, கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு மாற்றம் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆனால் அந்த மாற்றம் அவரது வாழ்க்கையைத் தளரச் செய்யவில்லை மாறாக, சவால்களை வாய்ப்புகளாக மாற்றும் மனோபலத்தை அவருக்குள் வளர்த்தது.

தளராத முயற்சி, உறுதியான நம்பிக்கை மற்றும் கடின உழைப்பு ஆகியவற்றின் மூலம் தனது பட்டப்படிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்தார்.

தொழில் முயற்சியும் ஒழுக்கமும் தொலைநோக்கும்

பட்டயக் கணக்காளராகத் தன்னைத் துல்லியமாகவும் திறம்படவும் உருவாக்கிக் கொண்ட னுச. ஆழாயஅநன குயணரட துகைகசல, தனது தொழில்முனைவு பயணத்தை உலகளாவிய வர்த்தக மையமான சிங்கப்பூரில் ஆரம்பித்தார்.

பல்தேசிய நிறுவனங்களின் கடும் போட்டி, வேகமான பொருளாதார மாற்றங்கள் ஆகியவற்றுக்கிடையே நிலைத்திருக்க வேண்டியது எளிதானதல்ல.

இருப்பினும், குறுகிய கால இலாபத்தை விட நீண்டகால நம்பிக்கையையும் நேர்மையையும் முன்னிலைப்படுத்திய அவரது வியாபார அணுகுமுறை, அவரை ஒரு நம்பகமான தொழிலதிபராக உயர்த்தியது.

அதன் பின்னர் பப்புவா நியூ கினி, இந்தோனேசியா, மலேசியா உள்ளிட்ட பல நாடுகளுக்கு தனது வியாபாரங்களை விரிவுபடுத்தினார்.

இந்த வளர்ச்சி வெறும் தனிப்பட்ட வெற்றியாக மட்டுமல்ல் பல நாடுகளில் வேலைவாய்ப்புகள், வாழ்வாதாரங்கள், பொருளாதார நிலைபேற்றுத்தன்மை உருவாகக் காரணமான சமூக பங்களிப்பாகவும் அது அமைந்தது.

அவரது வியாபாரம், மனித மதிப்புகளுடன் இணைந்திருந்ததாலேயே, சர்வதேச அளவில் மதிப்பும் நம்பிக்கையும் பெற்றது.

சமூக சேவை என்பது வெறும் பதவியல்ல, அது வாழ்வின் அர்த்தம்...

Dr. Mohamed Fazul Jiffry இன் வாழ்க்கையில் சமூக சேவை என்பது ஒரு பகுதியளவான செயலல்ல் அது அவரது வாழ்வின் மையமாகவே அமைந்துள்ளது.ீபே நாட்டில் இஸ்லாமிய அமைப்பின் தலைவராக பல ஆண்டுகள் பணியாற்றிய காலத்தில், அவர் மதச் செயற்பாடுகளை வழிபாட்டுக்குள் மட்டும் கட்டுப்படுத்தவில்லை. சமூக ஒற்றுமை, கல்வி விழிப்புணர்வு, மனித மரியாதை, அமைதி ஆகியவற்றை மையமாகக் கொண்டு அவர் மேற்கொண்ட சேவைகள், ஒரு தலைவரின் உண்மையான பொறுப்பை வெளிப்படுத்தின.

தற்போது ணுயுஉயுசுயு குழுருனுயுவுஐழுே அமைப்பின் தலைவராக இருந்து, மதம், இனம், மொழி, தேசம் என்ற எல்லைகளைத் தாண்டி, மனிதன் என்ற ஒரே அடையாளத்தின் கீழ் சேவையாற்றி வருகிறார்.

இயற்கை அனர்த்தங்கள், போர், அகதிகள் பிரச்சினை, வறுமை போன்ற எந்த மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டாலும், “இது என் கடமை” என்ற உணர்வுடன் அவர் செயற்படுவது, அவரது மனிதநேயத்தின் உச்ச வெளிப்பாடாகும்.

கல்வியானது தலைமுறைகளை மாற்றும் ஒரு முதலீடு

Dr. Mohamed Fazul Jiffry இன் சேவைகளில் கல்வி என்பது பிரதான மைய இடத்தைப் பெறுகிறது. இலங்கை, இந்தியா மற்றும் ஆபிரிக்க நாடுகளில் பள்ளிவாசல்கள் அமைத்துக் கொடுத்ததோடு, பொருளாதார ரீதியாக பின்தங்கிய, ஆனால் திறமைமிக்க மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக தொடர்ச்சியான, திட்டமிட்ட உதவிகளை வழங்கி வருகிறார்.

கல்வி என்பது தற்காலிக உதவி அல்ல் அது சமூகத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கும் நீண்டகால முதலீடு

என்ற ஆழ்ந்த நம்பிக்கையே அவரது செயல்களின் அடிப்படை.

கொழும்பு நகரம் ஒரு சமூகத்தின் வலியின் பிரதிபலிப்பு

கொழும்பு நகரில் வாழும் ஏழை குடும்பங்களைச் சேர்ந்த பல குழந்தைகள், கல்வியை விட்டு, வாழ்க்கைச் சுமைகளால் நீதிமன்றங்களைச் சுற்றியுள்ள இடங்களில் வேலைகளில் ஈடுபட வேண்டிய துயரமான நிலை னுச. ஆழாயஅநன குயணரட துகைகசல அவர்களை ஆழமாகச் சிந்திக்க வைக்கிறது. அந்தக் குழந்தைகள் கல்வியின் வழியே சுயமரியாதைமிக்க, சுயநிலையுடைய வாழ்க்கையை அடைய வேண்டும் என்ற உயரிய நோக்குடன், பெற்றோர்கள், சமூகத் தலைவர்கள் மற்றும் பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் முயற்சிகளில் அவர் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.

இது கருணையின் வெளிப்பாடு மட்டுமல்ல் ஒரு சமூகத்தின் எதிர்காலத்தை பாதுகாக்கும் தொலைநோக்கு முயற்சியாகும்.

சேவையே வாழ்வின் சுவையென வாழ்பவர்

“குடும்பத்தை பாதுகாப்பதும் சமூகத்தை உயர்த்துவதும் ஈமானின் ஒரு பகுதிதான்” என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடன், “சமூக சேவை சுமை” என்ற எண்ணத்தை “சமூக சேவை வாழ்க்கையின் சுகமான சுவை” என்ற உயர்ந்த நிலைக்கு மாற்றிக் கொண்டவர் னுச. ஆழாயஅநன குயணரட துகைகசல.

வியாபாரத்தில் காட்டும் அதே ஒழுக்கம், திட்டமிடல், பொறுப்புணர்வு ஆகியவற்றை சமூக சேவையிலும் வெளிப்படுத்துவதுதான் அவரது ஆளுமையின் உச்சம்.

தலைமுறைகளுக்கான முன்னுதாரண பாடம்

தன்னலம் பாராமல் மனிதகுல நலனை முன்னிறுத்தி, வியாபார வெற்றியையும் சமூகப் பொறுப்பையும் ஒரே பாதையில் இணைத்துச் செல்லும் னுச. ஆழாயஅநன குயணரட துகைகசல, இன்றைய தலைமுறைக்கும் வருங்கால சமூகத்திற்கும் ஒரு முன்னுதாரண வழிகாட்டியாகத் திகழ்கிறார்.

# எந்த நாடும் சர்வதேச சட்டத்தையும், ஐ.நா.சாசனத்தையும் மீறிச் செயற்பட முடியாது

## கண்டன அறிக்கையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் காட்டம்



எந்த நாடும் எவ்வளவு பெரியதோ அல்லது சக்திவாய்ந்ததோ என்றாலும், சர்வதேச சட்டத்தையும், ஐ.நா.சாசனத்தையும் மீறிச் செயற்பட முடியாது என அமெரிக்க ஜனாதிபதி, வெனிசியூலாவை ஆக்கிரமித்து, அதன் ஜனாதிபதியை சிறை பிடித்துள்ளதை வன்மையாகக் கண்டித்து ,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் அவர் செவ்வாய்க்கிழமை(6) ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, சர்வதேச சட்டத்தில் நாடொன்றை அபகரிப்பதற்கும், பலவந்த ஆட்சி மாற்றத்திற்கும் அறவே இடமில்லை. லத்தீன் அமெரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் உலகின் ஏனைய பகுதிகளில் உள்ள பல நாடுகள், தங்களது இறையாண்மை மற்றும் நிலப்பரப்பு ஒருமைப்பாட்டை மீறக்கூடிய வகையில், இராணுவ தாக்குதல்கள் மற்றும் வேறு கட்டாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அச்சுறுத்தப்படுவதைக் குறித்து ஆழ்ந்த கவலையுடன் உற்று நோக்கப்படுகிறது.

இந்த அச்சுறுத்தல்கள், குறிப்பாக, வெனிசியூலா மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத இராணுவ ஊடுருவல்கள் மற்றும் அந்த நாட்டின் ஜனாதிபதி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட சம்பவங்களின் பின்னணியில் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் தற்போதைய டிரம்ப் நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டவையாகும்.

எவ்வளவு பெரியதோ அல்லது சக்திவாய்ந்ததோ என்றாலும், எந்த நாடும் சர்வதேச சட்டத்தையும் ஐக்கிய நாடுகள் சபை சாசனத்தையும் வெளிப்படையாக மீறுவதற்கு எவ்வித உரிமையுமில்லை. இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய உலகை ஒழுங்கு, சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு சில தொடர்ச்சியான, இன்னும் தீர்க்கப்படாத சவால்கள் இருந்தபோதிலும் கூட, மொத்தத்தில் இதில் உலகின் நிலைப்பாடு உறுதிப்படுத்தப்பட்டதாகும்.

இந்த மிகக் கொடூரமான செயல்கள் மற்றும் சம்பவங்களை நாம் எந்தவிதமான தயக்கமுமின்றி மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சர்வதேச சமூகமானது, சம்பந்தப்பட்ட நாடுகளுடன் ஒற்றுமையுடன் ஒன்றிணைந்து, உலகளாவிய அமைதி மற்றும் பாதுகாப்பை அச்சுறுத்தும் ஒருதலைப்பட்சத் தூண்டுதல்களை கட்டுப்படுத்துவதற்காக செயல்பட வேண்டிய தருணம் இதுவாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

# கற்பிட்டி பிரதேச சபையின் தவிசாளர் சொந்த நிதியில் கற்றல் உபகரணங்கள் வழங்கல்





**(சியாஜ்)**

கற்பிட்டி பிரதேச சபை கழிவகற்றல் பிரிவு ஊழியர்களின் பிள்ளைகளின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு கற்பிட்டி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எஸ்.எம் றிகாஸ் தனது சொந்த நிதியில் இருந்து பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

கற்பிட்டி பிரதேச சபையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர் உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

---

# மாவனல்லை பதுரியா கல்லூரிக்கு புதிய அதிபர் நியமனம்

**(பாரா தாஹீர்)**



மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியின் புதிய அதிபராக எம்.நௌசாத் நதீர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பண்டாரவளை சங்கபோதி வித்தியாலயத்தில் இருந்து கல்விப் பணியை ஆரம்பித்து, பண்டாரவளை சேர்ராசிக் பரீட் வித்தியாலயம், மற்றும் மாவனல்லை தனாகம வித்தியாலயம் என்பவற்றில் அதிபராக கடமையாற்றி உள்ளார்.

2022 ஆம் ஆண்டு பதுரியா மத்திய கல்லூரியின் பிரதி அதிபராக கடமையாற்றிய இவர், இதே பாடசாலையின் அதிபராக தற்போது நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

# பதுளை வை.எம்.எம்.ஏ அமைப்பின் இரத்ததான நிகழ்வும், கற்றல் உபகரண கையளிப்பும்





**(எம்.கே.எம்.நியார்)**

பதுளை வை.எம்.எம்.ஏ.பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வு பதுளையிலுள்ள அதன் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பதுளை போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர் மற்றும் இரத்த வங்கி ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்தோடு கொழும்பு கிரசன்ட் அமைப்பினால் பதுளை நகரிலுள்ள முஸ்லிம், சிங்கள பாடசாலைகளில் கல்விபயிலும் வரிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

இந் நிகழ்வுகளை பதுளை வை.எம்.எம்.ஏ.கிளையின் தலைவர் அல்ஹாஜ் ஏ.ஏ.ஜுனைதீன், செயலாளர் எம்.கே.ஜே.எம்.சதாத், பொருலாளர் டி.தன்ஜீர், சிரேஷ்ட உப தலைவர் ஜே.ஏ.பலுலூன் ஆசிரியர், சமூக நலன்புரி செயலாளர் மொஹமட் சமீல் ஆகியோருடன் கமிட்டி அங்கத்தவர்களும் சேர்ந்து சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.



# பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தன்னார்வ ஆலோசனைக் குழு உறுப்பினராக பேராசிரியர் பாஸில் நியமனம்!

(நூருல் ஹுதா உமர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசார பீடத்தின் பீடாதிபதியாக பணியாற்றி வரும் பேராசிரியர் கலாநிதி எம். எம். பாஸில் அவர்கள், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தன்னார்வ ஆலோசனைக் குழு உறுப்பினராக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுமக்களுக்கான அரச சேவைகளின் திறன், வெளிப்படைத் தன்மை மற்றும் சரியான நேரத்தில் சேவைகளை வழங்கும் நடைமுறைகளை மேலும் மேம்படுத்தும் நோக்கில், நிபுணர்களின் அறிவு மற்றும் அனுபவத்தைப் பயன்படுத்த அரசாங்கம் மேற்கொண்டு வரும் மூலோபாயக் கொள்கை முயற்சியின் ஒரு பகுதியாகவே இந்த உயரிய நியமனம் இடம்பெற்றுள்ளது. இதன் கீழ், பல துறைகளில் சிறப்பு அறிவு கொண்ட நிபுணர்களை இணைத்துக் கொண்டு, அமைச்சுக்கு உயர்மட்ட ஆலோசனைகள் வழங்கும் வகையில் இந்த ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நியமனத்திற்கான உத்தியோக பூர்வ கடிதம், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி ஏ.எச்.எம்.எச். அபயரத்ன அவர்களால், அமைச்சில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதி அமைச்சர் திரு. ருவன் சேனாரத்ன மற்றும் அமைச்சின் செயலாளர் திரு. எஸ். அலோகபண்டார ஆகியோரும் கலந்துகொண்டு,



புதிய ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

கல்வி, கலாசாரம், சமூக அபிவிருத்தி மற்றும் நிர்வாகத் துறைகளில் பேராசிரியர் எம்.எம். பாஸில் அவர்கள் பெற்றுள்ள நீண்டகால அனுபவமும், கல்விசார் பங்களிப்புகளும், பொதுச் சேவைத் துறையை மேலும் வலுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றும் என எதிர்பார்க்கப் படுகிறது. குறிப்பாக, பொது மக்கள் எதிர்நோக்கும் நிர்வாக சவால்களுக்கு நடைமுறை சார்ந்த தீர்வுகளை முன்வைப்பதில் இவரது ஆலோசனைகள் பயனுள்ளதாக அமையும் என அமைச்சுத் தரப்பினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

பொதுச் சேவைத் துறையை மக்கள் நட்பு சேவையாக மாற்றும் தேசிய முயற்சியில் பங்கெடுத்து செயல்படவுள்ள பேராசிரியர் எம். எம். பாஸில் அவர்களுக்கும், புதிதாக நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவினருக்கும், கல்விசார் சமூகமும் பொதுமக்களும் தமது மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# மக்கள் காலடிக்கு சென்று மக்களின் பிரச்சினைக்கு தீர்வு





(கே.எ. ஹமீட்)

கிராமம் தோறும் மக்களோடு மக்களாக" எனும் தொனிப் பொருளில் மக்கள் காலடிக்கு சென்று மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து அவற்றை தீர்க்கும் செயற்பாட்டின் அடிப்படையில் அட்டாளைச்சேனை 08 (கோணாவத்தை) பிரதேச மக்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் தொடர்பான மக்கள் சந்திப்பு நிகழ்வு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை தலைமையில் (04) நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், அட்டாளைச் சேனை பிரதேச ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினர்களான அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் அமைப்பாளர் நியாமதூர், ஏ.எல்.பாயிஸ், கட்சியின் அமைப்பாளர்கள் உறுப்பினர்கள், விளையாட்டு கழக வீரர்கள், கோணாவத்தை பிரதேச பள்ளி வாசல் நிருவாக சபையினர் மற்றும் முக்கியஸ்தர்கள், மீனவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# புத்தளத்தில் புத்தாண்டில் ஆரம்பமான புதிய பஸ் சேவை





(சியாஜ்)

புத்தளம் வண்ணாத்திவில்லு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மயிலங்குளம் நகரத்திற்கான புதிய பயணிகள் பஸ் சேவையை புத்தளம் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஜே. எம் பைசல் புத்தாண்டு பிறப்புடன் கடந்த வியாழக்கிழமை (01) ஆரம்பித்து வைத்தார்.

மயிலங்குளத்தில் இருந்து புத்தளம் நகர் வரையான பஸ் சேவை ஆரம்பிக்கப் பட்டதன் ஊடாக இப்பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் நீண்ட நாள் தேவையாக இருந்து வந்த இந்த பயணிகள் போக்குவரத்து பஸ் சேவையின் தேவைப்பாடு நிறைவேற்றப் பட்டுள்ளதாகவும் இதற்காக புத்தளம் எம்.ஜே.எம்.பைசல் எம்.பிக்கு பொதுமக்கள் தமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

# இலங்கை புனரமைப்புப் பணிகளுக்காக, பிரித்தானிய இலங்கை முஸ்லிம் அமைப்புகள் நன்கொடை



டித்வா சூறாவளி, பாரிய வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட இலங்கையின் தேசிய புனரமைப்பு மற்றும் அனர்த்த மீள்கட்டமைப்புத் திட்டத்திற்காக, ஐக்கிய இராச்சியத்திலுள்ள பிரித்தானிய இலங்கை முஸ்லிம் அமைப்புகள் ஒன்றிணைந்து 25,000 பவுண்கள் (சுமார் 10.5 மில்லியன் ரூபா) கூட்டு நன்கொடையை வழங்கியுள்ளன.

இந்த நன்கொடைக்கான உறுதிப் படுத்தல் கடிதம், கடந்த 2025 டிசம்பர் 30 ஆம் திகதி லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிக ராலயத்தில் நடைபெற்ற விசேட சந்திப்பின் போது, ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் நிமல் சேனாதீரவிடம் உத்தியோகபூர்வ மாகக் கையளிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் சார்பில் பிரதி உயர்ஸ்தானிகர் திருமதி மனோரி மல்லிகாராச்சி மற்றும் பிரிகேடியர் திலந்த பெர்னாண்டோ ஆகியோர் கலந்துகொண்டனர். முஸ்லிம் சமூகத்தின் சார்பில், பிரித்தானிய இலங்கை முஸ்லிம் அமைப்புகளின் பேரவையின் தலைவர் ஷகீர் நவாஸ், அதன் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு பிரித்தானிய இலங்கை முஸ்லிம் அமைப்புகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் 'Your Tenner, Their Tomorrow' திட்டத்திற்கு COSMOS UK தனது முழுமையான ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தியதுடன், புனரமைப்பு முயற்சிகளில் அதிகப்படியான பொதுமக்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் திட்டம் சமூக வலைப்பின்னல்கள் மூலம் பிரச்சாரம் செய்யப்படும் என்றும் உறுதியளித்தது.

இதேவேளை, ஐக்கிய இராச்சியத்திலுள்ள இலங்கை புலம்பெயர்ந்தோர் உயர்ஸ்தானிக ராலயத்துடன் தொடர்ந்து ஈடுபாடு காட்டுவதை வரவேற்ற உயர்ஸ்தானிகர், இந்தத் திட்டத்தை எளிதாக்கியமைக்காக COSMOS UK அமைப்புக்கும், புனரமைப்புப் பணிகளுக்காகக் கூட்டு நன்கொடை வழங்கிய அனைத்து இலங்கை முஸ்லிம் அமைப்புகளுக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார்.

அத்துடன், இந்தச் சந்திப்பு குறித்த விபரங்கள் இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கி வைப்பு



( எம்.கே.எம்.நியார்)

அண்மையில் டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட பதுளை நகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பாடசாலை உதைபந்தாட்ட வீரர்களுக்கு பதுளை உதைபந்தாட்ட லீக்கினால் கற்றல் உபகரணங்கள், உதைபந்தாட்ட ஸ்டொகின்ஸ், பூட்ஸ் மற்றும் புதிய ஆடைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இன,மத பேதமின்றி சகல மாணவர்களுக்கும் இதன் பிரதிபலன் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வினை பதுளை உதைபந்தாட்ட லீக் தலைவரும் உதவி பொலிஸ் அத்தியட்சகருமான ஜே.எம். ஹசீம்டீன், செயலாளர் அநுர சில்வா உட்பட கமிட்டி அங்கத்தவர்கள் தனவந்தர்களின் உதவியோடு மிக குறுகிய காலத்தில் சிறப்பான முறையில் இதனை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் சர்வாதிகார போக்கு; இறுதி முடிவு என்ன!

எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

அமெரிக்கா தனது மிகப் பெரிய அளவில் ஆன ராணுவ வல்லமை கொண்ட தேசம் என்பதை நிரூபிக்க வேண்டும் என்பதே அவர்களின் இலக்கு எனவே தான் பலகீனமான தேசங்களில் உள்ளே நுழைந்து தாக்குதல் நடத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபரை கொத்தாக தூக்கி சென்ற நிகழ்வு உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இறையாண்மை கொண்ட தேசத்தின் அதிபரை கொத்தாக தூக்க அமெரிக்கா பயன்படுத்திய 150 போர் விமானங்கள் மூலம் ராணுவ நிலைகள் தாக்கி அதிபர் மாளிகையில் உள்ளே நுழைந்து தாக்குதல் நடத்தினர். இதற்கு பிறகு இந்த நடவடிக்கை உலகம் முழுவதையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. பல நாடுகள் அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை "தன்னிச்சையானது மற்றும் ஐ.நா. சாசனத்திற்கு எதிரானது" என்று தெரிவித்துள்ளன.

அமெரிக்கா சர்வதேச சட்டத்தை மீறியுள்ளதாகவும், தென் அமெரிக்க பிராந்தியத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் கூறியுள்ள சீனா, மதுரோவை உடனடியாக விடுவிக்க கோரியுள்ளது.

நிக்கோலஸ் மதுரா கைதுசெய்யப்பட்டு அமெரிக்கா கொண்டு போகப் பட்டார். அமெரிக்கா சர்வதேச சட்டத்தை மீறியுள்ளதாகவும், தென் அமெரிக்க பிராந்தியத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் கூறியுள்ள சீனா, மதுரோவை உடனடியாக விடுவிக்க கோரியுள்ளது. அதேசமயம் , அனைத்துப் பிரச்னைகளும் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழ் தீர்க்கப்பட வேண்டும் என்று பாகிஸ்தான் கூறியது .வெனிசுவேலாவின் இறையாண்மையை உறுதி செய்ய போப் லியோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் இரண்டாவது பதவிக்காலம், அவரது வெளியுறவுக்கொள்கையின் லட்சியங்களால் வடிவமைக்கப்பட்டு வருகிறது.

வெனிசுவேலா அதிபர் மற்றும் அவரது மனைவியை அந்நாட்டின் தலைநகர் கரகாஸில் இருந்து ஓர் அதிரடி இரவு நேரத் தாக்குதல் மூலம் கைது செய்ததன் வழியாக, வெனிசுவேலாவுக்கு எதிராக விடுத்த எச்சரிக்கைகளை டிரம்ப் நிஜமாக்கியுள்ளார்.

இந்த நடவடிக்கை குறித்து விவரிக்கும்போது, டிரம்ப் 1823-ஆம் ஆண்டின் "மன்றோ கோட்பாட்டையும்", மேற்கு அரைக்கோளத்தில் (வட மற்றும் தென் அமெரிக்க கண்டங்களை உள்ளடக்கிய பகுதி) அமெரிக்காவின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தும் அதன் வாக்குறுதியையும் மீண்டும் கையில் எடுத்தார். மேலும், அதற்கு "டான்றோ கோட்பாடு" என்று மறுபெயரிட்டார்.

இதற்கிடையே வெனிசுவேலாவில் அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கையை ரூபியோ நியாயப்படுத்தினார். இந்த நடவடிக்கையால் தென் அமெரிக்க நாடான வெனிசுவேலாவுடன் அமெரிக்கா போரில் ஈடுபட்டுள்ளது என்று அர்த்தமல்ல என்று அவர் அழுத்தமாகக் கூறினார்.

"நாங்கள் போதைப்பொருள் கடத்தல் அமைப்புகளுக்கு எதிராகப் போரில் ஈடுபட்டுள்ளோம். அது வெனிசுவேலாவிற்கு எதிரான போர் அல்ல," என்று ரூபியோ ஞாயிற்றுக்கிழமை காலை என்பிசியின் "மீட் தி பிரஸ்" நிகழ்ச்சியில் கூறினார்.

வெனிசுவேலா "சரியான முடிவுகளை" எடுக்கவில்லை என்றால், "எங்கள் நலன்கள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய அமெரிக்கா பலவிதமான அழுத்தங்களைப் பிரயோகிக்கும்" என்றும் வெளியுறவுத்துறை செயலாளர் சிபெஸிடம் தெரிவித்தார்.

அமெரிக்கா வெனிசுவேலாவின் எண்ணெய் மீது விதித்துள்ள "தனிமைப்படுத்துதல்" நடவடிக்கையும் இதில் அடங்கும் என்று அவர் கூறினார்.

"அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை வைத்து நாங்கள் அனைத்தையும் தீர்மானிப்போம், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை நாங்கள் பார்ப்போம்," என்று அவர் மேலும் கூறினார்.

வெனிசுவேலாவில் அமெரிக்க நடவடிக்கைக்கு முன்னதாக அமெரிக்க நாடாளுமன்ற அனுமதி ஏன் கோரப்படவில்லை என்று கேட்டபோது, "இது ஒரு ஆக்கிரமிப்பு அல்ல என்பதால் அதற்கு தேவையிருக்கவில்லை" என்று ரூபியோ ஏபிசியிடம் கூறினார்.

இது போன்ற ஒரு நடவடிக்கை பற்றி நாடாளுமன்றத்திற்கு தெரிவிக்க முடியாது, ஏனெனில் "தகவல் கசிந்துவிடும்" என்று அவர் மேலும் கூறினார்.

அமெரிக்க ஊடகங்களிடம் பேசிய ரூபியோவிடம், ரோட்ரிக்ஸை வெனிசுலாவின் சட்டபூர்வமான அதிபராக அமெரிக்கா அங்கீகரிக்கிறதா என்று கேட்கப்பட்டது.

"இது சட்டபூர்வமான அதிபரைப் பற்றியது அல்ல", ஏனெனில் இந்த ஆட்சியைச் சட்டபூர்வமானதாக அமெரிக்கா அங்கீகரிக்கவில்லை என்று அவர் பதிலளித்தார்.

அதேநேரத்தில் தற்போது நிலையில் அமெரிக்கா சர்வதேச நாடுகள் முழுமையாக தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அரக்கத்தனமான திட்டமிடல் வாயிலாக ஒவ்வொரு தேசமாக அதாவது வெனிசூலா மாடலாக அரங்கேற்றம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்பதுதான் சர்வதேச நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவில் எழுந்துள்ள கவலையாக இருக்கிறது.

அதேநேரத்தில் ஈரானின் உச்ச தலைவர் அலி கமேனி, ஆப்கானிஸ்தான் தாலிபானின் தலைவர் ஹிபதுல்லா அகுன்சாடா. எந்தவொரு அமெரிக்க நடவடிக்கையையும் தவிர்க்க அகுன்சாடா காந்தஹாரில் தலைமறைவாகிவிட்டார். இதற்கிடையில், மெக்சிகன் ஜனாதிபதி ஏற்கனவே 10 பெண் பாதுகாப்பு காவலர்களை பாதுகாப்புப் பணியமர்த்தியுள்ளார்.

கொலம்பியாவின் ஜனாதிபதி அமெரிக்க நடவடிக்கையை கொரில்லா பாணியில் எதிர்த்துப் போராடுவதாக பகிரங்கமாக அறிவித்துள்ளார். எந்தவொரு விரும்பத்தகாத சம்பவத்தையும் தடுக்க அவர் ஆயுதங்களையும் எடுத்துச் செல்வார். ஈரானின் உச்ச தலைவர் ஒரு பிளான் பி- ஐ கூட தயாரித்ததாகக் கூறப்படுகிறது. அமெரிக்காவிடம் இருந்து தப்பிக்க அயதுல்லா அலி கமேனி மாஸ்கோவிற்கு தப்பிச் செல்லக்கூடும் என்கிற செய்தியை டைம்ஸ் நாளிதழ் செய்தியாக வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வெனிசுலாவில் அமெரிக்க நடவடிக்கையைத் தொடர்ந்து ஈரானின் உச்ச தலைவரான அயதுல்லா அலி கமேனியும் அதிக விழிப்புடன் இருக்கிறார். கமேனி வலி-இ-அமர் படை என்று அழைக்கப்படும் பிரிவு-1 ஆல் பாதுகாக்கப்படுகிறது. இது ஈரானின் மோசமான இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் மிகவும் உயரடுக்கு, ரகசிய பிரிவாகும். இந்தப் பிரிவு 1980களின் நடுப்பகுதியில் நிறுவப்பட்டது. இன்று சுமார் 12,000 உயர் பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்டுள்ளது.

அமெரிக்கா ஒரு நடவடிக்கையைத் தொடங்கினால், கமேனி ரஷ்யாவிற்கு தப்பிச் செல்லக்கூடும் என்ற பேச்சு உள்ளது. தி டைம்ஸ் பத்திரிகையின் படி, கமேனி மாஸ்கோவிற்கு பயணம் செய்வது குறித்து பேச்சு உள்ளது. இருப்பினும், ஈரான் இதை அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தவில்லை.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக தன்னை அடையாளம் காட்டி கொண்ட அமெரிக்காவும் அதன் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஒட்டு மொத்த அமெரிக்காவுக்கு வரலாற்றில் கருப்பு பக்கத்தை துவங்கி வைத்து விட்டார் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது. தன்னை தன்னுடைய மக்களை நேசிக்கும் எந்தவொரு தேசமும் பிற தேசங்கள் மீது அடக்குமுறை ஏவுவதை மனித உரிமைகள் மீறல்கள் வெளிப்பாடு அடிப்படையில் தான் அமையும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அமெரிக்கா அதே பாணியில் தான் சர்வதேச அளவில் மிகவும் தரம் குறைந்த நிலையில் கீழ் இறங்கி மோசமான அரசியல் விளையாட்டுகளை அரங்கேற்றம் செய்து வருவதைக் நாம் அனைவரும் காண கூடியதாக உள்ளது.

அதே சமயம் ஈரான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன போர் பதட்டத்தை அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளியான இஸ்ரேல் தொடங்கி வைத்துள்ளது. இந்த இரண்டு நாட்டு தலைவர்களும் தங்களை யூதர்கள் என்றே அழைத்து கொள்ளும் வகையில் செயற்பட்டு வருவதைக் காணலாம்.

வெனிசுவேலா வை தொடர்ந்து தென் அமெரிக்கா நாடுகளான மெக்சிகோ, கொலம்பியா, கியூபா நாடுகளில் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன பதட்டம் தொற்றிக் கொள்ளும் வகையில் அமெரிக்கா தனது நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கிரீன்லாந்து அந்த வகையில் தப்பவில்லை என்பதை நாம் எடுத்துக் கொள்ள முடிகிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், கிரீன்லாந்து தங்களுக்குத் தேவை என்று பல காலமாகவே சொல்லி வருகிறார். அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே அமைந்துள்ள முக்கியமான நிலப்பரப்பாக இருப்பதால் அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பிற்கு கிரீன்லாந்து முக்கியமானதாக இருக்கும் என டிரம்ப் கருதுகிறார். இதன் காரணமாகவே பல ஆண்டுகளாக இது தொடர்பாகப் பேசி வருகிறார்.

ஆர்க்டிக் பகுதியில் அமைந்துள்ள கிரீன்லாந்தைத் தனது கண்ட்ரோலில் கொண்டு வர டிரம்ப் தரப்பு பல்வேறு ஆப்ஷன்கள் குறித்து தீவிரமாகப் பரிசீலிப்பதாக வெள்ளை மாளிகை உறுதிப்படுத்தியுள்ளது. அமெரிக்க ராணுவத்தைப் பயன்படுத்துவதும் கூட ஒரு ஆப்ஷனாகவே இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆர்க்டிக் பகுதியில் அதிகரித்து வரும் புவிசார் அரசியல் போட்டியைக் காரணமாக எப்படியாவது கிரீன்லாந்தை அமெரிக்கா கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும் என்பதில் டிரம்ப் எந்தளவுக்கு உறுதியாக இருக்கிறார் என்பதையே இது காட்டுகிறது.

சுமார் 57,000 மக்கள் தொகை கொண்ட கிரீன்லாந்து, டென்மார்க் நாட்டின் கீழ் இருக்கும் ஒரு தன்னாட்சி கொண்ட பிரதேசமாகும். அமெரிக்காவுடன் இணைக்கும் யோசனையை கிரீன்லாந்து மக்கள் தொடர்ந்து நிராகரித்தே வருகிறார்கள். அந்தத் தீவு விற்பனைக்கு இல்லை என்று டென்மார்க்கும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. ஆனால், டிரம்ப் தனது முடிவில் பிடிவாதமாகவே இருக்கிறார்.

கிரீன்லாந்தை வாங்கும் டிரம்ப்பின் முடிவுக்கு நேட்டோ தலைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தாலும், டிரம்ப்பின் ஆர்வம் குறையவில்லை என்று வெள்ளை மாளிகை அதிகாரி கூறினார். டிரம்ப் பதவிக்காலம் 3 ஆண்டுகள் இருக்கும் நிலையில், கடைசி வரை இதை முயல்வார் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது போன்ற அமெரிக்கா நடவடிக்கைகளை ரஷ்ய, சீனாவை தவிர்த்து ஐரோப்பா மற்றும் அதன் கூட்டாளிகள் இன்னும் கடுமையாக கண்டிக்காமல் இருப்பது சர்வதேச அரசியல் களத்தில் ஆரோக்கியமான செயல் அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போது ஏற்பட்டுள்ள சர்வதேச கொதிநிலை குறிப்பாக ரஷ்யா உக்ரைன் போர் முடிவுக்கு வரதா நிலையில் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக தொடருகிறது. அதேநேரம் மத்திய கிழக்கு மத்தியில் ஈரான், இஸ்ரேல் இடையே போர் தவிர்க்க முடியாத ஒன்றாக தற்போது மாறி வருவதும் உலகிற்கு மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

இதற்கிடையே அமெரிக்க ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்திகளின்படி, தனது நிபந்தனைகளைப் பின்பற்றினால் மட்டுமே தங்கள் சொந்த இருப்புக்களில் இருந்து அதிக எண்ணெய் தோண்ட அனுமதிக்க முடியும் என்று வெனிசுலாவிற்கு ட்ரம்ப் நிபந்தனை விதித்துள்ளார். அதன்படி, "முதலில் சீனா, ரஷ்யா, ஈரான் மற்றும் க்யூபாவை வெனிசுலாவிலிருந்து வெளியேற்றி பொருளாதார உறவுகளை துண்டிக்க வேண்டும். இரண்டாவதாக, எண்ணெய் உற்பத்தியில் அமெரிக்காவுடன் பிரத்தியேகமாக கூட்டு சேரவும், கனரக கச்சா எண்ணெயை விற்பனை செய்வதில் அமெரிக்காவிற்கு சாதகமாகவும் வெனிசுலா ஒப்புக் கொள்ள வேண்டும்" என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதாம். சீனா நீண்ட காலமாக வெனிசுலாவுடன் நெருக்கமாக இருந்து வருகிறது, மேலும் அதன் மிகப்பெரிய எண்ணெய் வாங்குபவராகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அமெரிக்க மதிப்பீடுகளின்படி, கராகஸ் அதன் எண்ணெய் இருப்புக்களை விற்காவிட்டால், நிதி ரீதியாக திவாலாவதற்கு இன்னும் சில வாரங்கள் மட்டுமே உள்ளதாக கூறப்படுகிறது. எனவே, வேறு வழியின்றி கையிருப்பில் உள்ள எண்ணெயை அமெரிக்காவிற்கு விற்க வெனிசுலாவிற்கு நிர்பந்தம் ஏற்படுத்தப்படுகிறது. இதனிடையே, சந்தை விலையில் 50 மில்லியன் பேரல்களை அமெரிக்காவிற்கு அனுப்ப வேண்டும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதனிடையே, அமெரிக்காவின் திட்டம் வெனிசுலாவின் எண்ணெயைக் கட்டுப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டது என்பதை, ட்ரம்புக்கு நெருக்கமான அதிகாரிகள் வெளிப்படையாகவே பேச தொடங்கியுள்ளனர்.

அமெரிக்கா தற்போது ஜனநாயக நிலைகளில் இருந்து முழுமையாக மாறி தன்னை சர்வாதிகார சக்தியாக உலகில் நிலைநிறுத்தும் வகையில் செயல்பட்டு வரும் நிலையில் இதன் விளைவுகள் மிகவும் மோசமான ஒன்றாக அமையும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.. இது எப்போது எந்த நிலையில் நடக்கும் என்பதை காலம் தான் முடிவு செய்யும் என்பதே யதார்த்தமான உண்மை நிலையாகும்.



# வாழ்க்கையை கட்டியெழுப்பும் உறுதியும், நம்பிக்கையும் கிடைக்கும் தருணமாக புத்தாண்டு அமையட்டும்

## அமேசன் கேம்பஸின் முகாமைத்துவ பணிப்பாளர் கல்வியலாளர் இல்ஹாம் மரைக்கார்



இயற்கை பேரழிவுகள் ஏற்படுத்திய துயரங்களும், இழப்புகளும் மனித மனங்களை ஆழமாக பாதித்த இந்த காலகட்டத்தில், அவற்றை தாண்டி மீண்டும் வாழ்க்கையை கட்டியெழுப்பும் உறுதியும் நம்பிக்கையும் அனைவருக்கும் கிடைக்க வேண்டிய தருணமாக இந்த புத்தாண்டு அமையட்டும் என்று அமேசன் கல்லூரி மற்றும் அமேசன் கேம்பஸின் முகாமைத்துவ பணிப்பாளர் கல்வியலாளர் இல்ஹாம் மரைக்கார் தெரிவித்துள்ளார்.

2026 புது வருட வாழ்த்து செய்தியிலேயே இதனை அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்த வாழ்த்துச் செய்தியில்,

இழப்புகள் கற்றுத் தந்த பாடங்களை மனதில் கொண்டு, வலி கடந்த அனுபவங்களை வலிமையாக மாற்றி, ஒற்றுமை, அன்பு, மனிதநேயம் ஆகியவை சமூகத்தின் அடையாளமாக திகழ, புதிய வாழ்வின் வாசலைத் திறக்கும் ஆண்டாக இந்த புத்தாண்டு உருவாகட்டும்.

துன்பங்களால் சோர்ந்த மனங்களுக்கு ஆறுதலையும், எதிர்காலம் குறித்த அச்சங்களைத் தாண்டி நம்பிக்கையையும், உழைப்புக்கு பயன் தரும் நாள்களையும் இந்த ஆண்டு அனைவருக்கும் வழங்கட்டும். இயற்கையுடன் இணைந்து வாழும் உணர்வோடு, ஒற்றுமையையும் பரஸ்பர அக்கறையையும் வளர்த்து,

புதிய தொடக்கங்களுக்கான அடித்தளமாக இந்த புத்தாண்டு அமைய வாழ்த்துகிறோம் என்றும் அனைவருக்கும் இனிய, அமைதியான, நம்பிக்கையூட்டும் புத்தாண்டு நல்வாழ்த்துகள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# Mini Miracles முன்பள்ளி பாடசாலை மற்றும் பராமரிப்பு நிலையத்தின் வருட இறுதி பரிசளிப்பு நிகழ்வு













Mini Miracles முன்பள்ளி பாடசாலை மற்றும் பராமரிப்பு நிலையத்தின் 8வது வருட இறுதி பரிசளிப்பு நிகழ்வுகள் அண்மையில் (ஜன. 4) ஹட்டன் ஸ்ரீபாத பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மாணவர்களின் கலை, கலாசார, விளையாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக Berendina Devolopment Service இன் பிரதிப் பொது முகாமையாளர் பீ.எம். றஹீம் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

விஷேட அதிதிகளாக ஓய்வுபெற்ற பிரதி அதிபர் தேன்மொழி கனகராஜ் மற்றும் ஹட்டன் பிராந்திய ஆங்கில நிலைய ஒருங்கினைப்பாளர் எஸ். தேன்மொழி ஆகியோர் பங்கேற்றதுடன் பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.




# சோர்வாக இருக்கும் பிள்ளைகளை உற்சாகப்படுத்துவது எப்படி?

**பயாஸா பாஸில்**

இன்றைய காலகட்டத்தில் பிள்ளைகள் பல்வேறு காரணங்களால் சோர்வாகவும் மனச்சோர்வுடனும் காணப்படுகின்றனர். கல்வி அழுத்தம், போட்டி மனப்பான்மை, பெற்றோரின் எதிர்பார்ப்புகள், விளையாட்டிற்கான நேரக் குறைவு, தொழில்நுட்ப சாதனங்களின் அதிகப்படியான பயன்பாடு போன்றவை அவர்களின் மனநிலையை பாதிக்கின்றன. இவ்வாறு சோர்வடைந்துள்ள பிள்ளைகளை சரியான முறையில் உற்சாகப்படுத்துவது பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தின் முக்கியப் பொறுப்பாகும்.

**1. பிள்ளைகளின் மனதை புரிந்துகொள்வது**

முதலில் பிள்ளைகளின் மனநிலையை புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் ஏன் சோர்வாக இருக்கிறார்கள் என்பதை கவனமாக கேட்டு அறிய வேண்டும். அவர்களின் உணர்வுகளை அலட்சியப்படுத்தாமல், பொறுமையுடன் கேட்பது அவர்களுக்கு ஒரு பெரிய ஆறுதலாக அமையும்.

**2. அன்பும் ஆதரவுமிக்க அணுகுமுறை**

பிள்ளைகளுக்கு அன்பும் பாதுகாப்பும் மிக அவசியம். தவறு செய்தாலும் கடுமையாக கண்டிக்காமல், புரிந்துகொண்டு வழிகாட்ட வேண்டும். “நீ முடியும்”, “நான் உன்னுடன் இருக்கிறேன்” போன்ற ஊக்க வார்த்தைகள் அவர்களின் நம்பிக்கையை வளர்க்கும்.

**3. ஒப்பீட்டை தவிர்ப்பது**

ஒரு பிள்ளையை மற்றொரு பிள்ளையுடன் ஒப்பிடுவது அவர்களின் மனதில் தாழ்வு மனப்பான்மையை உருவாக்கும். ஒவ்வொரு பிள்ளையும் தனித்திறன் கொண்டவர் என்பதை உணர்த்தி, அவரவர் முன்னேற்றத்தை அவரவருடன் மட்டுமே ஒப்பிட வேண்டும்.



**4. சிறிய வெற்றிகளை பாராட்டுதல்**

பிள்ளைகள் செய்த சிறிய முன்னேற்றங்களையும் பாராட்ட வேண்டும். மதிப்பெண் மட்டுமல்லாமல், முயற்சி, ஒழுக்கம், நேர்த்தி போன்ற பண்புகளையும் பாராட்டுவது அவர்களை மேலும் முயற்சிக்கத் தூண்டும்.

**5. விளையாட்டு மற்றும் ஓய்விற்கு முக்கியத்துவம்**

பிள்ளைகளின் மனச்சோர்வை குறைக்க விளையாட்டும் உடற்பயிற்சியும் மிக முக்கியம். வெளிப்புற விளையாட்டுகள், இசை, ஓவியம், கதை வாசிப்பு போன்றவை அவர்களின் மனதை மகிழ்வடையச் செய்யும்.

**6. இலக்குகளை அமைத்துத் தருதல்**

அதிகமான எதிர்பார்ப்புகளை சுமத்தாமல், அவர்களின் வயதுக்கும் திறனுக்கும் ஏற்ற இலக்குகளை அமைத்து தர வேண்டும். இலக்கை அடையும் போது கிடைக்கும் மகிழ்ச்சியே அவர்களை உற்சாகப்படுத்தும்.

**7. நல்ல முன்மாதிரி காட்டுதல்**

பெற்றோரும் ஆசிரியர்களும் தங்களது செயல்களால் நல்ல முன்மாதிரியாக இருக்க வேண்டும். வாழ்க்கையில் சவால்களை எப்படி நேர்மறையாக எதிர்கொள்வது என்பதை செயல்மூலம் கற்றுக் கொடுத்தால் பிள்ளைகளும் அதைப் பின்பற்றுவார்கள்.

சோர்வாக இருக்கும் பிள்ளைகளை உற்சாகப்படுத்துவது ஒரு நாளில் முடிவதல்ல அது தொடர்ச்சியான அன்பும் புரிதலும் கொண்ட பயணம். சரியான வழிகாட்டலும் ஊக்கமும் கிடைத்தால், எந்த பிள்ளையும் தன்னம்பிக்கையுடன் முன்னேற முடியும். பிள்ளைகளின் சிரிப்பே நமது முயற்சியின் மிகப்பெரிய வெற்றியாகும்.

# 2026 ரமழானில் முஸ்லிம் அரச உத்தியோகத்தர்களுக்கான நேர ஒழுங்கு, பெருநாள் முற்பணம் தொடர்பான சுற்றறிக்கை வெளியானது

2026 ஆம் ஆண்டிற்கான ரமழான் (நோன்பு) காலத்தில் முஸ்லிம் அரச உத்தியோகத்தர்களுக்கு தொழுகை மற்றும் மத வழிபாடுகளில் ஈடுபடுவதற்கான விசேட நேர ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

அமைச்சின் செயலாளர் எஸ். ஆலோகபண்டாரவின் கையொப்பத்துடன் (07.01.2026) திகதியிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள 03ஃ2026 இலக்க சுற்றறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரமழான் காலப்பகுதி

இம்முறை ரமழான் மாதமானது 2026 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகி, மார்ச் மாதம் 21 ஆம் திகதி முடிவடையவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. இக்காலப்பகுதியில் அரச சேவையில் உள்ள முஸ்லிம் உத்தியோகத்தர்களுக்குப் பின்வரும் நேரங்களில் தொழுகை மற்றும் மதக் கடமைகளை நிறைவேற்றத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்குமாறு நிறுவனத் தலைவர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

தொழுகை மற்றும் வழிபாடுகளுக்கான நேரங்கள்:

மு.ப. 03.30 முதல் மு.ப. 06.00 வரை

பி.ப. 03.15 முதல் பி.ப. 04.15 வரை

பி.ப. 06.00 முதல் பி.ப. 07.00 வரை

பி.ப. 07.30 முதல் பி.ப. 10.30 வரை

இந்த நேரங்களில் உத்தியோகத்தர்கள் வழிபாடுகளில் கலந்துகொள்ளக்கூடிய வகையில் வேலை நேரங்களை ஒழுங்கு செய்து கொடுத்தல் வேண்டும் எனவும், தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டும் விசேட லீவு அங்கீகரிக்கப்படலாம் எனவும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநாள் முற்பணம்

மேலும், ரமழான் பெருநாளிற்கு 14 நாட்களுக்கு முன்னதாக, தகுதியுடைய அரச சேவை, கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளில் கடமையாற்றும் முஸ்லிம் உத்தியோகத்தர்களுக்கு “விழா முற்பணம்“ (Festival Advance) வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் குறித்த சுற்றறிக்கையின் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபன தலைவர்களுக்கு இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை

## கையொப்பம் திரட்டும் எதிர்க்கட்சிகள்!



பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கான பொதுமக்களின் கையொப்பங்களைத் திரட்டும் நடவடிக்கை இன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

புதிய கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான மக்கள் எதிர்ப்பை இதன் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையிலாப் பிரேணைக்கு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சர்வஜனம் அதிகாரம் ஆகிய கட்சிகளும் ஆதரவளித்துள்ளன.

என்றாலும், எதிர்கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ், முஸலிம் கட்சிகள் இதுவரை தமது நிலைப்பாட்டை இதுவரை அறிவிக்கவில்லை. இலங்கை தமிழரசுக் கட்சி பிரதமருக்கு சேறுபூசும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்காதென அக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராசமாணிக்கம் சாணக்கியன் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, தமக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்கொள்ள தயாராக இருப்பதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தவே எம்மை மக்கள் தெரிவுசெய்தனர். அதன் பிரகாரம் எத்தகைய சவால்களை எதிர்கொள்ள தாம் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.




# வாசிப்பும் வாழ்வியலும்

வாசிப்புக்கும் வாழ்வுக்கும் நெருக்கமான உறவும் தொடர்பும் காணப்படுகிறது. பிட்டும் தேங்காய்ப் பூவும் எப்படி பின்னிப்பிணைந்ததாக வரலாறு நெடுகவும் இணைந்து வந்திருக்கின்றதோ அதுபோலத்தான் வாசிப்புக்கும் வாழ்வுக்குமான தொடர்பும் அமைகிறது. வாசிப்பை வடிவமைப்பது வாழ்வு, வாழ்வை வடிவமைப்பது வாசிப்பு. வாசிப்பது கருவறையில் இருந்து தொடங்க வேண்டும் கல்லறை வரை தொடர வேண்டும்.

“வாசிக்காதவன் அரை மனிதன்”. “வாசிப்பு மனிதனை முழுமைப்படுத்தும்” “வாசிப்பவன் வாழ்கிறான் வாசிக்க மறுப்பவன் வாழாது இருந்து இறந்து விடுகின்றான்” ”வாசிப்பதால் மட்டும் தான் தலை நிமிர்ந்து வாழ முடியும்” ”வாசிப்பே மொழி விருத்தியை உண்டு பண்ணுவதோடு பேச்சாற்றலையும் நாவண்மை யையும் மேம்படுத்தி விடுகிறது.

வாசிப்பை வேறாகவும் வாழ்வை வேறாகவும் பிரித்துப் பார்க்க முடியாத அளவு வாழ்வோடு பின்னிப்பிணைந்த ஒன்றாக வாசிப்பு காணப்படுகிறது. வாசிப்புத் தான் எங்களுடைய வாழ்வை செதுக்க கூடிய கூரான உளியாக உள்ளது. வாசிப்பு எமக்கு எப்போதும் பக்க பலமாக இருக்கும். எம்மை ஒழுங்கமைக்கும். நெறிப்படுத்தும். மனித வாழ்வின் அடிப்படை அம்சங்களாகிய அறிவுத் தேவை வாசிப்பின் வழியாகவே முழுமைப்படுத்தப்படுகிறது. மட்டுமல்ல வாசிப்பதால் அத்தேவை முழுமைப்படுத்தப்படுகின்றது என்ற இடத்தில் நின்று விடாது முழுமைப்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றது என்ற அர்த்தம் தான் தருகின்றது. ஏனென்றால் ஒரு மனிதனால் ஒரு போதும் எத்துனை யிலும் வாசித்து நிறைவு காண முடியாது. திருப்திகான முடியாது. ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு தாவித்தாவிச் செல்லக்கூடிய அளவுக்கு வாசிப்பு விரிந்து செல்கின்றது. வாசிக்கக்கூடிய விடயத்தளம் விடயப் பரப்பு துறைகள் போன்றன வலையமைப்பு போல ஒன்றுடன் ஒன்று இணைந்தாற் போலத்தான் அகல் விரி தளமாய்க் காணப்படுகிறது.

வாசிப்புக்கு பொருளும் பெறுமதியும் தரக்கூடியதாக வாழ்க்கை அமைவது போலவே வாழ்வுக்கும் பெறுமதியும் பொருளும் தரக்கூடியதாக வாசிப்பு அமைகின்றது. வாசிக்க வாசிக்க எங்களுடைய வாழ்க்கை செறிவடைகின்றது. செரிமானமடைகின்றது. எங்களுடைய சிந்தனை வளமாகின்றது. நாம் ஒவ்வொன்றையும் பார்க்கின்ற கோணங்கள் அலசுகின்ற விதம் வித்தியாசப்படுகின்றன.

வாசிக்கின்ற ஒருவரது வாழ்க்கைக் கோலமும் வாசிக்காத ஒருவரது வாழ்க்கைக் கோலமும் தெட்டத் தெளிவான வேறுபாடு கொண்டதாகத்தான் உள்ளது.

வாசிப்பை வணக்கமாக கருதச் சொல்லித் தன்னுடைய தெய்வீக கட்டளையை ஏற்படுத்துவதற்காக இறைவன் வாசிப்பை முதல் தெய்வீக கட்டளையாக போதனையாக அமைத்து வைத்திருக்கின்றான். காரணம் மனித வாழ்வுக்கு பொருள் சேர்ப்பதற்கு வாசிப்புத் தவிர வேறு எதுவுமே பயன் தராது. ஜாஹிலியா எனும் அறிவுப்பண்பாட்டு வெறுமைக்கு எதிராக அறிவொளியூட்ட வாசிப்பே வழியமைத்தது. அது உயர் வணக்கமாக ஆக்கப்பட்டது.

பிறரின் போதனைகள் உபதேசங்கள் தருகின்ற பாடங்கள் படிப்பினைகள் உணர்வுகள் அதிர்வுகளை விடவும் ஒருவர் தானாக தனியாக நின்று உட்கார்ந்து வாசித்து தன்னுடைய மொழிகள் போன்ற அனைத்தும் வாசிப்போடு தொடர்பான விடயங்களாகவே உள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒருவரிடம் ஒரே நேரத்தில் இணைகின்ற பொழுது நிச்சயம் அவருடைய உடலில் அறிவில் சிந்தனையில் ஆன்மாவில் மனவெழுச்சியில் மாற்றம் காணும். புதியதொரு தளத்தை நோக்கி நகரும். அவருடைய வாழ்க்கைக்கும் புதிய ஒளி பாய்ச்சும் எனவேதான் இறைவன் தன்னுடைய முதல் போதனையாக வாசிப்பை அமைத்து வைத்திருக்கின்றான் வாழ்வு வளம் பெற வேண்டும் என்பதற்காக வாழ்க்கை எப்படி ஒழுங்கமைத்துக்கொள்ள

இறைவன் அல்குர்ஆன் வழியாக ஆரம்பித்திருக்கின்றான் என்றால் அல்குர்ஆனிய போதனைகளை புரிந்து கொள்வதற்கு ஒருவர் வாசிக்க வேண்டும் மட்டுமல்ல வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்ளவும் இலட்சிய ரீதியான ஒரு பயணத்தை தொடரவும் வாசிப்புதான் தூணாக துணையாக நிற்கும் என்பது அல்குர்ஆனின் நிலைப்பாடு. இதில் மாற்று கருத்துக் கொள்ள எந்த இடம் பாடும் இல்லை.

அல்குர்ஆன் அருளப்பட்ட சூழலில் அறிவு வாடையற்ற பண்பாட்டு வறுமையும் வெறுமையும் கொண்ட மனிதர்கள் மிருகங்கள் போல வாழ்ந்த அக்காலத்தில் தான் மனிதர்களை மனித குணங்களோடு மாண்புகளோடு மகத்துவங்களோடு உருமாற்றுவதற்கான ஒரு தள மாற்ற வேறுபாட்டை சிந்தனையை அவதானத்தை ஒரே புள்ளியில் குவியப்படுத்தி உடலும் உணர்வும் அறிவும் இணைகின்ற ஒரு வித புத்துணர்ச்சியை பரவசத்தை புது அனுபவத்தை வாசிப்பின் வழியாகத்தான் பெற்றுக் கொள்கின்றார். இதனை இன்னொருவருக்கு கைமாற்ற முடியாது கையளிக்க முடியாது ஒருவர் அடைகின்ற உணர்கின்ற வாசிப்பு சார்ந்த புலன் இன்பம் இன்னொருவருக்கு வேறுபட்டதாக இருக்கும். அவரவர் வாசிப்பு வீழ்ச்சி எல்லை அனுபவம் அதன் பலமான ஈடுபாடுகள் அவருக்கு கிடைக்கின்ற வழிகாட்டல்கள் வாசிப்பு தொடர்பாக அவருக்கு கிடைக்க கூடிய கருத்து பரிமாறல்கள் கலந்துரையாடல்கள் வாசிக்க அவர் தெரிவு செய்கின்ற நூல்கள் நூல் ஆசிரியர்கள் தலைப்புக்கள் உள்ளடக்கங்கள்

வேண்டுமோ அதுபோல எமது வாசிப்பு பழக்கத்தையும் நாம் ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும். வாசிக்கின்ற நேரம் வாசிக்கின்ற அளவு வாசிக்கின்ற முறைமைகள் நுட்பங்கள் நுணுக்கங்கள் போன்றவற்றையும் நாம் தெரிவு செய்து கொள்ள வேண்டும். அது போல வாசிப்பதற்கான கலை சார்ந்த அறிவியல் சார்ந்த வழிகாட்டல்களையும் நாம் ஒரு சேரப்பெற்றுக் கொள்கின்ற பொழுது நிச்சயம் எமது வாழ்வும் வடிவமைக்கப்படும்.

உலகியல் ரீதியில் நோக்கினாலும் ஆன்மீக ரீதியில் நோக்கினாலும் நவீன கல்வி புலத்தில் நின்று நோக்கினாலும் வாசிப்பு எப்பொழுதும் எமது வாழ்வை எமக்கே வசப்படுத்தி தருகின்ற பலப்படுத்தி வளப்படுத்தி தருகின்ற ஓர அம்சமாகவே காணப்படுகிறது.

# அபாய அறிவிப்புகளாகவும் அனர்த்தங்கள் வரலாம்

**பகுதி -02**

**'அனர்த்தங்கள் ஓர் இஸ்லாமிய பார்வை'**

அஷ்ஷைக் பளீல் (நளீமி)

(கடந்த வார தொடர்...)

4. சிலருக்கு நேரடியான தண்டணை அனர்தங்கள் ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருந்தாலும் அல்லாஹ்வின் கோபத்தின் விளைவாகவும் அவை ஏற்படலாம் என்பதும் கசப்பான உண்மையாகும்.

இறைவனின் தூது கிடைத்தும் கூட, அதனை ஏற்காத அல்லது அதனை நடைமுறைப்படுத்தாதோர் இறை கோபத்துக்கு உள்ளாகுவர் என்பது குர்ஆன் கூறும் கருத்தாகும். அந்தவகையில், சத்தியத்தையும் அசத்தியத்தையும் தெளிவுபடுத்துவதற்கான ஏற்பாட்டை தூதுவர்கள் அல்லது பிரசாரகர்கள் செய்தும் கூட அவற்றை ஏற்காமல் மக்கள் முரண்டு பிடித்து தொடர்ந்தும் பாவச் செயல்களில் ஈடுபடும் போது இறைதண்டனை வரும்.

'நாம் (அந்த மக்களிடம்) ஒரு தூதுவரை அனுப்பாமல் அவர்களைத் தண்டிக்க மாட்டோம். (இஸ்ரா-15) என அல்லாஹ் கூறுகிறான்.

"இன்னும் ஃகாஷரூனையும், ஃபிர்அவ்னையும், ஹாமானையும் (அழித்தோம்) திடனாக, அவர்களிடம் மூஸா தெளிவான அத்தாட்சிகளுடன் வந்தார் எனினும், (அவற்றை நிராகரித்து) அவர்கள் பூமியில் பெருமையடித்து நின்றார்கள். ஆனால், அவர்கள் (அழிவிலிருந்து) தப்பித்தார்களில்லை. இவ்வாறு, நாம் ஒவ்வொருவரையும் அவரவர் செய்த பாவத்தின் காரணமாகப் பிடித்தோம் அவர்களில் சிலர் மீது கடும்புயல் மூலமாக கல்மாரியை அனுப்பினோம் அவர்களில் சிலரை பேரிடி முழக்கம் பிடித்துக் கொண்டது அவர்களில் சிலரைப் பூமியினுள் அழுந்தச் செய்தோம் அவர்களில் சிலரை மூழ்கடித்தோம் ஆனால் அல்லாஹ் அவர்களுக்கு அநியாயம் செய்வதற்காக இருக்கவில்லை அவர்கள் தமக்குத் தாமே அநியாயம் செய்து கொண்டார்கள்." (29:39,40)

"அன்றியும் தீங்கு வந்து உங்களை அடைவதெல்லாம், அது உங்கள் கரங்கள் சம்பாதித்த (காரணத்)தால் தாம், எனினும், பெரும்பாலானவற்றை அவன் மன்னித்தருள்கின்றான்."(42:30) என்ற அல்லாஹ்வின் கருத்து பாவங்களுக்கும் அனர்த்தங்களுக்குமான தொடர்பை தெளிவாகக் காட்டுகிறது.

"தங்களுடைய வாழ்க்கை வசதிகளின் செருக்கினால் (அழிச்சாட்டியம் செய்து கொண்டிருந்த) எத்தனையோ ஊ(ரா)ர்களை நாம் அழித்திருக்கிறோம் இவை யாவும் அவர்கள் வாழ்ந்த இடங்களேயாகும் அவர்களுக்குப் பின் சொற்பமான நேரம் தவிர அங்கு எவரும் வசிக்க வில்லை மேலும் நாமே (அவற்றிற்கு) வாரிசுகளாகினோம்.

(நபியே!) நம் வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கும் தூதர் ஒருவரை அவர்களுடைய தலைநகருக்கு அனுப்பி வைக்காத வரையில் எந்த ஊர்களையும் உம்முடைய இறைவன் அழிப்பவனாக இல்லை மேலும் ,எந்த ஊரையும் அதன் மக்கள் அக்கிரமக் காரர்களாக இல்லாத வரையில் நாம் அழிப்போராகவும் இல்லை." (28:58,59)

அந்தவகையில் முன்னர் வாழ்ந்த சமூகங்களுக்கு பலவிதமான தண்டனைகளை அல்லாஹ் இறக்கியுள்ளான்.

உதாரணமாக:-

1) பூமிக்குள் இழுத்தல் 2) கடும் சத்தம் 3)கடும் காற்று 4)பிரளயம் 5)உருமாற்றம்

5. அச்சுறுத்தலாக சில நிகழ்வுகள்

பாவங்களில் தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டிருப்போர் தமது பாவங்களை தொடராமல் அவற்றை விட்டு ஒதுங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக சிலபோது அல்லாஹ் சில அனர்த்தங்களை உலகில் ஏற்படுத்துவான். அவற்றின் மூலம் அவர்கள் அழிக்கப்படமாட்டார்கள். ஆனால்.அவர்கள் தொடர்ந்தும் பாவம் செய்தால் எதிர்காலத்தில் கடும் தண்டணை வரும் என இதன் மூலம் அல்லாஹ் எச்சரிப்பான்.

அல்லாஹ் கூறுகிறான்:"நாங்கள் இந்த அடையாளங்களை அச்சுறுத்துவதற்காகவே அனுப்புகிறோம்."(இஸ்ரா : 59)

இமாம் கதாதா (ரஹ்) அவர்கள் கூறினார்:" அல்லாஹ் தன் அடையாளங்களில் எவற்றை விரும்புகிறானோ அவற்றின் மூலம் மக்களை அச்சுறுத்துகிறான் அவர்கள் பாடம் படிக்க வேண்டும், அல்லது நினைவுகூர வேண்டும், அல்லது அவனிடமே திரும்ப வேண்டும் என்பதே அவனது எதிர்பார்ப்பாகும்"

"(நபியே!) உமக்கு முன்னர் இருந்த சமூகத்தாருக்கும் நாம் (நம்) தூதர்களை அனுப்பினோம் அச்சமூகத்தாரை நோயைக் கொண்டும் வறுமையைக் கொண்டும் பிடித்தோம் அவர்கள் பணிந்து வரும் பொருட்டு.நம்மிடமிருந்து அவர்களுக்கு வேதனை வந்தபோது அவர்கள் பணிந்திருக்க வேண்டாமா?"

எனவே, நோயை, வறுமையை முதலில் அவர்களுக்குக் கொடுத்து அவர்கள் அவற்றைப் பார்த்து படிப்பினை பெறுகிறார்களா என பார்ப்பான்.

ஆனால், அவர்கள் தொடர்ந்தும் தமது நிலைகளை மாற்றிக் கொள்ளாமல் இருந்ததாகவும் பின்னர் என்ன நடந்தது என்றும் பின்வருமாறு கூறுகிறான்:-

"அதற்கு மாறாக அவர்களுடைய இருதயங்கள் இறுகிவிட்டன் அவர்கள் செய்து கொண்டிருந்ததையே, ஷைத்தான் அவர்களுக்கு அழகாகக் காட்டிவிட்டான். அவர்களுக்கு நினைவூட்டப்பட்ட நற்போதனைகளை அவர்கள் மறந்துவிட்ட போது, அவர்களுக்கு (முதலில்) எல்லாப் பொருட்களின் வாயில்களையும் நாம் திறந்து விட்டோம் - பின்னர், அவர்களுக்கு கொடுக்கப்பட்டதைக் கொண்டு அவர்கள் மகிழ்ச்சியடைந்து கொண்டிருந்த வேளை (நம் வேதனையைக் கொண்டு அவர்களை திடீரெனப் பிடித்துக் கொண்டோம் அப்போது அவர்கள் நம்பிக்கை இழந்தவர்களாக ஆகிவிட்டனர். எனவே, அக்கிரமம் செய்து கொண்டிருந்த அக்கூட்டத்தார் வேரறுக்கப்பட்டனர் "எல்லாப் புகழும் உலகங்கள் யாவற்றுக்கும் இரட்சகனான அல்லாஹ்வுக்கே ஆகும்."(6:42-45)

எனவே, சிலபோது அனர்த்தங்கள் அபாய அறிவுப்புக்களாக வரலாம்.அதன் மூலம் மக்கள் படிப்பினை பெறாது போனால் பெரிய தண்டணையை அல்லாஹ் இறக்குவான்.

6 .ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு மாதிரி அமையும்

ஒரே நிகழ்வு ஒருவருக்கு ஒரு மாதிரியும் மற்றொருவருக்கு இன்னொனொருவருக்கு இன்னொரு மாதிரியும் அமையாலாம். உதாரணமாக ஒருவரை அல்லாஹ் இறக்கச் செய்வது அவருக்கு நலவாக அமையும். மற்றொருவரை இறக்கச் செய்வதன் மூலம் உலகத்துக்கு அதன் மூலம் பயன் கிட்டும். அதாவது அவரது தொல்லைகளில் இருந்து உலக மாந்தர்கள் விமோசனமடைவார்கள்.

இக்கருத்து பின்வரும் ஹதீஸில் இருந்து தெளிவாகிறது:-

இறைத்தூதர்(ஸல்) அவர்களைக் கடந்து ஒரு ஜனாஸா (பிரேதம்) கொண்டு செல்லப்பட்டது. அப்போது அவர்கள் '(இவர்) ஓய்வு பெற்றவராவார் அல்லது (பிறருக்கு) ஓய்வு அளித்தவராவார்' என்றார்கள். மக்கள் 'இறைத்தூதர் அவர்களே! ஓய்வு பெற்றவர் அல்லது ஓய்வு அளித்தவர் என்றால் என்ன?' என்று கேட்டார்கள். நபி(ஸல்) அவர்கள் 'இறை நம்பிக்கை கொண்ட அடியார் (இறக்கும் போது) இவ்வுலகத்தின் துன்பத்திலிருந்தும் தொல்லையிலிருந்தும் ஓய்வுபெற்று இறையருளை நோக்கிச் செல்கிறார். பாவியான அடியான் (இறக்கும்போது) அவனி(ன் தொல்லைகளி)டமிருந்து மற்ற அடியார்கள், (நாடு) நகரங்கள், மரங்கள் மற்றும் கால்நடைகள் ஆகியன ஓய்வு (பெற்று நிம்மதி) பெறுகின்றன' என்றார்கள். (புகாரி: 6512)

நபி(ஸல்) அவர்களின் துணைவியார் ஆயிஷா(ரலி) கூறினார்:- நான் இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் கொள்ளைநோய் குறித்துக் கேட்டேன். அப்போது இறைத்தூதர்(ஸல்) அவர்கள் என்னிடம் "அதுதான் நாடியவர்களின் மீது அல்லாஹ் அனுப்பும் வேதனையாக இருந்தது. (ஆனால்) அதை இறைநம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ் கருணையாக ஆக்கிவிட்டான்" எனத் தெரிவித்தார்கள். (புகாரி: 5734)

எனவே, அனர்தங்களால் பாதிக்கப்படும் சிலர் நல்லவர்களாகவும் மற்றும் சிலர் பாவிகளாகவும் இருப்பர் என்பதையும் நல்லவர்கள் பாதிக்கப்பட்டு அதன் போது அல்லாஹ் எதிர்பார்த்தபடி அவர்கள் நடந்து கொண்டால் அவனது மகத்தான கூலிகளைப் பெறுவர் என்பதையும் இதன் மூலம் புரியமுடியும்.

7 .சோதனைகள் அருளாக அமையும்

விபத்துக்கள், நோய்கள், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதனால் எவ்விதத்திலும் தவிர்க்க முடியாத நிகழ்வுகள் இறைவனின் அருளாகவும் பாவங்களுக்கான பரிகாரமாகவும், மறுமை ஈடேற்றத்துக்கு வழிவகுப்பவையாகவும் கருணையாகவும், தரங்களை உயர்த்தவும் காரணமாகிறன.

அல்லாஹ் கூறுகிறான்:"நாங்கள் உங்களை பயம், பசி, செல்வ இழப்பு, உயிரிழப்பு, விளைச்சல் இழப்பு ஆகியவற்றால் சோதிப்போம் பொறுமையுள்ளோருக்கு நற்செய்தி."(பகரா: 155)

இது தொடர்பாக நபி (ஸல்) அவர்கள் கூறிய சில நபி மொழிகள் இந்த உண்மையை புலப்படுத்துகின்றன.

உதாரணமாக 'உயிர்த்தியாகிகள் (ஷஹீதுகள்) ஐந்துவகைப்பவடுவர். கொள்ளை என்ற தொற்று நோயால் பாதிக்கப்பட்டு இறப்பவர், வயிற்றில் ஏற்படும் நோயினால் இறப்பவர்கள், நீரில் மூழ்கி இறப்பவர்கள், இடிபாடுகளுக்கிடையில் சிக்கி இறப்பவர்கள், இஸ்லாமிய யுத்த களத்தில் போராடி இறப்பவர்கள்.' (புகாரி: 2829)

மற்றுமொரு ஹதீஸில், தீக்காயங்களுக்கு உள்ளாகி இறப்பவர்கள், பிள்ளைப் பேறின் போது (சிசுவோடு) இறக்கும் கர்ப்பிணிப் பெண் ஆகியோரும் ஷஹீதுகள் என்றும் நபிகளார்(ஸல்) குறிப்பிட்டுள்ளார்கள். (அபூதாவூத்: 3111, நஸாயீ :1846, அஹ்மத்:23804)

அதாவது இத்தகைய எதிர்பாராத நிகழ்வுகள் பெறும்பாலும் பேரதிர்ச்சியைத் தருபவையாக அமையும். மேலும் உயிர் பிரியும் போது உடலுக்கு அதிக வலியையும் வருத்தத்தையும் கொடுக்கும். அவை அல்லாஹ்வின் நாட்டப்படி மனிதன் மீது ஏற்படுத்தப்படுவதனால் அதற்குப் பகரமாக அல்லாஹ் 'ஷஹீது' என்ற உயர் பதவியை அவனே வழங்குகிறான். இது அவனது பேரருளுக்கான சிறந்த அத்தாட்சியாகும். இப்படியான அனர்த்தங்களில் சிக்குபவர்கள் தமக்கு இறை அருளும் நற்பேறும் கியாமத் நாளில் நிச்சயமாகக் கிட்டும் என நம்பி மன நிறைவடையலாம்.

காளி இயாள் (ரஹ்): "இந்த அந்தஸ்துக்கள் அவர்களுடைய கடுமையான வேதனை மற்றும் துன்பத்தால், அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய ஒரு 'சிறப்பு' ஆகும். அத்தகைய துன்பத்தைத் தாங்கி மரணமடைந்ததால், அல்லாஹ் அவர்களுக்கு ஷஹீதுகளின் நன்மையை அளித்தான்.அல்லது, அவர்கள் மரணத்தின் வேதனையின் போது, அல்லாஹ் அவர்கள் காத்திருக்கும் பெரும் நன்மையை 'பார்க்கும்' நிலையை அடைவதால், அவர்கள் 'ஷஹீத்' என அழைக்கப்படுகிறார்கள்."எனக் கூறினார்.

மேலும் ஒரு தடவை நபி(ஸல்) அவர்கள் கொள்ளை நோய் பற்றிக் கூறுகையில், "(இறைவனின்) அடியார் ஒருவர் கொள்ளைநோய் பரவும்போது தமக்கு அல்லாஹ் எழுதிய விதிப்படியே அல்லாமல் எந்த நோயும் தம்மைத் தீண்டாது என உறுதி பூண்டவராகத் தம் ஊரிலேயே பொறுமையுடன் (நிலை குலையாமல்) இருப்பாராயின் அவருக்கு உயிர்த் தியாகிக்குக் கிடைக்கும் அதைப் போன்ற நன்மை (மறுமையில்) கிடைக்கும்." (புகாரி:5734) எனத் தெரிவித்தார்கள்.

எனவே, இங்கு அடியார்கள் தாமாகத் தேடிக் கொள்ளாத, ஆனால் அல்லாஹ் நாடி அனர்த்தங்களை, ஆபத்துக்களை அவர்கள் மீது உண்டு பண்ணும்போது இத்தகைய வெகுமதியை அவன் வழங்குகிறான். ஆனால் அந்த அனர்த்தங்களுக்கு உள்ளாகுபவர்கள் நல்லடியார்களான விசுவாசிகளாகவும் பொறுமை சாலிகளாகவும் இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகக் கொள்ளப்படும்.

பாரிய அனர்த்தங்கள் அல்லது அழிவுகள் ஒரு புறமிருக்க ஒரு முஃமினுக்கு வரும் சின்னஞ் சிறிய இடுக்கன்கள் கூட அவனுக்கு அனுகூலமானதாகவே அமையும் என்பது பின்வரும் நபிமொழி தரும் பொருளாகும்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒரு முஸ்லிமைத் தைக்கும் முள் உள்பட அவருக்கு நேரிடும் துன்பம், நோய், துக்கம், கவலை, தொல்லை, மனவேதனை ஆகிய எதுவாயினும் அதற்கு பதிலாக அவரின் பாவங்களிலிருந்து சிலவற்றை அல்லாஹ் மன்னிக்காமல் இருப்பதில்லை. "(புஹாரி:5641)

எனவே, 'யாவும் நலவுக்கே' என்ற மனோபாவத்தில் ஒரு முஃமின் இருப்பதோடு அவற்றின் போது பொறுமை காப்பது அவனது சிறு பாவங்களுக்கான குற்றப்பரிகாரமாகவும் அமைந்திவிடும்.

இக்கருத்தை நபியவர்கள் "ஒரு முஃமினான ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ உயிர்கள், சந்ததிகள், சொத்து செல்வங்கள் போன்றவற்றில் சோதனைகள் தொடர்ந்தும் உண்டு பண்ணப்பட்டால் அவர் அல்லாஹ்வை சந்திக்கும் போது அவர் மீது எவ்வித குற்றங்களும் (மாசுமறுக்களும்) இல்லாத நிலையில் தான் அவர் அல்லாஹ்வை (மறுமையில்) சந்திப்பார்." (திர்மிதி:2399,அஹ்மத்: 7859) என்றும் தெரிவித்துள்ளார்கள்.

இவற்றின் பொருள், நோய்க்கு மருந்து செய்யாமல், அனர்த்தங்களை தவிர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யாமல் அல்லாஹ்வின் விதியில் பாரத்தைப் போட்டு விட்டு வாளாதிருப்பவர்களுக்கும் இந்தப் பேறு கிடைக்கும் என்பதல்ல. மாறாக உலகின் வாழ்வாங்கு வாழ்வதற்கான தன்னாலான சகல ஏற்பாடுகளையும் செய்த போதிலும் அவை தோல்வி காணும் போது அதாவது, இறை சித்தம் யாவற்றையும் மிகைக்கும் போது மாத்திரமே இந்தப் பேறுக்கு அவர்கள் அறுகதையுடையவராவார் என்பது கவனிக்கத் தக்கதாகும். (இது பற்றிய விரிவான விளக்கம் இன்ஷா அல்லாஹ் பின்னர் வரும்)

உலக வாழ்வின் இத்தகைய தவிர்க்க முடியாததும் எதிர் பாராததுமான நிகழ்வுகள் மனித மனங்களை வெகுவாகப் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே பொறுமையாகவும் நிதானமாகவும் இருந்து மறுமையின் நிரந்தரத் தன்மையை சதாவும் மனதில் இருத்தி வாழ்பவர்கள் மறுமையில் பெறும் கூலிக்கு நிகரில்லை. 'நிச்சயமாக பொறுமையாக இருப்பவர்கள் தமக்கான கூலியை எவ்வித வரையறைகளுமின்றி நிரப்பமாகப் பெறுவார்கள்' (ஃமர் 10) என அல்லாஹ் கூறுகிறான்.

"உலகில் சோதனைகளுக்கு உள்ளானவர்களுக்கு மறுமையில் நன்மை வழங்கப்படும் போது, உலகில் ஆரோக்கியமாக (நல்ல நிலையில்) வாழ்ந்தவர்கள், "நாங்கள் உலகில் வாழும்போது எங்களுடைய தோல்கள் கத்திரிக்கோலால் வெட்டப்பட்டிருக்க வேண்டுமே!" என்று ஆசைப்படுவார்கள்"என நபி(ஸல்) கூறினார்கள். (திர்மிதீ:2402)

நபி(ஸல்) அவர்கள் இன்னொரு ஹதீஸில் கூறினார்கள்:"முஃமினின் நிலை மிகவும் ஆச்சரியமானது! அவனது அனைத்து நிலையும் அவனுக்கு நன்மையே. இது முஃமினைத் தவிர வேறொருவருக்கில்லை. அவனுக்கு நன்மை ஏற்பட்டால் நன்றி கூறுவான் .அது அவனுக்கு நலவாக அமையும் .துன்பம் ஏற்பட்டால் பொறுமை காட்டுவான் .அது அவனுக்கு நலவாக அமையும்."(முஸ்லிம் :2999)



அல்லாஹ் தன் அடியார்களை அவர்களின் ஈமான் உண்மையா என்பதைச் சோதிப்பதற்காக பரிசோதிக்கிறான். அவர்கள் அல்லாஹ்வின் கதவினை பற்றிக்கொண்டு தாழ்மையுடன் இருக்கிறார்களா என்பதை பரீட்சிக்க இவ்வாறு செய்கிறான்.

"சோதனை பெரியதாக இருக்கும் அளவுக்கு கூலி(நன்மை)யும் பெரியதாக இருக்கும். எந்த சமூகத்தை அல்லாஹ் நேசிக்கிறானோ அவர்களை அவன் சோதிப்பான். யார் (சோதனையை) திருப்தியோடு ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்களுக்கு அல்லாஹ்வின் திருப்தி கிட்டும். யார் அதிருப்தியடைவார்களோ அவர்களுக்கு அல்லாஹ்வின் அதிருப்தி கிட்டும்." (திர்மிதீ:2396, இப்னு மாஜா:4031)

மற்றொரு ஹதீஸில் ஒரு மனிதருக்கு (மறுமையில்) நன்மை செய்ய இறைவன் நாடினால் இவ்வுலகிலேயே அவருக்குரிய தண்டனையை முன்கூட்டியே அளித்து விடுவான். ஒரு மனிதருக்கு (மறுமையில்) அல்லாஹ் தீமையை நாடினால் அவருடைய பாவங்களை நிலுவையில் வைத்து நியாயத் தீர்ப்பு நாளில் கணக்குத் தீர்ப்பான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி:2396)

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் அல்லாஹ் கூறினான்: "இறைநம்பிக்கையுள்ள என் அடியார், அவருக்குப் பிரியமான ஒருவ-ரின் உயிரை நான் கைப்பற்றிவிடும்போது நன்மையை நாடிப் பொறுமை காத்தால், சொர்க்கமே அவருக்கு நான் வழங்கும் பிரதிபலனாக இருக்கும்." (புகாரி :6424)

எனவே,அல்லாஹ் எமக்கு ஏதாவது ஒரு சோதனையைத் தரும் போது அல்லது எம்மிடமிருந்து ஏதாவது ஒன்றை எடுத்துக் கொள்ளும் போது அதனை நாம் எமக்கான தண்டணையாகப் பார்க்காமல் எமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான எமது நன்மைகள் அதிகரிப்பதற்கான பாக்கியமாகவே அவற்றைக் கருத வேண்டும். அனர்த்தங்களின் போது நல்லடியார்கள் பாதிக்கப்பட்ட வேளைகளில் அவர்களும் மற்றோரும் இந்த மனோநிலையில் இருந்து பொறுமை காத்து அல்லாஹ்வின் கூலியை எதிர்பார்த்தால் இன்ஷா அல்லாஹ் அது ஈமானிய வெளிச்சத்தைத் தந்து வீணான, ஷைத்தானிய எண்ணங்களில் இருந்து யாவரையும் பாதுகாக்கும்.விரக்தி, தோல்வி மனப்பான்மை என்பன வரவே வரமாட்டாது.

(அடுத்த வாரம் தொடரும்...)



அரபாத் பஹர்தீன்

# புதுவருட முதல் போட்டியில் பாகிஸ்தானிடம் வீழ்ந்தது இலங்கை

இலங்கை அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரின் முதல் போட்டியில் சகல துறையில் பிரகாசித்த பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தொடரில் முன்னிலை பெற்றுள்ளது.
3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் பங்கேற்க சல்மான் அலி ஆஹா தலைமையிலான பாகிஸ்தான் அணி ரி20 அணி இலங்கை வந்திருக்க, இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதல் போட்டி நேற்று (7) தம்புள்ளை ரங்கிரி சர்வதேச மைதானத்தில் இரவுப் போட்டியாக இடம்பெற்றது.
இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.
இதன்படி முதலில் துடுப்பாடிய இலங்கை அணி 19.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 128 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.
போட்டியில் இலங்கை அணி சார்பில் ஜனித் லியனகே அதிகபட்சமாக 40 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.
மற்றைய எந்தத் துடுப்பாட்ட வீரர்களும் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடத் தவறியமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.
பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் சல்மான் மிர்ஷா மற்றும் அப்ரார் அஹமட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், வசீம் ஜ"னியர் மற்றும் சதாப்கான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.
பின்னர் இலங்கை அணியால் நிர்ணயிக்கப்பட்ட 129 என்ற இலகுவான வெற்றி இலக்கு நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த பாகிஸ்தான் அணிக்கு முன்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தி அசத்த 16.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை கடந்து 6 விக்கெட்டுக்களால் இலகு வெற்றியை பதிவு செய்தது.
பாகிஸ்தான் அணி சார்பில் துடுப்பாட்டத்தில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சஹிப்சதா பர்ஹான் அதிகபட்சமாக 51 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். இலங்கை சார்பில் பந்துவீச்சில் தனஞ்சய, வனிந்து மற்றும் தீக்சன ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் கைப்பற்றினர்.
போட்டியின் நாயகனாக சகலதுறையிலும் பிரகாசித்த சதாப்கான் தெரிவானார்.
மேலும் இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் 1: 0 என்ற அடிப்படையில் பாகிஸ்தான் அணி முன்னிலை பெற்றுள்ளது.
இரண்டாவது போட்டி 9ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக இந்திய முன்னாள் வீரர்



எதிர்வரும் ரி20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை முன்னிட்டு, இலங்கை அணியின் புதிய துடுப்பாட்டப் பயிற்சியாளராக இந்திய அணியின் முன்னாள் வீரர் விக்ரம் ரத்தோர் நியமிக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
விக்ரம் ரத்தோர் 2024 ஆம் ஆண்டு வரை இந்தியத் தேசிய கிரிக்கெட் அணியின் துடுப்பாட்டப் பயிற்சி யாளராகப் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். இவர் தற்போது ஐ.பி. எல் தொடரில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் உதவிப் பயிற்சியாளராகச் செயற்பட்டு வருகிறார்.
எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதி அவர் இலங்கை அணியுடன் உத்தியோகபூர்வமாக இணைந்து கொள்வார் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
எதிர்வரும் உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணியின் துடுப்பாட்ட வரிசையைப் பலப்படுத்தும் நோக்கில் இந்த நியமனம் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிகிறது.




# வங்கதேசத்தின் கோரிக்கையை புறக்கணித்தது ஐசிசி

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்களாதேஷ் அணி விளையாடும் போட்டிகளை இந்தியாவுக்கு வெளியே நடத்த வேண்டும் என்ற பங்களாதேஷ் அணியின் கோரிக்கையை ஐ.சி.சி. நிராகரித்துள்ளது.
பங்களாதேஷில் இந்துக்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்பட்டு வருவதனால் இரு நாடுகளின் உறவில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.
இதனிடையே, பி.சி.சி.ஐயின் கோரிக்கையை ஏற்று, பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் கொல்கத்தா அணிக்காக விளையாட இருந்த பங்களாதேஷ் வீரர் முஸ்தபிஜ/ர் ரஹ்மான் அணியில் இருந்து விடுவிக்கப்பட்டார்.
இந்த செயலுக்கு பங்களாதேஷ் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியதோடு மேலும், டி20 உலகக்கிண்ண தொடரில் பங்கேற்க இந்தியாவுக்கு பங்களாதேஷ் அணி வராது என்றும் தெரிவித்தது.
அதுமட்டுமில்லாமல், டி20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்களாதேஷ் அணி விளையாடும் போட்டிகளை இந்தியாவுக்கு வெளியே பொதுவான மைதானத்தில் நடத்துமாறு ஐ.சி.சி.க்கு அந்நாட்டு கிரிக்கெட் சங்கம் கடிதம் எழுதியது.
இந்த நிலையில், பங்களாதேஷ் கிரிக்கெட் சங்கத்தின் கோரிக்கையை ஐ.சி.சி நிராகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அட்டவணைப்படி, பங்களாதேஷ் அணி இந்தியாவில் தான் விளையாட வேண்டும் என்றும், அப்படி இல்லையெனில், புள்ளிகளை இழக்கநேரிடும் என்று எச்சரித்துள்ளது.
இதேவேளை ஐ.சி.சி.யிடம் இருந்து இதுபோன்ற எந்த அறிக்கையும் தங்களுக்கு வழங்கப்படவில்லை என்று பங்களாதேஷ் தெரிவித்துள்ளது.

# ஆயிரம் கோல்களை அடிக்கும் வரை ஓய்வு இல்லை கிறிஸ்டியானோ ரொனால்டோ




உதைப்பந்தாட்ட வாழ்வில் தனது 1,000 கோல்களை எட்டும் வரை ஓய்வு பெறப் போவதில்லை என்று போர்த்துக்கல் உதைப்பந்தாட்ட அணியின் தலைவரும், நட்சத்திர வீரருமான கிறிஸ்டியானோ ரொனால்டோ குறிப்பிட்டுள்ளார்.
40 வயதாகும் ரொனால்டோ, அல் அக்தூ த் அணிக்கு எதிரான போட்டியில் இரட்டை கோல் பெற்றார். இதன்மூலம் அவரது அல் நாசர் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. இந்த கோல்கள் மூலம் அவர் தனது நாட்டுக்காகவும், கழகங்களுக்காகவும் பெற்ற கோல்களின் எண்ணிக்கை 956 ஆக உயர்ந்துள்ளது.
சவூதி அரேபிய கழகமான அல் நாசரில் கடந்த 2022 ஆம் ஆண்டு இணைந்த ரொனால்டோ கடந்த ஜ"லையில் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒப்பந்தத்தை நீடித்தார். இதன்மூலம் அவர் 42 வயது வரை அந்தக் கழகத்திற்கு ஆடவுள்ளார்.
இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை டுபாயில் நடந்த உலக உதைப்பந்தாட்ட விருது விழாவில் சிறந்த மத்திய கிழக்கு வீரராக விருது வென்ற ரொனால்டோ கூறியதாவது, “தொடர்ந்து ஆடுவது கடினமாக இருந்தாலும் அதற்கான ஊக்கம் கிடைத்துள்ளது. ஆர்வம் அதிகமாக இருப்பதோடு தொடர்ந்து ஆட விரும்புகிறேன்.
எனது இலக்கு என்ன என்பது உங்களுக்கு தெரியும். நான் கிண்ணங்களையும், இலக்கங்களையும் (1,000 கோல்கள்) எட்ட விரும்புகிறேன் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். காயங்கள் ஏற்டாவிட்டால், அந்த இலக்கத்தை நான் நிச்சயம் அடைவேன்.” என்றார்.
ரொனால்டோ போர்த்துக்கல் அணிக்காக இதுவரையில் 143 கோல்களையும் ரியல் மெட்ரிட் கழகத்துக்காக 450 கோல்களையும் உட்செலுத்தி அதிக கோல்களை பெற்றவராக சாதனை படைத்திருப்பதோடு நான்கு கழகங்களுக்காக (மான்செஸ்டர் யுனைடட், ரியல் மெட்ரிட், ஜ"வான்டஸ் மற்றும் அல் நாசர்) 100 இற்கு மேல் கோல்களை பெற்ற ஒரே வீரராகவும் உள்ளார்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.